LITERARY FINDINGS

INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY RESEARCH
(UGC APPROVED)

ISSN 2278-2311

JANUARY 2017

|visit us : www.kongunadupublications.com|

KONGUNADU PUBLICATIONS
INDIA PRIVATE LIMITED

ISSN : 2278-2311
22782311

LFS

LITERARY FINDINGS

INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY RESEARCH

ISSN: 2278-2311

VOL: 6 ISSUE : 1 JANUARY-2017

Editor

Dr. P. Sathyamoorthy
Madurai Kamarajar University
Madurai.

Editorial Board

Dr. C. Thiyagarajan
Annamalai University, Chidambaram.

Dr. K. Ramesh
Thiruvalluvar University
Vellore.

Dr. S. Srinivasan
Sri Venkateshwara College,
(Delhi University)
New Delhi.

R. Chandrasekaran
Aringar Anna Arts and Science College,
Namakkal.

Dr. K. Sankaranarayanan
University of Madras
Chennai.

Dr. S. Aranganathan
Tamilnadu open University
Chennai.

Publishing Editor
Nall Natarajan (Secretary)
Kongunadu Educational Trust, Erode.

Kongunadu Publications (India) Pvt.Ltd

118,Mettur Road, Kalyan Silks Oppsite,
Erode – 638 011.
Ph: 0424 – 4562211,2263197
E-mail: kongunadupublications@gmail.com
Web: www.kongunadupublications.com

ஆசிரியர்
முனைவர் போ. சத்தியமூர்த்தி
மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்,
மதுரை.

ஆசிரியர் குழு
முனைவர் சி. தியாகராசன்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
சிதம்பரம்.

முனைவர் க. இரமேஷ்
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,வேலூர்.

முனைவர் ச. சீனிவாசன்
ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்லூரி
(தில்லி பல்கலைக்கழகம்) புது தில்லி.

இரா. சந்திரசேகரன்
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி,
நாமக்கல்.

முனைவர் கி. சங்கரநாராயணன்
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

முனைவர் சு. அரங்கநாதன்
தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
சென்னை.

முனைவர் பா. சங்கரேஸ்வரி
மதுரை காமராசர்பல்கலைக்கழகம்,
மதுரை.

பதிப்பாளர்

நல் நடராசன் (செயலாளர்)
கொங்குலேண்ட் கல்வி அறக்கட்டளை
ஈரோடு

KONGU

கொங்குநாடு பப்ளிகேஷன்ஸ் இந்தியா பி.லிட்
118, மேட்டூர் சாலை,
கல்யாண் சில்க்ஸ் எதிரில்
ஈரோடு – 638 011.
மின்னஞ்சல்:
kongunadupublications@gmail.com

GUIDLINE

LFS (LITERARY FINDINGS) a new bilingual **INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY RESEARCH** (English & Tamil) isbeing published from the house of **KONGUNADU PUBLICATIONS (INDIA) PRIVATE LIMITED**, Erode, Tamil Nadu, with **ISSN** (index in Google Scholar & DOAJ)

This journal is mainly devoted to research and scholarly views on broad issues in the field of **Arts, Science and Commerce**. The journal provides specialized opinion in the ield of **Arts & Science** and will also bring out meaningful notes and research papers. And the Articles are welcomed at the most.

LFS (LITERARY FINDINGS) accepts only electronic submissions via e-mail as attached documents (**Microsoft word only**) which **must include Name, affiliation and country in the body of your submission.** (Submission must be in single attachment) Authors are requested to follow the **MLA** style strictly while preparing the articles. Authors are also requested to include the following in the format of their articles.

· Type area on a page should of standard size A4

· Uniform font (Times Roman) may be used

· Paragraph setting may be set as 1.5 lines

· Where ever necessary chapter should begin with a brief Abstract and keywords.

· Paper Title, Author Names/Affiliations, Abstract and Keywords should be specified accordingly.

1.ORDER OF THE CONTENT

The order of the content must be as per following sequence;

1. Title Page with Authors details (Including emails and affiliations)
2. Abstract & Keywords
3. Introduction
4. Methods, if applicable / any
5. Results, if applicable / any
6. Conclusions
7. Acknowledgements, if applicable / any
8. References
9. Appendices (if applicable / any)

2.FIGURES (Line Art Drawings) AND TABLES

Figures and tables may appear printed directly in the text and should be black and white or grayscale. Figure should appear soon after the citation in the text or if it is too large at the end of the manuscript. Legends/Captions for figures A caption should be provided for each figure.

TABLES

Indent tables slightly from the left margin, if it is necessary to use the full width of the page. Tables should be kept to a minimum and be designed to be as simple as possible. Tables are to be typed double - spaced throughout, including headings and footnotes. Each table should be on a separate page, numbered consecutively in Arabic numerals and supplied with a heading and a legend. The same data should not be presented in both table and graph forms or repeated in the text.

3.REFERENCES

References text type should be 10 point (Times Roman). In the text, a reference identified by means of an author's name should be followed by the date of the reference in parentheses. When there are more than two authors, only the first author's name should be mentioned.

4.SUBSCRIPTION FEE

Annual Subscription Fee for Individuals Rs. 1500/-, Institution Rs. 2000/- , Life Subscription Fee Individuals & Institution Rs. 10000/ in India.

5.MODE OF PAYMENT

Payment can be made by DD infavour of **KONGUNADU PUBLICATIONS INDIA PRIVATE LIMITED** payable at **ERODE** and address to **KONGUNADU PUBLICATIONS (INDIA) PRIVATE LIMITED** REGD OFF: 194, KANNA COMPLEX, 2ND FLOOR, METTUR ROAD, ERODE – 638 011. Payments can also be made via net banking. **A/c Name: KONGUNADU PUBLICATIONS INDIA PVT.LTD. A/C Type: CA, A/C No:1619135000005931**, **Bank: KVB, V.Chatram, ERODE – 638 003. IFSC: KVBL0001619** and the same may be intimated.

6.SELECTION OF ARTICLES

Our eminent Editorial team will scrutinize the articles and select for LFS without any bias. On selection the authors will be intimated individually. For further clarification contact us: kongunadupublications@gmail.com

பொருளடக்கம்

1. A Study of the B.Ed Trainee's Competency in Using Discourse Markers in English **R.T. Hemalatha & *Dr. K.S. Purushothaman* 5
2. சிலம்பில் பத்தினி வழிபாடு **த. அமுதஜோதி* 10
3. நும்மின் திரிபெயர் **முனைவர் இரா.இராஜா* 14
4. பாரதிதாசனின் கற்கண்டு நாடகம் வழி மனிதமனம் **முனைவர் மு.புஷ்பரெஜினா* 21
5. செவ்விலக்கியத்தில் நாட்டுப்புறச் சிந்தனைகள் **முனைவர் க.முத்தழகி* 24
6. ஆன்மா, அறம் வேறு பற்றிய கருத்துக்களில் வளையாபதியும், மணிமேகலையும் **மா.விஜயலெட்சுமி* 27
7. திருஞானசம்பந்தர் தேவாரத்தில் முப்பொருள் உண்மைகள் **ச.உலகநாயகி* 30
8. யாழும் ஐவகை நிலங்களும் **ந. துளசி ராமன்* 34
9. நிலையாமை – நிச்சயமற்றதன் நிலை **முனைவர் சு. அரங்கநாதன்* 36
10. கண்ணகி எனும் தொன்மம் **முனைவர் ஆ. அறிவுமொழி* 41
11. நற்றிணையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பெண்களுக்கான விளையாட்டுகள் **ந. ஜனனி* 45
12. சங்க பனுவல்களில் அறிவியல் **ச. கார்த்திகேயன்* 48
13. A Pionner of Arabic Play : Sadullah Wannous **Inamul Azad* 50
14. A Preeminent Energy Consuption Approach for Data Collection in Wireless Sensor Networs **M.G.Annapoorani* 55
15. Selfish Attacks and Detection in Cognitive Radio AD- HOC Networs **K.Satheesh & *N.Murugan* 59
16. A Study on Classification Techniques in Datamining for Predication of Heart Disease **C. Usha Nandhini* 62
17. பொன்னியின் செல்வன் நாவலில் நந்தினியின் ஆளுமை **முனைவர் கோ.நிர்மலாதேவி* 66
18. அஞ்ஞாடி நாவல் காட்டும் சமூகம் **இரா.இராஜபிரபு* 69
19. விளிம்பு நிலை மனிதர்களும் தலித்தியமும் **முனைவர் கா.காந்தி* 71
20. சூஃபி மெய்ஞ்ஞானி தக்கலை பீர்முகம்மது சாகிபும் ஞானப் புகழ்ச்சியும் **முனைவர் உ.அலிபாவா* 76
21. அகநானூற்று எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் பாடல்களில் வரலாற்றுச் செய்திகள் **முனைவர் ம.சந்திரசேகரன்* 84
22. நீல பத்மநாபனின் பள்ளிகொண்டபுரம் – ஓர் மதிப்பீடு **முனைவர் அ.பிரமிளா* 91

A STUDY OF THE B.ED TRAINEES'COMPETENCY IN USING DISCOURSE MARKERS IN ENGLISH

*R.T. Hemalatha,
Research Scholar, Research and Development Centre Bharathiar University, Coimbarore – 641 046.
*Dr. K.S. Purushothaman,
Research Guide & Supervisor, (Rtd) Principle Government Arts College for Men, Krishnagiri – 635 001 .

Introduction

Connectives are linguistic devices that join words, phrases, clauses and sentences in a connected text contributing to cohesion and coherence. (diagram in p.2) They are also called discourse markers because they signal semantic relationship. S*entence connector* belongs to the inter-sentential area whereas *conjunctions* belong to the intra-sentential area. Provision of such markers promotes quick and easy comprehension leading to effective communication. Discourse markers are used 1) to initiate discourse 2) to mark a boundary in discourse (shift/partial shift in topic) 3) to preface a response or a reaction 4) to serve as a filler or delaying tactic 5) to aid the speaker in holding the floor 6) to effect an interaction or sharing between speaker and hearer 7) to bracket the discourse either cataphorically or anaphorically 8) to mark either fore grounded or back grounded information.(Muller,S. 2005)

Problem and significance

When the B.Ed trainees were asked to write lesson plans for microteaching skills such as *skill of explaining,* the investigator happened to observe more lacunae in their output. This prompted the investigator to select this topic for study.



Title of the study

Analysis of the B.Ed Trainees' Competency in Using Discourse markers in English.

Objectives of the study

1) To find out the level of B.Ed trainees' competency in the knowledge and use of discourse markers in English.

2) To find out the inadequacies and to offer corrective measures to promote their competency.

Sample for the Study

A simple random sampling technique is followed in this study. The B.Ed trainees numbering 100 from two self-financed Colleges of Education in Kalipatti and Pachal in Nammakal District formed the sample for the present study.

Tool for the study

The researcher prepared a proficiency test in discourse markers, keeping in the mind the appropriate guidelines meant for test construction and evaluation.

The investigator consulted the experienced teacher - educators and ELT experts and on the basis of their opinion, some test items were improved and included and thus the test construction was finalized. The reliability and the validity of the tool were established on the basis of the expert opinion.

Limitations of the study

The study is confined only to the sample taken from two self-financed Colleges of Education in Namakkal District. Hence the findings of the study cannot be over-generalized and considered as a reflection of the level of discourse competency among B.Ed trainees in the entire state of Tamilnadu.

Overview of the Test

S.No	Detail of Test Items	Marks
1.	Fill in the blanks in sentences with suitable discourse markes given within the brackers	1 x 5
2.	Combine the two sentences by using suitable discourse marks given within the brackers	2 x 5
3.	Use the given discourse markers in own sentences	2 x 5
4.	Rearrange the jumbled senences in a cogent and coherent order	10 x 1
5.	Read the prose passge (a paragraph) and underline the discourse	10 x 1
6.	Three eassay - type questions in about a page each a) either or type (with internal choice) b) " " " " c) " " " "	10 x 3
	Total	75

Data collection

The test was administered to the sample and their response sheets were evaluated. The obtained scores were converted into percentage for analysis and interpretation. The level of competency in the knowledge and the use of discourse markers among the B.Ed trainees is presented interms of quality level and percentage in the following table:

S.No	Qualitative level	Percentage of Marks	No. of. Sutdents	Percentage of Students %
1.	Excellent	80% and above	5	5%
2.	Very Good	60% to 79%	8	8%
3.	Good	50% to 59%	34	34%
4.	Satisfactory	40% to 49%	51	51%
5.	Unsatisfactory	Below 40%	2	2%

N = 100

The data presented in the table indicate that 8% of the sample have the competency at very good level. Then 34% of the sample have the competency at very good level.

Details of the Discourse Markers used by the Sample

S.No	Function	Options/available discourse markers	Discourse marks used	No.of Student	Per centage
1.	Addition	and, also, furthermore moreoever, in additioin, besides	and also	89 75	89% 75%
2.	Contrast	but,yet,on the contrary however, wheras, still nevertheless, on the otherhand	but	91	91%
3.	Purpose	so that, in order that	so that	49	49%
4.	Cause/ Effect	so, therefore, thus, consequently, hence, as a result, because, inconseqeunce, since	so therefore because since	76 50 71 65	76% 50% 71% 65%
5.	Temporal relationship	after, before, until, till, by the time, when, first, then, afterwards, at last, finally	after before then	75 72 61	75% 72% 61%
6.	Comparsion	similarly, likewise, than, as......as, so...........as	similarly than	49 71	49% 71%

7.	Exempli fication	forexample, namley, for instance, such as, especially, particularly that is, to illustrate	for example that is	68 50	68% 50%
8.	Refor moulation	inotherwords, otherwise, rather	in otherwords	24	24%
9.	Enume ration	first, second, finally to begin with, next	first finally next	76 61 79	76% 61% 79%
10.	Summary, Conlusion	to conclude, in brief in conclusion, in short, to sumup	to sumup	49	49%
11.	Condition	if, unless, provided that, supposing, as long as	if unless supposing	86 60 39	86% 60% 39%
12.	Concession	though, although, eventhough, evenif	though	45	45%

Findings of study

1) It is evident from the table that a large chunk of students used the following discourse markers only: *and, also, but, so that, so, therefore, because, since, after, before, then, than, for example, otherwise, first, finally, next, to sum up, if, unless, though etc.*

2)They tend to use relatively a small range of discourse markers as mentioned above, although a large spectrum of discourse markers are available for their choice and there is enough scope for their application

3) Inadequate use of discourse markers is likely to be interpreted as deficient because it mars the overall organization of the text and pragmatic meaning of the utterance. Hence it causes misunderstanding and difficulty in comprehension and hinders communicative efficiency.

Causes for the deficiency in the use of discourse markers among B.Ed trainees

1) Lack of motivation and negative attitude towards English language.

2) Translation method of teaching.

3) Examination oriented coaching.

4) Rote memorization rather than practicing the language.

5) Due to L1 interference.

6) Inadequate knowledge, exposure and language use.

Educational implications and suggestions for enhancing the level of competency

1) Discourse markers must be explicitly taught as they make an integral part of discourse, pragmatic and strategic resulting in communicative competency.

2) Students should be provided with enough opportunities to take part in the various interactive writing activities. This will not only prevent their over-use of particular pattern or variety of discourse markers but also encourage them to use varieties by selecting appropriate discourse markers from the available options.

3) While teaching writing, its better to focus on the process rather than the product. Proper guidelines must be given to the students in all the phases of writing process: planning, translating, reviewing, and monitoring.

4) Practice in writing of different types of essays such as expository, descriptive, narrative, and argumentative should be given to the students. The structure of the essay and how the paragraphs are organized in an essay as introductory paragraph, supporting paragraph and concluding paragraph, along with appropriate discourse markers that could be used in the essays etc., can be discussed.

5) The instructional strategies adopted by the teacher may incorporate the technology oriented or computer based materials and methods.

References:

1. BarnaliChetia (2013) Discourse Markers in Written English Text in a Multi lingual Setting: A Comparative study of High School English in the Schools of Assam. *ISSN 1930 - 2940 Vol. 13:9 September*.

2. Emmanuel Sharndama, C. (2013) An Analysis of Discourse Markers in Academic Report Writing: Pedagogical Implications. International *Journal of Academic Research and Reflection*: vol.1 No 3 p 15-24.

3.Krishnaswamy, N. (1975) *Modern English Grammar*. New Delhi: Macmillan.

4.MamtaAggarwal (1987) *Test Items in English Language*. New Delhi: NCERT.

5.Muller,s.(2005) *Discourse Markers in Native and Non-Native Discourse*. Jhon.Benjamins.

6. RadhakrishnaPillai, G. Rejeevan, K. &Bhaskaran, P. (1990) *Written English for You*. Chennai: Emerald Publishers.

7. Thekra Mohamed Abdhullah Yehia (2015) Use of Discourse Markers: A Case study of English writing by Yemeni students, *Language in India* ISSN 1930 – 2940 Vol.15:6 June.

சிலம்பில் பத்தினி வழிபாடு

*த. அமுதஜோதி, முனைவர் பட்ட ஆய்வாளர், அ.வீ.வா. புட்பம் கல்லூரி (தன்னாட்சி), பூண்டி, தஞ்சாவூர்-613 503.

தமிழ்மொழியில் தோன்றிய காப்பியங்களுள் முதன்மையானதும், கற்புடைய பெண்கள் வாழ்க்கையை முதன்மையாக்கிக் காட்டுவதும் சிலப்பதிகாரமாகும். இக்காப்பியத்தைச் சேரநாட்டைச் சார்ந்த இளங்கோவடிகள் இயற்றியுள்ளார். ஆணாதிக்கம் மிகுந்த காலக்கட்டத்தில் பெண்ணிற்கு முன்னுரிமை நல்கி, உலகமெல்லாம் போற்றும் பத்தினி தெய்வமாக கண்ணகியை முதன் முதலாக அவரே அறிமுகப்படுத்தியுள்ளார். அவ்வகையில் கண்ணகியை பத்தினி தெய்வமாக, காளியாக, கொற்றவையாக, மாரியம்மனாக வழங்கி வழிபட்டு வந்த செய்திகளைப் பற்றிக் காண்போம்.

வழிபாடு

இறைவனுக்கென்று கோயில் எடுத்து வழிபடுதல் மக்கள் பலரும் செய்யும் ஒன்றாகும். கோயில் என்பதனை கோ இல் – எனப் பிரிப்பர். கோ – கடவுள், இல் – தங்குமிடம். இறைவன் நம் பொருட்டு வந்து தங்குகின்ற இடம் எனவும் பொருள் கூறுவர்.

வழிபாடு என்பது மன நிம்மதிக்காக ஏற்பட்ட ஒன்று என்றே கூறலாம். "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற முதுமொழிக்கு ஏற்ப ஆலயம் சென்று வழிபடுவதை மக்கள் தம் வாழ்வில் இன்றியமையாத ஒன்றாக மேற்கொண்டு வருகின்றனர். வழிபாடு என்ற சொல்லிற்கு தமிழ்ப் பேரகராதி, வழியிற் செல்லுகை, பின்பற்றுகை, வணக்கம், பூசனை, வழக்கம், சமயக் கோட்பாடு என்று பொருள் தருகின்றது. இத்தகைய வழிபாடு சிலம்பில் பலவகையில் அமைந்துள்ளது. அவையாவன, இயற்கை வழிபாடு, அருக வழிபாடு, கொற்றவை வழிபாடு, சக்தி வழிபாடு, பத்தினி வழிபாடு என்பவையாகும்.

காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல்
சீர்த்தகு சிறப்பின் பெரும்படை வாழ்த்தல்என்று
இம்மூன்று வகையிற் கல்லொடு புணர (தொல்.புறத்.5)

என்று தொல்காப்பியர் வழிபாடு பற்றி கூறியுள்ளார். இதனை அடிப்படையாக வைத்து கண்ணகிக்கு பத்தினிக் கோட்டம் அமைக்கும் முறை விளக்கப்பட்டுள்ளது. காட்சி என்பது கற்கள் நிறைந்த பகுதியிலிருந்து குறிப்பிட்ட நல்ல ஒரு கல்லினைக் கண்டு தெரிவு செய்தலாகும். கால்கோள் என்பது தேர்ந்தெடுத்த கல்லினைக் கொண்டு வந்து வழிபாட்டுக்கு உரிய செயலைத் தொடங்குவதாகும். நீர்ப்படை என்பது கல்லினை நீரில் இட்டு வைத்தோ, நீர் விட்டோ தூய்மை செய்தலாகும். நடுகல் என்பது கல்லிலே போர் மறவனது பெயரும் பெருமையும் பொறித்து அவன் இறந்த இடத்திலோ அல்லது அவனது உடலைப் புதைத்த இடத்திலோ நட்டு, மயில் பீலியும் மாலையும் அணிவித்து ஊன்றச் செய்தலாகும். பெரும்படை என்பது இக்காலத்தில் கோயிலில் செய்யும் குடமுழுக்கு போன்ற சிறப்புகளைச் செய்து படையல் போட்டுப் பெருமைப்படுத்துதலாகும். வாழ்த்தல் என்பது நட்ட கல்லைக் கடவுளாக மதித்து வணங்கி வாழ்த்துதலாகும். இவ்வாறாக செத்துப் போன வீரமறவர் தெய்வமாக்கப்பட்ட வரலாறு தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது.

ஆடவர்கள் வீரத்தில் மிகுந்திருந்ததால் அவர்களுக்கு நடுகல் நாட்டினர். அதனை வழிபட்டனர். தவமுனிவர்கள் மறைந்த போது அவர்களுக்குக் கோயில் கட்டி, கடவுளாக்கினர். ஆனால் பெண்களுக்கென்று சிறப்புடைய நிலையில் கோயில்களோ, வழிபாடுகளோ இல்லை. இந்நிலையில் இளங்கோவடிகள் புதியதொரு சகாப்தத்தை ஏற்படுத்தினார். அவை பத்தினி வழிபாடாகும்.

பத்தினி

'பத்தினி' என்ற சொல் வடமொழியிலிருந்து தமிழில் வந்துள்ளது. பத்தினி என்ற சொல்லிற்கு வடமொழி ஆங்கில அகராதி " மனைக்கு எஜமானி" (Master of the house lady) அல்லது (To partake of the share) என்று பொருள் தருகிறது. வடமொழியில் 'பத்தினி' என்ற சொல்லிற்கு நேர் தமிழ்ச் சொல்லாகக் 'கிழத்தி' என்ற சொல் தொல்காப்பியத்தில் பல நூற்பாக்களில் ஆளப்பட்டுள்ளது. இதனை,

இடித்துவரை நிறுத்தலும் அவர தாகுங்

கிழவனுங் கிழத்தியும் அவர்வரை நிற்றல்

(தொல்.பொருளியல்.153)

மேலும்,

தற்புகழ் கிளவி கிழவன்முற் கிளத்தல்

எத்திறத் தானும் கிழத்திக் கில்லை

(தொல்.பொருளியல்.178)

என்னும் நூற்பாக்களின் மூலம் அறிந்து கொள்ளமுடிகின்றது.

பின்னால் தோன்றிய நூல்கள் கண்ணகியை காளியின் அவதாரமாக்கின. காளி கண்ணகியாகப் பிறந்து பலவியத்தகு செயல்களைச் செய்யினும் அவற்றைக் காளியின் செயல்களாகக் கொள்ளவில்லை. மண்ணுலகில் வாழ்ந்த பெண்ணொருத்தியின் பத்தினி செயல்களாகவே கருதின. அப்பத்தினி தெய்வத்திற்கு கோயில் எடுத்து வழிபாடு செய்த சிறப்பினை இரட்டைக் காப்பியங்கள் வாயிலாக அறியமுடிகிறது.

காளியின் தோற்றம்

ஒற்றைச் சிலம்புடன் சினங்கொண்ட கண்ணகியை கண்ட வாயிற் காவலன், பாண்டியனிடம் கண்ணகியை அறிமுகப்படுத்துவது குறித்தற்குரியது.

அடர்த்தெழு குருதி யடங்காப் பசுந்துணிப்

. . . .

. . . .

செற்றனள் போலும் செயிர்த்தனள் போலும்

எனும் பகுதி கதைப் பாடல்களில் முக்கியம் பெறுகிறது. பாமரன் ஒருவனின் பார்வையில் கண்ணகி, கொற்றவையாக, பத்திரகாளியாக, காளியாக, துர்க்கையாகத் தெரிந்தாள். கதைப் பாடல்களை எழுதியவர்கள் கண்ணகியைக் காளியின் அவதாரமாக எழுதியமைக்கு இப்பகுதி மூலமாக அமைகிறது.

பத்தினி தெய்வம்

கவுந்தியடிகள் அருகனைத் தவிர வேறொரு கடவுளை வழிபாடு செய்ததில்லை. அப்படிப்பட்டவர் கற்புக்கடம்பூண்ட இத்தெய்வமல்லது பொற்புடைத் தெய்வம்தான் காணவில்லை என்று பாராட்டுகிறார். மேலும்,

வானம் பொய்யாது வளம் பிழையறியாது

நீனில வேந்தர் கொற்றம் சிதையாது

பத்தினிப் பெண்டிர் இருந்த நாடென்னும்

அத்தகு நல்லுரை அறியாயோநீ

(அடைக்கலக்காதை, 135-140)

என்று கண்ணகியை முதன் முதலாகப் 'பத்தினி' என்று உலகிற்கு அறிமுகப்படுத்துகிறார். தமிழ் இலக்கியத்தில் முதன் முதலாகப் பத்தினி என்ற சொல் ஆளப்படுவதும் இக்காதையில்தான்.

கணவனையன்றிப் பிறரைத் தொழாத கற்புடைய மகளிர் பத்தினிகளாக நினைக்கப்பட்டனர். இதனையே வள்ளுவர்,

தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்

பெய்யென பெய்யும் மழை (குறள்.55)

என்று கூறியுள்ளார்.

பத்தினி வழிபாடு பரவுதல்

கண்ணகியின் தெய்வத்தன்மையைச் சாலினி,

ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய

திருமா மணி எனத்தெய்வ முற்று உரைப்ப

(வேட்டுவவா, 49-50)

என தெய்வம் ஏறப்பெற்று, கண்ணகியை ஒளயைத் தரும் தெய்வமகள் என்று போற்றித் துதிக்கும் செய்தி கூறப்பட்டுள்ளது.

இதன் மூலமாக, கண்ணகி பின்னால் கொங்கு நாடு, குடமலை நாடு, தமிழ்நாடு பிறநாடாகிய இலங்கை ஆகிய நாட்டு மக்களால் புகழப்படப் போவதை முன்னதாகவே குறிப்பிடுகிறாள். கவுந்தியடிகள் கண்ணகியை இத்தெய்வம் என நேராக வெளிப்படையாகக் கூறுகின்றார்.

கண்ணகி, கோவலன் வரலாற்றைக் கேட்ட சேரன் தன் மனைவியிடம் பாண்டிமாதேவி, கண்ணகி ஆகிய இருவால் வியத்தகு நலத்தோர் யார் எனக் கேட்க, அவளோ,

காதலன் துன்பங் காணாது கழிந்த

மாதரோ பெருந்திரு வுறுக வானத்து

அத்திறம் நிற்கநம் அகல் நாடுஅடைந்தஇப்

பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டுமென

(காட்சிக்காதை, 109-112)

கூறிப் பத்தினி வழிபாட்டிற்கு வழிவகுக்கிறாள்.

பத்தினிக் கோட்டம் உருவாக்கும் முயற்சியில் பலர் ஈடுபடுகின்றனர். கற்பில் சிறந்த மாபெரும் பத்தினிக்கு சிலை வடிப்பதற்கு கல் தரவில்லையெனில் போர் புரிவோம் என்று கூறி சேரமன்னன் அதை நிறைவேற்றவும் செய்கிறான் என்பதை பின்வரும் பாடலடிகள் உணரத்துகின்றன.

கடவு யெழுதவோர் கற்கே யாயின்

ஓங்கிய இமயத்து கற்கால் கொண்டு

(கால்கோள்.151-152)

சேரன் செங்குட்டுவன் கண்ணிகியின் விழாவில் நல்லணிக் கோலம் கண்டு வியக்கிறான். விழாவிற்கு அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னர், பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னர், குடகுக் கொங்கர், மாளுவ வேந்தர், கடல்சூழ்ந்த இலங்கை கயவாகு வேந்தன் ஆகியோரும் வந்து பத்தினிக் கடவுளை வணங்குகின்றனர்.

எந்நாட் டாங்கண் இமய வரம்பனின்

நன்னாட் செய்த நாளணி வேள்வியில்

வந்தீ கென்றே வணங்கி

(வரந்தருந்.161-163)

என்று வேண்டுகின்றனர். அப்போது "தந்தேன் வரம்" என்று கண்ணகி வரம் அருள்கிறாள்.

மூவேந்தரும் தங்கள் நாட்டில் கண்ணகிக்கு விழா எடுத்துப் பயன் பெற்றதை சிலப்பதிகாரம் கூறுகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தொடங்கிய இப்பத்தினி வழிபாடு பல்வேறு நாடுகளில் பரவியது. இலங்கையில் மட்டும்தான் கண்ணகி என்ற இயற்பெயரோடு 'கண்ணகி தெய்யோ' என்ற பெயரில் வழிபாடு நடக்கிறது.

தமிழகத்தில் கண்ணகி வழிபாடு

கண்ணகியை தமிழகத்தில் மாரியம்மன், வட்டபுரியம்மன், பாஞ்சாலியம்மன், செங்களாச்சியம்மான் என்ற பெயர்களில் வழிப்பட்டு வருகிறார்கள்.

'ஒற்றை முலைச்சி' என்ற தேவதை கேரளத்தில் மலையன்மாரிடமும் பிற இனத்தாரிடையேயும் பயபக்தியுடன் வணங்கப்படும் தெய்வமாக உள்ளது. இந்த ஒற்றை முலைச்சியை 'யட்சி தேவதை' என்றும் மலையில் வாழ்பவள் என்றும், 'பாலை மரத்தடியில் நிற்பவள்' என்றும் கருதுகின்றனர். இந்த ஒற்றை முலைச்சியே திருமாவுண்ணியாக இருக்கலாம் என்றும், சிலப்பதிகார காவியத்திற்கு கருவாக,

எரிமருள் வேங்கை கடவுள் காக்கும்

. . . .

ஒருமுலை இழந்த திருமாவுண்ணி

(நற்றிணை, 216)

எனும் பாடல் வரிகள் அமைந்துள்ளதாகவும் கூறுவர். சங்ககாலத்து ஒற்றை முலைச்சியான திருமாவுண்ணியின் கதை வளர்ச்சியே கண்ணகி கதை என்று கருதலாம் என பி.எல்.சாமி குறிப்பிட்டுள்ளார் (தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு, ப.155)

செங்குட்டுவன் காலத்துக்கு பின் தமிழகத்தில் கண்ணகி வழிபாடு ஆடித் திங்கள் தோறும் மாரியம்மன் விழாவாகக் கொண்டாடப்பட்டதைச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.

கேரளத்தில் கண்ணகி வழிபாடு

மங்கலதேவி கோயில், மங்கலதேவி மலையில் போயாற்றங்கரைக்குப் பக்கத்தே இருக்கிறது. சிலப்பதிகார வருணனைப்படியே இக்கோயில் இன்றும் மாறுபடாது இருக்கிறது. இக்கோயில் சேரன் செங்குட்டுவன் பத்தினித் தெய்வமாம் கண்ணகிக்கு எழுப்பிய முதற்கோயிலாகும். இன்றுள்ள சிலைகளும் கட்டடங்களும் காலந்தோறும் திருப்பணி செய்த மன்னர்களால் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன என்று டாக்டர் துளசி இராமசாமி குறிப்பிட்டுள்ளார் (மங்கலதேவி கண்ணகிக் கோட்டம், ப.90)

மணிமேகலையில் கண்ணகியோடு கோவலனுக்கும் படிமம் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. அத்தேவகோட்டகத்தே சென்று மணிமேகலை கண்ணகியை வணங்கி நின்று குணம் பல ஏத்துகிறாள்.

அன்புக் கடனில்லாது நற்றவம் படராது

கற்புக் கடன் பூண்டுறுங்கடன் முடித்த

தருளல் வேண்டு மென்று

(மணி.வஞ்சி.,7-9)

மணிமேகலை கேட்க, கண்ணகி, தன் மகளுக்குத் தன் முற்பிறப்பின் வரலாற்றைக் கூறித், தான் மதுரையை

எரித்த தீச்செயலின் பயனாகப் பல பிறவிகள் எடுத்து உழன்று, இறுதியில் கபிலவஸ்துவில் புத்தர் பெருமானின் அறவுரைகளைக் கேட்டுப் பிறவி அறுக்கும் பெருநிலை பெறப் போவதாகவும் கூறுகின்றாள்.

ஒருவர் முற்பிறவியில் செய்த இருவினைகளையும் நுகர்ந்தே தீர வேண்டும் என்னும் பௌத்த சமயக் கொள்கையை நிலைநாட்ட விரும்பிய சாத்தனார் முற்பிறவியில் செய்த நல்வினையால் கண்ணகி தேவநிலையை அடைந்ததாகக் கூறுகிறார். ஆயினும் மதுரையை எரித்த தீவினையை நீக்கப் பிறவிகள் பலபெற்று உழன்று, இறுதியில் புத்த ஞாயிறு தோன்றுங்காலத்தில் நிர்வாணம் ஆடையப் போவதாகக் கூறுகிறாள் (மணிமேகலை, வஞ்சிமாநகர்புக்க காதை, 1-67)

சிலம்பில் புகார்க் காண்டத்தில் மானுடக் கண்ணகியாக இருந்தவள். மதுரைக் காண்டத்தில் பத்தினியாக மாறினாள். வஞ்சிக் காண்டத்தில் தெய்வமாகப் போற்றப்பட்டாள். பின்னால் வந்த வழிநூல்களில் நினைத்தால் சாபம் கொடுக்கக்கூடிய, பலிக்கக்கூடிய ஆற்றல் உடைய பத்தினி தெய்வமாக அவள் மாற்றப்பட்டாள். இறுதியில் அவளுக்கு சேரமன்னன் கல் நாட்டிக் கோயில் எழுப்பி வணங்கும் நிலை கூறப்பட்டுள்ளது.

நும்மின் திரிபெயர்

*முனைவர் இரா.இராஜா, *உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி – 17.*

ஒரு மொழியின் அமைப்பில், அடிப்படை இலக்கணக்கூறுகளும் சிறப்பிலக்கணக்கூறுகளும் அடங்குகின்றன. சிறப்பிலக்கணக்கூறுகள், மொழி வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்களைப் பிரதிபலிக்கின்றன. ஆனால், அடிப்படைக்கூறுகள் காலவோட்டத்தில் பெருமாற்றங்களைப் பெறாமல் நிலைபேற்றுடன் விளங்குகின்றன. அவற்றுள் மூவிடப்பெயர்கள் குறிப்பிடத்தக்கவை. தொல்காப்பியம் பத்து இயல்களில் மூவிடப்பெயர்கள் பற்றிய விதிகளைக் குறிப்பிடுகின்றது (பார்க்க:இணைப்பு). இக்கட்டுரை தொல்காப்பியரின் முன்னிலைப்பெயர் இலக்கணத்தை உரையாசிரியர்கள், இலக்கியச்சான்றுகள், ஒப்புமொழியியல், சமூகமொழியியல் நோக்கில் நுணுகி ஆய்வதை நோக்கமாகக் கொள்கிறது.

1.0. மூவிடப்பெயர்கள்

தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய இடங்களில் இட்டு வழங்கப்படும் பதிலிடுபெயர்களே மூவிடப்பெயர்கள் எனப்படுகின்றன. தமிழில் மூவிடப்பெயர்கள் ஒருமை, பன்மை என்னும் எண் வேறுபாட்டினைத் தெளிவாக உணர்த்துகின்றன. ஆனால், அவற்றின் திணை, பால் பற்றிய கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. தொல்காப்பியர், தன்மைப்பெயர்களை உயர்திணையில் அடக்க(தொல்.சொல்.162), பவணந்தியார் (நன்.285), சங்கர நமச்சிவாயர் (நன்.285, சங்.உரை), வைத்தியநாததேசிகர்(இ.விள.236) போன்றோர் விரவுத்திணையில் அடக்குவர். முன்னிலை, படர்க்கைப் பெயர்கள் விரவுத்திணையைச் சார்ந்தவை என்பதில் கருத்து வேறுபாடில்லை. படர்க்கைப்பெயர்களுள் ஒரு பிரிவாக அடக்கப்படும் சுட்டுப்பெயர்கள் மட்டும் திணை, பால், எண், இடம் ஆகியவற்றைத் தெளிவாக உணர்த்துகின்றன. பிற பெயர்களைப் போல மூவிடப்பெயர்கள் விளி வேற்றுமையை ஏற்பதில்லை (தொல்.சொல்.137,142,143,148). மூவிடப்பெயர்கள் பற்றிய இவ்விலக்கண வரையறை, பிற திராவிட மொழிகளுக்கும் பெருமளவு பொருந்துமாற்றை அறிஞர்கள் தெறிவுபடுத்தியுள்ளனர் (பெ.சுயம்பு,2004:102).

2.0.எழுவாய் வடிவமும் ((Nominative)

வேற்றுமை உருபேற்கும் வடிவமும் (oblique)

பெயரும் வினையும் மொழியின் முதன்மைப் பாகுபாடுகளாகும் (தொல்.சொல்.158). அவற்றைச் சார்ந்தே இடையும் உரியும் செயல்படுமாற்றை இலக்கண ஆசிரியர்கள் தெளிவுறுத்துகின்றனர் (தொல்.சொல்.159). அம்முதன்மைக்கூறுகளாகிய பெயர்க்கும் வினைக்குமான அடிப்படை வேறுபாடாவது வருமாறு:

பெயர்	வினை
பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபுகளை ஏற்கும் காலம் காட்டாது (தொல்.சொல்.69,70)	**வினைச்சொற்கள் காலஇடைநிலைகளைப் பெற்றுவரும் வேற்றுமை ஏற்காது (தொல்.சொல்.198)**

வேற்றுமையும் கால இடைநிலையும் ஒருங்கே பெற்றுத் திகழும் வினையாலணையும் பெயர்கள் விதிவிலக்கானவை.

பெயர்களுள் இயற்பெயர்கள் எழுவாயாகச் செயல்படும்போதும், வேற்றுமை உருபுகளை ஏற்கும்போதும் வடிவமாற்றங்களுக்கு இடனின்றிச் செயல்படுகின்றன. ஆனால் எழுவாயாகச் செயல்படும் மூவிடப்பெயர்கள் வேற்றுமை ஏற்கும்போது வடிவமாற்றங்களுக்கு ஆட்படுகின்றன.

	எழுவாய்த் தொடர்	வேற்றுமைத் தொடர்
இயற்பெயர்	**முருகன் கொடுத்தது**	**முருகனுக்குக் கொடுத்தது**
இடப்பெயர்	**நான் கொடுத்தது**	**மூ..நானுக்குக்கொடுத்தது (பொருத்தமில்லாத தொடர்)**

எனக்குத் கொடுத்தது (பொருத்தமான தொடர்)

எழுவாய்க்குரிய நான் என்பது உருபேற்கும்போது என் எனத் திரிந்துள்ளதைக் காணமுடிகிறது. இவ்வாறு மூவிடப்பெயர்கள் ஒவ்வொன்ஷூற்கும் தனித்தனியான வேற்றுமை உருபேற்கும் பெயரடிகள் காணப்படுகின்றன. ஆயினும் எழுவாய், உருபேற்கும் வடிவங்களுக்கு இடையே அடிப்படையான ஒழுங்கமைவு காணப்படுகின்றது. இஃது இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் காணப்படாத திராவிடமொழிக் குடும்பத்திற்குரிய தனிச்சிறப்புகளுள் ஒன்றெனக் கால்டுவெல்(2004:344) குறிப்பிடுகிறார்.

3.0.படர்க்கை மற்றும் தன்மைப் பெயர் திரிபுகள்

தொல்காப்பியர் படர்க்கை (தாம்,தான்) மற்றும் தன்மைக்குரிய (யான்,யாம்,நாம்) எழுவாய் வடிவங்கள் வேற்றுமை ஏற்கும் பெயரடிகளாகத் திரியுமாற்றைக் கீழ்க்காணுமாறு தெளிவுபடுத்துகிறார் (தொல்.எழுத்து.189,193).

ஆயினும் எழுவாய் வடிவங்களில் இருந்தே உருபேற்கும் வடிவங்கள் தோன்றும் என்பதற்குத் தொல்காப்பியான் படர்க்கை, தன்மைப் பெயர்கள் பற்ஷூய இலக்கண விதிகள் சான்று பகர்கின்றன. தொல்காப்பியர் சுட்டாத நான் என்னும் தன்மை ஒருமைப் பெயர், பின்பழந்தமிழ் நூல்களான பாபாடல் (6,20), சிலம்பு (வாழ்த்து.2), மேகலை (கச்சி மாநகர் புக்க காதை.92) போன்றவற்றுள் காணப்படுகிறது. அதனை ஒப்புமையாக்கத்தால் நிகழ்ந்த வளர்ச்சியென அறிஞர்கள் சுட்டுவர்(பெ.சுயம்பு,2004:104).

4.0.முன்னிலைப் பெயர்த் திரிபுகள்

தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே படர்க்கை, தன்மைப் பெயர்களைப் காட்டிலும் முன்னிலைப் பெயர்களில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அதனால் அவர் ஏனைய இடப்பெயர்களைப் பகுத்தாய்ந்து விளக்கியுள்ள அளவிற்கு முன்னிலைப்

	பன்மை		ஒருமை	
	எழுவாய்	**உருபேற்கும் பெயரடி**	**எழுவாய்**	**உருபேற்கும் பெயரடி**
படர்க்கை	**தாம்**	**தம்**	**தான்**	**தன்**
தன்மை	**நாம்** **யாம்**	**நம்** **எம்**	**யான்**	**என்**

அவற்றுள் தாம்,தான்,நாம் ஆகிய வடிவங்களில் உயிரொலிக் குறுக்கம் மட்டுமே நிகழ்கின்றது. யாம், யான் என்னும் வடிவங்களில் உயிரொலிமாற்றமும் மெய்யொலி இழப்பும் ஒருங்கே நிகழ்கின்றன.

யாம் > எம் [ஆ > எ; ய் > ø]

யான் > என் [ஆ > எ; ய் > ø]

பெயர்களில் கவனம் செலுத்தவில்லை. தொல்காப்பியான் முன்னிலைப் பெயர்கள் பற்றிய சில இலக்கண விதிகள் மீளாய்விற்குரியன.

4.1. முன்னிலைப் பன்மை

'நும்' என்பது தொல்காப்பியர் குறிப்பிடும் முன்னிலைப் பன்மைக்குரிய உருபேற்கும் வடிவம். அதனைப் படர்க்கை, தன்மை இடங்களுக்குரிய

உருபேற்கும் வடிவங்களைப் பேசுமிடங்கள்தோறும் மாட்டேறு நூற்பாக்களால் குறிப்பிடுகிறார் (தொல். எழுத்து. 163,188,326). ஆயினும் ‘நும்’ என்னும் உருபேற்கும் வடிவம் எந்த எழுவாய் வடிவில் இருந்து தோன்றியதென விளக்கவில்லை. மாறாக ‘நும்’ எனும் உருபேற்கும் வடிவிலிருந்தே நீயிர் எனும் எழுவாய் வடிவம் தோன்றும் எனக் கீழ்க்காணும் நூற்பாவில் குறிப்பிடுகின்றார்.

அல்லதன் மருங்கிற் சொல்லுங் காலை

உக்கெட நின்ற மெய்வயின் ஈவர

இஇடை நிலைஇ ஈறுகெட ரகரம்

நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே

அப்பான் மொழிவயின் இயற்கை யாகும்

(தொல்.எழுத்து.327)

அதாவது, அவர்

நும் ⟶ நம் (உ>ø)

நீம் (ø>ஈ)

நீஇம் (ø>இ)

நீஇ (ம்>ø)

நீஇர் (ø>ர்)

நீயிர்

(உடம்படுமெய் ‘ய’கரம் பெற்றது)

என்னும் முறையில் புணர்நிலை மாற்றங்களை அடைந்து ‘நீயிர்’ தோன்றுமென்கிறார். ‘நீயிர்’ என்பதை ‘நும்மின் திரிபெயர்’ (தொல்.சொல்.143) என்றே சுட்டுகிறார். அது மொழியின் இயல்பிற்கு மாறானது. ஏனெனில் தொல்காப்பியர் படர்க்கை, தன்மை மற்றும் முன்னிலை ஒருமை ஆகிய இடங்களுக்குரிய எழுவாய் வடிவங்களிலிருந்தே வேற்றுமை வடிவங்களை வருவிக்கிறார். ஆனால் முன்னிலைப் பன்மையில் மட்டும் தலைகீழாக வேற்றுமை வடிவிலிருந்து எழுவாய் வடிவினைத் தோற்றுவிக்கிறார். அது முரண்பாடாகத் தெரிகிறது.

4.1.1.பிற திராவிடமொழியும் பிற்காலச் சிந்தாமணியும்

தொல்காப்பியர் விதிவிலக்காக ‘நும்’ என்னும் வேற்றுமை உருபேற்கும் பெயரடியிலிருந்து எழுவாய் (நீயிர்) வடிவைத் தோற்றுவிக்க முயன்றதற்குக் காரணம் தேட வேண்டும். தமிழில் படர்க்கை (தாம்) மற்றும் தன்மைப் (யாம்,நாம்) பன்மையை உணர்த்தும் எழுவாய் வடிவங்கள் மகர ஈற்றுடனே முடிகின்றன. ஆனால் தமிழில் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே முன்னிலைப் பன்மைக்குரிய எழுவாய் வடிவில் மகர இழப்பு நிகழ்ந்துள்ளது. அதற்குப் பதிலாக நீயிர், நீர் என்னும் ரகர ஈற்று எழுவாய் வடிவங்கள் தோன்றிவிட்டன. ஆயினும் அப்பெயர்க்குரிய உருபேற்கும் வடிவான ‘நும்’ என்பதில் மட்டும் மகரம் இழப்பிற்கு உள்ளாகாமல் இருந்துள்ளது. அதனால் தொல்காப்பியர் முன்னிலைப் பன்மைக்குரிய பழந்தமிழ் எழுவாய் வடிவம் (நீம்) குறித்தெல்லாம் சிந்திக்க முற்படாது, ‘நும்’ என்பதிலிருந்து எப்படியாயினும் அவர் காலத்து வழக்கமான ‘நீயிர்’ என்பதை உருவாக்கிக் காட்டுவதிலேயே குறியாக இருந்துவிட்டார்.

பழந்தமிழில் படர்க்கை(தாம்), தன்மை(யாம்,நாம்) இடப்பெயர்களைப் போல முன்னிலைப் பன்மைக்கு நீம் எனும் மகர ஈற்றுப் பெயரே வழங்கியிருக்க வேண்டும். இன்றும் தென்திராவிட மொழிகளில் ஒன்றான கன்னடத்தில் முன்னிலைப் பன்மைக்கு ‘நீம்’ என்பது வழங்கப்படுவதாகக் கால்டுவெல் (2004:394,395) போன்றோர் குறிப்பிடுகின்றனர். சங்க நூல்களில் ஓரிடத்தும் ‘நீம்’ என்பதைக் காணமுடியவில்லை. ஆயினும் இடைக்காலக் காப்பியங்களில் ஒன்றான சீவக சிந்தாமணியில்,

“நீமே, வென்றிக் களிற்றா னுழைச்செல்வது வேண்டும்” (1932) என விமலையார் இலம்பகத்து அடியொன்றில் ‘நீம்’ காணப்படுகிறது. அவ்வடிக்கு உரையெழுதிய உச்சிமேல் புலவர்கொள் நச்சினார்க்கினியர், **“நும்மென்னுஞ் சொல் நீயிரென முழுவதுந் திரியாது மகரம் நிற்பத் திரிந்து நீமென நின்றது”** (சீவக.1936,நச்.உரை) எனக் கூறுகிறார். அதோடு தொல்காப்பிய மேற்கோள் (தொல்.எழுத்து.483) காட்டி ‘நீம்’ என்பதைச் செய்யுள் திரிபுக்குள் அடக்குகிறார். அவ்விடத்தில் திருத்தக்க தேவருக்கு இருந்த தொல்தமிழ் புரிதல், நச்சினார்க்கினியருக்குப் புலப்படாது போனமைக்கு முழுப்பற்றான தொல்காப்பியக் கல்வியே காரணம் எனலாம்.

தன்மைப் பன்மை (யாம் >எம் (ஆ>எ;ய்>ø) திரிபினைப் போன்று முன்னிலைப் பன்மையும் { நீம் > நும் (ஈ > உ) திரிந்துள்ளது. சங்க நூல்களில் 'நும்' என்பது பரவலாகக் காணப்படுகிறது(அக.30-14 ஐங்.83-2 புறம்.9-5). அதோடு மொழிமுதல் மெய்யிழந்த {நும்>உம்(ந்>ø)} 'உம்' என்ற வடிவமும் வழங்கப்பட்டுள்ளது (அக.56-14,புறம்.236-10). அதனால் 'உம்' என்பதை நும்மின் திரிபாகக் கருத இடமுண்டு. அதுவே மொழி இயல்பு. மாறாகத் தொல்காப்பியர் கருதுவது போல் நீயிர் என்பதை நும்மின் திரிபெயராகக் கருதமுடியாது.

4.1.2. வட்டாரமொழியில் முன்னிலைப் பெயர்கள்

பிற்கால இலக்கியங்களிலும்(அப்பர் தேவாரம்.405) பேச்சு வழக்கிலும் 'நீங்கள்' என்னும் முன்னிலைப் பன்மை வழக்குக் காணப்படுகின்றது. அது நீம்+கள் என்பதன் புணர்ச்சி; அங்குக் காணப்படும் 'நீம்' என்பது மூல திராவிட வடிவம். ஆனால், தமிழும் கன்னடமும் ஒரு மூல மொழியிலிருந்து கிளைத்தவை என்பதை மறந்து,தமிழ் வரலாற்றிலக்கணம் என்னும் நூலாசிரியர் வேலுப்பிள்ளை, **"இச்சொல் (நீம்) கன்னட மொழியிலிருந்து கடன்வாங்கப்பட்டிருக்கலாம்"** (1982:171) எனக் குறிப்பிடுகிறார்.

'நீம்' என்பது தமிழ் இலக்கண இலக்கியங்களில் அரிதாகக் காணப்பட்டபோதும், இன்றளவும் தென் தமிழகத்து ஆதிதிராவிடர் பேச்சு வழக்கில், நீம்ரு, நிம்ரு என உயிர்ப்புடன் பாதுகாக்கப்படுகிறது. நச்சினார்க்கினியருக்கு 'நீம்' பற்றி தெளிந்த கருத்து இல்லாதபோதும், தாம் எழுதிய சிந்தாமணி உரையில், இனி நீமென்று ஒரு திசைச் சொல்லுமாம் (1932,நச்.உரை) எனக் குறிப்பிடுகிறார். அஃது அவரின் ஆழ்ந்த சமூக மொழியியல் அறிவைப் புலப்படுத்துகிறது.

4.2. முன்னிலை ஒருமை

படர்க்கை (தாம்,தான்), தன்மைப் (யாம்,நாம்,யான்) பெயர்களின் எழுவாய் வடிவங்கள் வேற்றுமை ஏற்கும்போது மொழி முதல் குறுக்கத்திற்கும் உயிரொலி மாற்றத்திற்கும் (யாம்,யான்) மட்டுமே ஆட்படுகின்றன. ஆனால் தொல்காப்பியர் முன்னிலை ஒருமைக்கு உரியதாகக் குறிப்பிடும் 'நீ' என்பது வேற்றுமை ஏற்கும்போது நெடுமுதல் குறுக்கத்தோடு ஈற்றில் னகர ஒற்றைப் பெறுமெனக் குறிப்பிடுகின்றார்.

"நீயென் ஒருபெயர் நெடுமுதல் குறுகும்

ஆவயின் னகரம் ஒற்றா கும்மே"

(தொல்.எழுத்து.180)

அவ்வாறு உருபேற்கும்போது பெறப்படும் 'ன'கர ஒற்றை 'எழுத்துப்பேறு' என உரையாசிரியர்கள் மொழிவர் (தொல்.எழுத்து.180,இளம்.உரை). பிற மூவிடப்பெயர்களைப் போலன்றி நீ என்பது மட்டும் உருபேற்கும்போது 'ன'கரம் பெற வேண்டிய அவசியம் என்ன? அந்த 'ன'கரம் எங்கிருந்து பெறப்படுகின்றது என ஆராய வேண்டும். தமிழில் படர்க்கை, தன்மை ஒருமையை உணர்த்தும் எழுவாய் வடிவங்கள் (தான்,யான்) 'ன'கர ஈற்றுடனே முடிகின்றன. ஆனால் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே முன்னிலை ஒருமைக்குரிய எழுவாய் வடிவில் 'ன'கர இழப்பு நேர்ந்துள்ளது. ஆயினும் உருபேற்கும் வடிவில் 'ன'கரம் கட்டாயமாக வேண்டப்படுவதால் அதனை வருவித்துக் கூறுகின்றார். அதனால் தமிழில் 'நீ' என்பதன் பழைய வடிவம் 'நீன்' என்றே இருந்திருக்க வேண்டுமென்பது தெளிவு. இன்றும் கன்னட மொழியில் முன்னிலை ஒருமைக்கு "நீன்", "நீனு" என்னும் வடிவங்கள் வழக்கிலுள்ளதை அறிஞர்கள் தெளிவுபடுத்துகின்றனர் (கால்டுவெல்,2004:372). பழந்தமிழில் 'நீன்' என்பது ஈறுகெட்டு 'நீ' என வழங்கியதைப் போல ஆன்,கான்,கோன்,தேன்,மான் என்பனவும் முறையே ஆ,கா,கோ,தே,மா எனப் பொருள் மாற்றமின்றித் திரிந்துள்ளமை சிந்திக்கத் தக்கது.

'நீ' என்பது குறுகி 'ன'கரம் பெற்று நின் என உருபேற்றாலும் நீம் > நும் என மாறியதைப் போல மொழி முதல் ஈகாரம் உகரமாகத் திரிந்து நீன் > நுன் எனவும் வழங்கப்படுதல் இயல்பே ஆகும்.

நின் (ஈ >இ; ø>ன்)

நீ

நுன் (ஈ >உ; ø>ன்)

சங்க நூல்களில் நின் என்பது பரவலாகக் காணப்பட்டாலும் (அக.2-8 ஐங்.29-4 குறு.36.6), 'நுன்' என்பது ஓரிடத்தும் காணப்படவில்லை. ஆயினும் சீவக சிந்தாமணியில், **"நுன்பழம் பகைதவ நூறுவாயென"** (324) நாமகள் இலம்பக அடியொன்றில் 'நுன்' காணப்படுகின்றது. அதற்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர் 'நுன்' என்பதைத் திசைமொழி என்கிறார்(சீவக.324,நச்.உரை). அந்நூலைக் குறிப்புரையுடன் பதிப்பித்த உ.வே.சா, **"நொந்தா வொண்சுடரே நுனையே நினைந்திருந்தேன்"** என்னும் சுந்தரர் தேவார அடியொன்றை மேற்கோள் காட்டுகிறார் (1969 167). திருத்தக்கதேவர் காலத்திற்கு முந்தைய சுந்தரர் காலமொழியிலேயே நுன் என்னும் வடிவம் தமிழில் பயிலப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது.

அதோடு உ.வே.சா, **"நுன் என்பது கன்னட பாஷையில் வழங்குகிறது"** (1969 167) என நுட்பத்துடன் குறிப்புரை வரைந்துள்ளார்.

சங்க நூல்களில் நுன் என்பது வழங்காவிட்டாலும், அதன் மொழிமுதல் மெய்யிழந்த **{**நுன்>உன்(ந்>ø>) உன் என்ற வடிவம் வழங்கப்பட்டுள்ளது (அக.222-2).

தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே 'நீன்' என்பதில் 'ன'கரம் இழப்பிற்குள்ளாகியபோதும், அப்பழந்தமிழ் வடிவம் மொழியில் முற்றிலும் வழக்கற்றுப் போகவில்லை. இன்றைய பேச்சுத் தமிழில் இயல்பாக, "நீனும் வாயா?", "நீனே சொல்லு" போன்ற சொற்றொடர்கள் பல்வேறு கிளைமொழிகளில் காணப்படுகின்றன. அதனால் பேச்சுமொழியும் பழமைக் கூறுகளைப் பேணிக்காத்தல் தெளிவாகிறது.

5.0.எழுத்துப்பேறும் எதார்த்த உண்மையும்

தமிழுலகில் விளக்க முடியாத புணரிடை மாற்றங்களே 'எழுத்துப்பேறு' எனப் பரவலாகக் கருதப்படுகிறது. ஆனால், உரையாசிரியர்கள் கையாளும் எழுத்துப்பேறு என்பது ஓர் ஆழமான கலைச்சொல்லாகத் தெரிகிறது. உலகில் புணர்ச்சியின் பயனாக மகவை ஈனுவது 'மகப்பேறு' எனப்படுகின்றது. அதுபோலச் சொற்களின் புணர்ச்சிக்கு இடையில் எழுத்தினைத் தோற்றிவிப்பது 'எழுத்துப்பேறு' எனப்பட்டிருக்கலாம். அப்படியானால் ஈன்றெடுக்கும் மகவிடம் பெருமளவு தாயின் குணம் தோன்றுமாறு போல, எழுத்துப்பேறும் அதன் தாய்மைப் பண்பில் (தொன்மை வடிவில்) இருந்தே ஏற்படுகின்றது என உணர வேண்டும். ஒரு மொழியில் எழுத்துப்பேறு கூடச் சாயான வரன்முறையோடுதான் பின்பற்றப்படும். மொழி என்பது எவ்வளவு நெகிழ்வுத்தன்மை கொண்டதோ, அவ்வளவு செறிவுப்பண்பும் மிக்கது என உணர வேண்டும்.

6.0.பெயரீறுகளும் வினைமுற்று விகுதிகளும்

படர்க்கை, தன்மை இடப்பெயர்களைக் காட்டிலும் முன்னிலை எழுவாய் வடிவங்கள் பெருமாற்றங்களுக்கு உட்பட்டமைக்குக் காரணம் தேட வேண்டும். ஒவ்வொரு மொழியிலும் சில ஒழுங்கமைவுகள் பின்பற்றப்படுகின்றன. சான்றாக இந்தி மொழியில் பெயரடை ஈறுகளுக்கும் பெயரீறுகளுக்கும் இயைபு வேண்டப்படுகின்றது.

(எ.கா) அச்**சா** லடுக்**கா** (நல்ல பையன்)

அச்**சி** லடுக்**கி** (நல்ல பெண்)

அச்சா, அச்சி இரண்டும் 'நல்ல' எனும் ஒருபொருள் குறித்தனவே ஆகும். ஆயினும் ஆகார ஈறு ஆண்பாலுக்கும் இகர ஈறு பெண்பாலுக்கும் இயைபு நோக்கி ஆளப்படுகின்றன. அவ்வாறு தமிழில் பெயரடை ஈறுகளுக்கும் பெயரீறுகளுக்கும் எழுத்தியைபு வேண்டப்படாத ஒன்று. ஆனால் வினைமுற்றுகளுக்கும் பெயர்ச்சொற்களுக்கும் எழுத்தியைபு வேண்டுமென்பதை,

வினையின் தோன்றும் பாலறி கிளவியும்

பெயரின் தோன்றும் பாலறி கிளவியும்

மயங்கல் கூடா தம்மர பினவே (தொல்.சொல்.11)

என இலக்கணங்கள் வலியுறுத்துகின்றன.

(எ.கா) அவ**ன்** வந்தா**ன்** (இயைபுடைத்து)

அவ**ன்** வந்தா**ள்** (இயைபின்று)

தமிழ் மூவிடப் பெயர்களின் பல ஈறுகள் இயல்பாகவே அவற்றின் வினைமுற்று விகுதிகளோடு இயைபுடன் காணப்படுகின்றன (தொல்.சொல். 202, 203, 205, 206, 207).

முன்னிலைப் பன்மை விகுதிகளாக இர், ஈர், மின் ஆகியன கூறப்படுகின்றன. அவை பழந்தமிழ் முன்னிலைப் பன்மை வடிவான 'நீம்' என்பதோடு இயைந்தனவாக இல்லை. அதனால் முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகளில் ஒன்றான 'இர்' என்பது ஈறுகெட்ட எழுவாய் வடிவோடு {நீம்>நீ (ம்>ø) சேர்கிறது. 'நீ' 'இர்' ஆகியன புணரும் போது இடையில் சிலவிடத்து யகர உடம்படுமெய்யும் சிலவிடத்து வகர உடம்படுமெய்யும் பெற்று இருவகையில் புணர்கின்றன.

நீ ய் இர் நீயிர்

நீ இர்

நீ வ் இர் நீவிர்

சங்க நூல்களில் நீஇர் (புறம்.355-2), நீயிர் (அக.8-7) என்னும் சான்றுகளே காணப்படுகின்றன. நீவிர் என்பது பிற்கால இலக்கண இலக்கியங்களில் காணப்படுகின்றது (நன்.285). சங்க இலக்கியத்தில் 'நீயிர்' என்பதன் மரூஉ மொழியான 'நீர்' என்னும் முன்னிலைப் பன்மையும் காணப்படுகின்றது (கலி.25-21,நன்.285). **"நீராகும் நீயிர்"** (62) என்பது நேமிநாதம். அப்பர் தேவாரத்தில்(419) 'நீர்கள்' என்னும் முன்னிலை இரட்டைப் பன்மை வழக்கொன்று காணப்படுகின்றது. அவ்வடிவம் ஒப்பு, சமூக மொழியியல் நோக்கில் மேலாய்விற்குரியது.

முன்னிலைப் பன்மையைப் போல முன்னிலை ஒருமை வடிவமும் வினைமுற்று விகுதி நோக்கிய மாற்றத்திற்கு ஆட்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. தமிழில் முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகளாக இ,ஐ,ஆய் ஆகியன கூறப்பட்டுள்ளன. அவை பழந்தமிழ் முன்னிலை ஒருமை வடிவான 'நீன்' என்பதோடு இயைந்தனவாக இல்லை. அதனால் முன்னிலை விகுதிகளுக்கு ஏற்ப ஈற்று னகரத்தை இழந்து {நீன்>நீ(ன்>ø) 'நீ' என வழங்கலாயிற்று. 'நீ' என்பதன் ஈற்றுயிரான 'ஈ' என்பது இ,ஐ என்பனவற்றிற்கு இனமான ஒலி நிலை உறவுடையது. அதோடு 'ஆய்' என்பதிலுள்ள 'ய'கர மெய்க்கு இயைபாக 'நீய்' என்னும் புதிய வடிவமும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. பிற்கால இலக்கணங்களில் 'நீ' என்பதோடு 'நீய்' என்னும் வடிவமும் முன்னிலை ஒருமைக்குக் கூறப்பட்டுள்ளது. அதனால் மூவிடப் பெயர்களில் முன்னிலைப் பெயர்கள் அவற்றின் வினைமுற்று விகுதிகளுக்குத் தகத் திரிபுகளைப் பெற்றுள்ளமை உணர முடிகிறது.

நிறைவுரை

திராவிடமொழி ஆய்வின் மைல்கல்லாகப் கருதப்படும் கால்டுவெல்லின் ஒப்பிலக்கணம் முதன்முறையாக 1856-இல் வெளியானது. அவர் தென்னிந்திய பேச்சுமொழிகளையும் பிற்கால இலக்கியச் சான்றுகளையுமே மூலாதாரமாகக் கொண்டார். சுவடிகளில் இருந்த தொல்காப்பியம் 1858-இல்தான் சாமுவேல் பிள்ளையால் முழுமையாக அச்சுக்குக் கொண்டுவரப்பட்டது. தொல்காப்பியத்திற்கு 1847-இல் மழவை. மகாலிங்கையர் பதிப்பொன்று காணப்பட்டாலும் அது எழுத்ததிகாரம் நச்சர் உரையை மட்டுமே கொண்டிருந்தது. தொல்காப்பியம் அச்சேறுவதற்கு முந்தைய நூற்றாண்டிலும், அச்சேறிய சமகாலத்திலும் அந்நூலில் சிறப்புப்புலமை பெற்றவர்கள் சிலர் இருந்துள்ளனர் என்பதற்குச் சிவஞானமுனிவர், தொல்காப்பிய வரதப்பமுதலியார் போன்றோர் சான்றாவர். ஆயினும், தொடக்க காலத் திராவிடமொழியியல் / ஐரோப்பிய அறிஞர்களுக்கு நன்னூலே இலக்கணப் பாடநூலாகப் பயிற்றுவிக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியம் குறித்து அவர்கள் சிறப்புக்கவனம் செலுத்தவில்லை.

மரபிலக்கணிகள் மொழியின் அமைப்பினைத் தாம் அறிந்து கொள்வதற்கும், பிறருக்கு விளக்கிக் கூறுவதற்கும் சில வரம்பான அணுகுமுறைகளைக் கையாண்டுள்ளனர். அவர்கள் மொழியின் செய்கைகளைப் பெரும்பான்மை கருதிச் சில விதிகளுக்குள் அடக்கிட விழைகின்றனர். அதனால் பெரும்பொருள் மாற்றத்தைத் தராத சில விதிவிலக்குகள் குறித்து ஆழ்ந்த கவனம் செலுத்துவதில்லை. ஆயினும் அவற்றைக் கண்டு தௌயலாமெனப் புறனடையில் வழிவிட்டுச் சென்றுள்ளனர். மொழியை வரலாற்று அணுகுமுறையில் ஆராயும்போதுதான் அவ்வெற்றிடம் நிரப்பப்படுகிறது. அதற்கு மொழியியல் கோட்பாடுகள் துணை புரிகின்றன.

துணையன்கள்

1. காலந்தோறும் தமிழ்மொழி-இராம.சண்முகம், சர்வோதயா இலக்கியப்பண்ணை, 1981.

2.சங்க இலக்கியம் (மூலம் முழுவதும்), மணிவாசகர் பதிப்பகம், 2006.

3. சிலப்பதிகாரம் மூலமும் ந.மு.வேங்கடசாமி உரையும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1999.

4.சீவக சிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் (உ.வே.சா குறிப்புரை), கபீர் அச்சுக் கூடம், 1969.

5. தமிழ் இலக்கண நூல்கள்(மூலமும் முழுவதும் குறிப்புரை விளக்கங்களுடன்), மெய்யப்பன் பதிப்பகம், 2007

6. தமிழ்மொழி அமைப்பும் வரலாறும் - முனைவர் பெ.சுயம்பு, இலக்குமி நிலையம், 2004.

7.தமிழ்மொழி இலக்கண இயல்புகள் - அ.சண்முகதாஸ், பாரிநிலையம், 1997.

8. திராவிடமொழிகளின் ஒப்பாய்வு - ஜான் சாமுவேல். பு, மாதவி பதிப்பகம், 1982.

9. திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் (1,2,3,4)- டாக்டர் கால்டுவெல் (மொழியாக்கம்:கா.கோவிந்தன், க.ரத்னம்), முல்லை நிலையம், 2004.

10. தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் (கு.சுந்தரமூர்த்தி குறிப்புரை) அண்ணாமலை பல்கலைக்கழகம், 1979.

11. தொல்காப்பியம் - சொல்லதிகாரம்(கந்தசாமி, ஞா.தேவநேயப் பாவாணர் குறிப்புரை), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 2001.

12. தொல்காப்பியப் பதிப்புகள் - ச.வே.சுப்பிரமணியன், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், 1992.

13. நன்னூல் மூலமும் சங்கரநமச்சிவாயருரையும் (உ.வே.சா. பதிப்பு), கபீர் அச்சுக்கூடம், 1953

14. பன்னிரு திருமுறை, மணிவாசகர் பதிப்பகம், 2009.

15. மணிமேகலை புலியூர்க் கேசிகன் தௌவுரையுடன், பாரிநிலையம், 1967

16. மொழி ஒப்பியலும் வரலாறும் - ரா.சீனிவாசன், அணியகம், 1980

17. A word index for cankam Literature, Thomas Lehmann & Thomas Malten, Asian studies, 1993.

இணைப்பு

தொல்காப்பியத்தில் இடமபெற்றுள்ள மூவிடப்பெயர்கள் பற்றிய நூற்பாக்கள்

வ.எண்	தொல்காப்பிய இயல்கள்	நூற்பா எண்கள்
1.	புணாயல்	12,13
2.	தொகை மரபு	19,20
3.	உருபியல்	7,15,16,17,18,19,20
4.	உயிர் மயங்கியல்	48,51
5.	புள்ளி மயங்கியல்	25,26,27,28,29,30,31,56,57,58
6.	கிளவியாக்கம்	11,27
7.	விளிமரபு	20,26
8.	பெயரியல்	8,10,20,30,31,32,33,34,35,36,37,38,39
9.	வினையியல்	5,6,8,9,10,12,18,19,24,25,26
10.	எச்சவியல்	14,31,32,52,54,55,65

பாரதிதாசனின் கற்கண்டு நாடகம் வழி மனிதமனம்

***முனைவர் மு.புஷ்பரெஜினா,** *உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பான் செக்கரஸ் மகளிர கல்லூரி, தஞ்சாவூர்.*

மனிதன் குரங்கிலிருந்து தோன்றினான் என்பர். மனம் கொண்டவனே மனிதன் ஆவான். அத்தகைய மனிதனின் மனம் பற்றி கூறுகையில் 'மனம் ஒரு குரங்கு' என்கின்றனர். மனம் இயல்பாகவே நிலையானதன்று, திரிபுடையது தான். மாறுகின்ற மனம் கொண்ட மனிதனின் செயல்பாடுகளையும், அம்மனத்தின் இயல்பு மற்றும் இயல்பு மாற்றத்திற்கான சூழ்நிலைகளையும் பாரதிதாசனின் கற்கண்டு எனும் நாடகம் வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மனிதனின் இயல்பு

உலகில் வாழும் மனிதன் தாயின் கருவில் இருப்பது முதல் தன்னைச் சுற்றி நிகழும் நிகழ்வுகளை மனதில் உள்வாங்கிக் கொண்டு, பிறந்த பின்னர் ஒவ்வொரு நாளும் தான் சந்திக்கும் சம்பவங்களைத் தன் மனதில் நிறுத்தி, சிந்தித்து அந்தந்த சூழ்நிலைகளை மீண்டும் தன் வாழ்வில் சந்திக்கும் போது எவ்வாறு மேற்கொள்வது என்று தீர்மானம் செய்கிறான்.

"உள்ளத்தின் ஊனம் உடல்நலனையும் கெடுக்கிறது. புறவாழ்வில் நிறையுடையவராக இருக்கக் குழந்தைப் பருவத்திலேயே உள்ளம் திடமானதாக இருக்க வேண்டும். உள்ளத்து உறுதியே வாழ்வின் எல்லாத் துறைகளிலும் வளமளிப்பதாக உள்ளது. இஃது இல்லாததாலேயே பலவகை அச்சங்களால் ஆட்பட்டு நிலை கெட்ட மனிதன் சமுதாயத்தில் உருவாகின்றான்." **(ச.வே.சுப்பிரமணியன், பாரதியார் வாழ்க்கைக் கொள்கைகள், ப.64)**

ஒவ்வொரு மனிதனும் பிறர் முன்னிலையில் தான் குற்றமற்றவனாகவும், குணமிக்கவனாகவும், நல்லவனாகவும் காண்பித்துக்கொள்வதன் மூலம் வாழ்வில் வெற்றி பெற்றவனாக முயல்கிறான். அதற்காக தான் பிறருக்காக தியாகம் செய்வது, துன்பப்படுவது போன்ற பல்வேறு தோற்றங்களை உருவாக்குகிறான். அத்தகைய போலியான விஷயங்களை நம்பி மனிதன் உண்மையை ஆராயாது மயங்குகிறான்.

மாயத்தோற்றங்களை நம்பி பின் உண்மையை கண்டறியும் மனிதன் தன் அறியாமையை எண்ணி வருந்துகிறான். இதனையே நாம் தோல்வி என்றும், ஏமாற்றப்படுதல் என்றும், வாழ்க்கை தரும் பாடம் என்றும் கூறுகின்றோம். இந்நிகழ்வே நம் ஒவ்வொருவருக்கும் அனுபவமாக அமைகின்றது.

மனித மனத்தின் மாற்றம்

மனிதன் தோன்றிய நாள் முதற்கொண்டே, இன்பத்தைத் தேடி அலையும் மனப்போக்கு இருந்து வருகிறது. அனைத்து உயிர்களும் மகிழ்ச்சியாக வாழவே நினைக்கின்றன. புறஉலகில் இன்பம் இருப்பதாக எண்ணி அதையடையப் பல முயற்சிகளை மேற்கொள்ளும் மனிதன், அது தன்னுள்ளே தான் ஒளிந்திருக்கிறது என்பதை மறந்து விடுகின்றான்.

உளவியலார், "குழந்தை ஒரு பொருள் தனக்கு நல்லதென்றும், தன் வாழ்க்கையில் பயனள்ளதாகவும் அமையும் என்று அறியும் போது, அப்பொருளின் பயன் மதிப்பினை உணர்கின்றது. பயன் மதிப்புகள் ஒருவனின் ஆளுமைக்கூறுகளை ஒருமுகப்படுத்தும் காரணிகளாக விளங்குகின்றன. மனப்பாங்குகளைப் போலவே, இவைகளையும் குழந்தை தான் வளரும் சூழ்நிலையில் இருந்து பெறுகின்றது. தன்னிடம் விரும்பத்தக்க பயன் மதிப்புகளை உருவாக்குவதில் இல்லம், பள்ளி, சமுதாய நிறுவனங்கள் மிகுந்த பொறுப்பைக் கொண்டுள்ளன" என்று கூறுகின்றனர். **(அ.அப்துல் கரீம், இளையோர் உளவியல், ப.239)**

உலகில் வாழும் மக்கள் ஒவ்வொருவரும், தம் வாழ்நாளில் சந்திக்கும் பல்வேறு சம்பவங்களின் போதும் அவரகளின் மனநிலை பெறும் மாற்றத்தின் தன்மையை ஆராய வேண்டும். அவ்வாறே பாவேந்தர பாரதிதாசன் கற்கண்டு எனும்

நகைச்சுவை நாடகத்தின் கதைமாந்தர்களின் மனநிலை மாறுவதை கூறியுள்ளார்.

தனிமனிதநிலையில் மனமாற்றம்

மனிதன் ஒரு குறிப்பிட்ட எண்ணத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அதனால் ஏற்படும் கிளர்ச்சியின் அளவிற்கு அதிகமான ஆற்றலை ஊட்டும்போது அது மனஇறுக்கத்தை (Tension) ஏற்படுத்துகிறது. அம்மன இறுக்கம் உள்ளத்தை துன்ப நிலைக்கு ஆளாக்கி விடுகிறது என்றும்,

அவ்வாறு ஏற்படும் துன்பத்தைத் தவிர்க்க உள்ளம் குறைந்த அளவு ஆற்றலால் முயற்சி செய்கிறது. அதாவது குறைந்த செலவில் அதிகப்பலன் காண முனைகிறது என்றும் உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

அதனையே நாம் கற்கண்டு நாடகத்தின் வீரப்ப முதலியாரின் வாழ்க்கையில் காணலாம். மனைவியை இழந்த வீரப்ப முதலியார் தன்னிடம் கடன் வாங்கிய துரைசாமி முதலியாரின் கடன் பாக்கிக்காக கற்கண்டு என்ற அவருடைய மகளை மறுமணம் செய்து கொள்ள சிதம்பரத்தில் இருந்து புதுவைக்குச் செல்கிறார்.

மனைவியை இழந்து தனிமையில் வாடும் நிலையைத் தவிர்க்க துரைசாமி முதலியின் ஏழ்மையைப் பயன்படுத்திக் கொண்டு தீர்வு காண விழைந்தார் வீரப்ப முதலி. ஆனால் புதுவையில் கிழவனான வீரப்ப முதலிக்கு கற்கண்டை மறுமணம் செய்வதற்கு பல தடைகள் ஏற்பட்டு, தருமனால் ஏமாற்றப்பட்டார்.

ஐம்பொறிகளும் முதுமையினால் மெல்ல மெல்ல பாதிப்படையும் போது மனஉறுதி மிக்க பலர் தங்களது முதுமைக்கு ஏற்பத் தங்களைத் தயார்படுத்திக் கொள்வர். ஆனால் வேறு சிலர் இந்த மாறுதல்களைத் தாங்கிக் கொள்ள முடியாமல் மற்றவர்களைக் குறை கூறித் தங்களது எதிர்ப்பைத் தெரிவிக்கின்றனர். மற்றும் சிலரோ இத்தகைய மாறுதல்களை ஈடுசெய்வதற்காகக் கற்பனை உலகில் வாழ்கின்றனர். உண்மை நிலையை அவர்கள் மனம் ஏற்பதில்லை.

''முதுமையில் மனத்தளர்ச்சி நோய், மிதமிஞ்சிய மன எழுச்சி நோய், சில நரம்புத்தளர்ச்சி நோய்கள், மனச்சிதைவு நோய்கள் போன்றவை பலருக்கு ஏற்படுகின்றன. அளவிற்கதிகமான சுறுசுறுப்பும், நடவடிக்கையும், ஓயாத பேச்சும், நிமிடத்துக்கு நிமிடம் மாறுபடும் கருத்துக்களைக் கூறுதலும், முதுமையில் திடீரென ஒருவரக்குத் தோன்றினால் அவர் மித மிஞ்சிய மன எழுச்சி நோய்க்கு ஆளாகியிருக்கிறாள் என்று பொருள். குடும்பத்தில் ஒருவரது மரணம் அல்லது பிரிவு ஏற்பட்டால் முதலில் தாங்கிக் கொள்ள முயல்வர. தங்களை அதற்கு அவரகள் தயார செய்யும் போது அதிகத் தோல்வி ஏற்படின் பின்பு கவலைகள் உடலில் பல்வேறு விதமான நோய்களாக வெளிப்பட வாய்ப்புண்டு'' என்கின்றனர் உளவியலாளர்கள். **(ஓ.சோமசுந்தரம், தி.ஜெயராமகிருஷ்ணன், மனநோயும் இன்றைய மருத்துவமும், ப.164)**

பாலுணர்ச்சித் தொடர்புடைய எண்ணங்கள் நனவு மனதால் அறிய இயலாத நிலையில் இருந்தவாறு பல துன்பங்களை, இடையூறுகளை உருவாக்குகின்றன. அந்த எண்ணங்களை நனவு நிலை மனதிற்குக் கொண்டு வந்துவிட்டால் அத்துன்பநிலை மறைகின்றது. அப்போது உள்ளம் தூய்மை அடைந்து புதிய மனிதனாகிறான்.

சமுதாய உறவுகளில் மனமாற்றம்

தருமன் என்னும் சிறுத்தொண்டப்பத்தனின் கதை கூறுவோன் சிங்கார முதலியிடம் நற்பெயர் பெற்ற காவற்காரனான். காவற்காரனான தருமனின் தோற்றத்தைக் கண்டு சிங்காரமுதலியார் என்று தவறாகக் கருதிய வீரப்ப முதலி, தருமனிடம் தன் மறுமணக் கதையைக் கூறி உதவிகோரினார். வீரப்ப முதலியின் அறியாமையை தனக்கு சாதகமாக்கிக் கொண்ட தருமன், தானே முன்னின்று திருமணத்தை நடத்துவதாகக் கூறினான்.

சமூக உறவுகளில் தனக்கான இடத்தை மனிதன் நிலைநிறுத்தும் போதுதான் சமூகத்தின் அங்கமாக ஏற்கப்படுகிறான் அவ்வாறு தன்னை நிலைநிறுத்த இயலாதவன் மிருகங்களின் இடத்திலேயே அவனவன் செயலுக்கேற்ப வைக்கப்படுகிறான்.

கிழவனுக்கா இந்த இளமங்கை என்ற ராமசாமி, சீனிவாசன் போன்றவர்களின் எண்ணத்துடனேயே இந்த சமூகமானது பல சமயங்களில் நன்மையையும் தீமையையும் தம்தம் கருத்துக்களாக கூறி மனதை மாற்ற முயலும்.

தருமன் தன்னிலையை உயரர்திக்கொள்ள குப்பன் முதலானவர்களின் வாழ்க்கையைக் கெடுத்ததோடு வீரப்ப முதலியிடம் இருந்து கற்கண்டின் வாழ்க்கையைப் பாதுகாத்து திருமணம் செய்து கொள்கிறான். இதன் மூலம் வீரப்ப முதலியின் பார்வையில் தருமன் மிருகமாகக் காட்சியளித்தாலும் கற்கண்டின் வாழ்வைக் காப்பாற்றி தெய்வநிலைக்கு உயர்ந்ததைக் காண முடிகிறது.

இவ்வாறு பல்வேறு சூழ்நிலைகளை சந்திக்கும் தனிமனிதனே தனக்கு எது இன்றியமையாதது என்பதை உணர்ந்து முடிவெடுக்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்படுகிறான்.

குடும்ப உறவுகளால் மனமாற்றம்

குடும்ப அமைப்பு என்பது காலங்காலமாக இருந்து வரும் மரபு சார்ந்த மனப்போக்குகளால் அமைக்கப்பெறுவது. கணவன் – மனைவி இருவரின் உளநடத்தைகளால் அவர்களுடைய உறவுமுறையில் ஊடாட்டம் நிகழ்கிறது. அதனால் அவலமும், விரக்தியும், தாங்கள் யார் என்பது பற்றிய சிக்கலும், கொலை உணர்வும், தற்கொலை உணர்வும் எனப் பல்வேறு நடத்தைப் போக்குகள் உருவாகின்றன.

மனித மூளையின் வளர்ச்சியானது தனது பாரம்பரியத் தன்மையோடு சமூக நிகழ்வுகளையும் உள்வாங்கி கிரகித்துக்கொண்டு அன்றாடம் தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது. தன்னைச் சுற்றி இயங்கும் புறஉலகை கண்டு தானும் அதனோடு சேர்ந்தியங்கி **உலகத்தோடு ஒட்ட ஒழுகல்** என்பதன் படி தன்னை நிலைநிறுத்திக்கொள்கிறது.

அவ்வாறே துரைசாமி தான் பட்ட கடனுக்காக மகள் என்றும் பாராது கற்கண்டின் வாழ்க்கையை அழிக்க முடிவெடுக்கின்றார். கற்கண்டு தன் தகப்பனின் மரியாதைக்காகவும், வாக்கிற்காகவும் மதிப்பளித்து வயது முதிர்ந்த வீரப்ப முதலியைத் திருமணம் செய்து கொள்ள சம்மதிக்கிறாள். பின்னர் தருமனின் ஆள்மாறாட்ட நாடகத்தில் பங்கு கொண்டவளாக தருமனைத் திருமணம் செய்து கொள்கிறாள். கிழவனைக் காட்டிலும் **கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன்** என்கிற பாங்கில் வீரப்ப முதலியை ஏமாற்றினாலும் தருமனை ஏற்றுக்கொள்கிறாள்.

தனக்கு வேண்டிய கல்வியின் தன்மையையும், வாழ்க்கைத் துணையாகத் தனக்குப் பொருத்தமானவரைப் பற்றிச் சிந்தித்து தேர்ந்தெடுக்கவும், இளையோர் இளமை எனும் இப்பருவத்தில் தான் முயற்சி செய்கின்றனர். பலசமயங்களில் குடும்பத்தாரும் சுயநலக்காரர்களாக, மனிதாபிமானம் அற்ற செயல்களில் ஈடுபடுபவர்களாக மாறும் நிலை தோன்றலாம். அந்த சூழ்நிலைகளையும் மனிதர்களையும் சந்தித்து மீண்டு வர நனவு மனத்தின் உதவியை நாடிட வேண்டும்.

மனித மனமாற்றத்திற்கான காரணங்களும் தீர்வுகளும்

மனிதமனம் பல்வேறு மாற்றம் அடைவதற்கு முழுமுதற்காரணம் மனதின் நிலைப்புத்தன்மை இன்மையே ஆகும். எந்தவொரு செயலாக இருப்பினும் முதலில் அச்செயலின் முக்கியத்துவம், எதிர்கால விளைவுகள் நன்மையா அல்லது தீமையா, போன்ற பல்வேறு வினாக்களை எழுப்பி அவற்றிற்கு தீர்வு காண வேண்டும். அவ்வாறு கிடைக்கும் தீர்வில் எந்த வித முரண்பாடான கருத்துக்களோ விளைவுகளோ தோன்றாது என்று உறுதியாக அறிந்த பின்னரே அச்செயலில் முடிவு காண வேண்டும்.

முரண்பட்ட விளைவுகள் ஏற்படுமாயின் அவைகளை அடியோடு மறந்து வேறு செயலில் மனதை ஈடுபடுத்துவதே சிறந்ததாகும். அவ்வாறின்றி அச்செயலைத் தொடர்ந்தால் அம்முரண்பாடு பிற நல்ல செயல்களையும் அழிக்கும் ஆற்றல் மிக்க சக்தியாக உருவெடுக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

மனிதன் வாழ்வில் சந்திக்கும் சிக்கல்களுக்கு உளவியல் வழி தீர்வுகளை அறிவியல் நாளும் கண்டு, அச்சிக்கல்களைத் தீர்த்து வைத்துக்கொண்டு வருகிறது.

“பால் உணர்ச்சிகள் ஒடுக்கப்படுதல், அதிகமாகப் பாலுறவில் ஈடுபடுதல், வறுமை, குடும்பச்சிதைவு, காதல்தோல்வி, மணமுறிவு, பழமையைப் பாதுகாவாமை, கூட்டுக்குடும்பநிலை மாறித் தனிக்குடும்பங்கள் சமூகத்தில் தோன்றுதல், தொழில்மயமான நாகரிகம் விரைவாகப் பரவுதல், நுண்ணறிவுத்திறன் குறைவு, நெருங்கியவர்கள் இறந்து விடுதல், திடீரெனப்பெருஞ்செல்வந்தராதல், தலைப்பிரசவம் முதலியன ஒருவரது உளநோய்க்குக் காரணமாகின்றன என்று உளவியலின் உளநலத்துறை ஆராய்ந்து கண்டுள்ளது” **(தா.ஏ.சண்முகம், உளவியல், பக்.9–11)**

இதனையே கற்கண்டை மணக்க எண்ணிய வீரப்ப முதலியின் வாழ்க்கை நமக்கு உணர்த்துகிறது. மனஇறுக்கங்களிலிருந்து முதியோர் விடுபட அவர்களுக்கு உள்ள சிக்கல்களை பிறர் புரிந்து நடந்து கொள்ள வேண்டும்.

குடும்பத்தாரை இழந்து, தன் சொந்த ஊரில் மதிப்பிழந்து, அறியாமையால் தன்னிடமிருந்த செல்வத்தையுமிழந்து தான் அடைய நினைத்ததையும் அடைய இயலாது ஏமாற்றப்பட்ட நிலையை உணர்ந்து கூனிக்குறுகி போகின்றார்.

மேலைநாடுகளைப் போன்றே நம் நாட்டிலும் முதிர்வயதில் எவ்வாறு வாழ்நாட்களை பயனள்ள வகையில் கழிப்பது? என்பதை உளவியல் அடிப்படையில் தம் கற்கண்டு நாடகம் வழியாக பாரதிதாசன் உணர்த்தியுள்ளார்.

செவ்விலக்கியத்தில் நாட்டுப்புறச் சிந்தனைகள்

***முனைவர் க.முத்தழகி,** *தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர், பான் செக்கரஸ் மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்.*

தமிழ்மக்கள் மண்ணோடும் மரபோடும், பண்பாட்டுப் பாரம்பரியத்தோடும் இணைந்து வாழ்ந்து வருகின்றனர். பண்டைய காலந்தொட்டு இக்காலம் வரையிலும் தொடர்ந்து அவ்வக்காலத் தன்மைகளை வெளிக்கொணரும் வகையில் பல படைப்புகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. இவ்விலக்கியங்கள் யாவும் தமிழர்கள் உயர்ந்த சிந்தனைகளோடு வாழ்ந்ததை விளக்குகின்றன.

தனி மனிதனின் எண்ணங்கள், கற்பனைக் கனவுகள், ஏக்கங்கள், நினைவுகள் ஆகிய அத்தனை உணர்வுகளையும் வெளிப்படுத்துவதில் நாட்டுப்புற இலக்கியங்கள் சிறந்து விளங்குகின்றன. கால ஓட்டத்தில் வீழ்ந்து விடாமல் மக்களின் மனச் சாரத்தைத் தன்னுள் அடக்கி வெளிப்படுத்துவதில் முன்னோடியாக நாட்டுப்புற இலக்கியங்கள் இருந்து வருகின்றன. எனவே செம்மொழி இலக்கியங்கள் எனப் போற்றப்பட்டு வருகின்ற நாற்பத்தியொரு நூல்களிலும் நாட்டுப்புறம் அதாவது வாய்மொழிப் பாடல்கள் அக்கால படைப்புகளிலே இருந்து வந்துள்ளமையை ஆராய்ந்து அறியலாம்.

தொல்காப்பியத்தில் நாட்டுப்புறப் பாடல்கள்

தொல்காப்பிய காலத்திற்கு முன்பே நாட்டுப்புறப்பாடல் வழக்கத்தில் இருந்திருக்கின்றன என்பதை அனைவரும் அறிவர். நாட்டுப்புறப் பாடல்கள் மட்டுமின்றி நாட்டுப்புற இலக்கியங்களாகக் கருதப்படும் பழமொழியும், விடுகதையும் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளன.

" பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்

பாட்டின் இயல பண்ணத்தி னியல்பே" **(தொல்.செய்-149)**

என்ற நூற்பாவில் பண்ணத்தி என்பது நாட்டுப்புறப் பாடல்களையே குறிக்கின்றன.

பழமொழியைத் தொல்காப்பியர் முதுமொழி என்றும் முதுசொல் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

"நுண்மையும் சுருக்கமும் ஒளயுடைமையும்

எண்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்

குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்

ஏது நுதயை முதுமொழி என்ப" **(தொல்.செய்-177)**

இந்நூற்பாவில் பழமொழியை முதுமொழி என்ற சொல்லால் குறிப்பிடுகிறார். மேலும் அதற்கு

"பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே

அங்கதம் முதுசொல்லோடு அவ்வேழ் நிலத்தும்" **(தொல்.செய்.179)**

எனப் பழமொழியின் இலக்கணத்தை வரையறை செய்து விளக்கும் பொழுது முதுசொல் என்று குறிபிடுவது பழமொழியையே என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

நாட்டுப்புறப் பாடல்களில் மற்றொரு பகுதியயாகிய விடுகதையைத் தொல்காப்பியர் பிசிஎன்ற சொல்லால் குறிப்பிடுகிறார்.

“ஒப்பொடு புணர்ந்த உவமத்தானும்

தோன்றுவது கிளந்த துணிவினாலும்

என்றிரு வகைத்தே பசிவகை நிலையே”

எனத் தொல்காப்பியர் விடுகதையைப் பற்றிக் கூறியுள்ளார். உவமைபோல வருவது வெளிப்படையாக வருவது என இருவகையால் பிசி வருமெனக் கூறியுள்ளார்.

“பிசியும் நொடியும் பிறர் வாய்கேட்டு”

என மணிமேகலை விடுக்கதையைப் பற்றிக் கூறுகிறது. விடுகதைகளின் வளர்ச்சியே அங்கதம் சிலேடை எனப் புலவர் சுரேந்திரன் கூறியுள்ளார்.

சங்க இலக்கியத்தில் நாட்டுப்புறப்பாடல்கள்

சங்ககால மக்கள் நிலத்தைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகையாகப் பிரித்துள்ளனர். அந்த நிலங்களுக்குரிய தெய்வங்களையும் வழிப்பட்டுள்ளனர்.

திருமுருகாற்றுப்படையில் முருகக் கடவுளன் முன் மக்கள் ஆடிப்பாடி மகிழ்ந்தனர் என்பதை,

“நாவியல் மருங்கின் நவிலப்பாடி” (எனவும்)

“நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி” (எனவும்)

“ஆடுகளஞ் சிலம்பில் பாடி” (எனவும்)

“யானறி அளவையின் ஏத்தி”

என விளக்கிக் காட்டுகிறார். நக்கிரர் பொருநராற்றுப்படையில்

“குறிஞ்சி பரதவர் பாட, நெய்தல்

நறும்புங் கண்ணி குறவர் சூடக்

காணவர் மருதம் பாட”

என முடத்தாமக் கண்ணியார், ஐவகை நில மக்கள் பாடிய பாடல்களைக் குறிப்பிடுகிறார்.

நற்றிணை காட்டும் உடுக்கைப் பாடல்கள்

உடுக்கை அடித்துப் பாடும் பாடல்களை புசாரிப் பாடல் என்பர்.

“அணங்கென உணரக் கூறி வேலன்

இன்னியங் துறங்கப் பாடி

பன்மலர் சிதறிப் பரவுறு பணிக்கே” (நற்-323)

என்றும் நற்றிணைப் பாடலில் உடுக்கையடித்துக் கொண்டு மலர்களை அர்சித்துப் புசாரிகள் பாடும் புசாரிப் பாடலை நற்றினை கூறுகிறது. துர்கையைப் பற்றிப் பாடும் வரிப் பாடலும், முல்லை நிலக் கடவுளாகிய திருமாலைப் பற்றிப் பாடும் குரவைப் பாடலும், அக்கால மக்களால் பாடப்பட்டுள்ளன என்பதைக் கலித்தொகை பாடல்களால் அறியலாம்.

ஏற்றதும் மலர், ஊட்டுவம் அவி

கேட்டும் பாணி எழுதுதும் கிணை முருகன்

தாள் தொழு தண் பரங் குன்று ”

என்று அழகுபட எடுத்துரைக்கின்றார்.

சிலம்புகாட்டும் நாட்டுப்புறப் பாடல்கள்

சங்ககாலத்தில் வாழ்ந்த குடிகளுள் பாணன், பாடினி, கூத்தர், விரலியர் ஆகியோர் நாட்டுப்புறப் பாடல்களைப் பாடியும் ஆடியும் சென்றனர் என்பதை ஆற்றுப்படை நூல்கள் மூலம் தொந்துக் கொள்ளலாம். இவர்கள் ஆடிப்பாடி மகிழ்ந்து சென்று அரசரை மகிழ்வித்துப் பொருளும் பெற்றிருக்கின்றனர். ஆடிப்பாடி மகிழும் பொழுது ஆணும் பெண்ணுமாய்க் கலந்து துணங்கைக் கூத்து ஆடிய செய்தியைக் கலித்தொகை மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செம்மொழி இலக்கியமாகிய சிலப்பதிகாரத்திலே, கானல் வரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, ஊர்சூழ்வரி, குன்றக்குரவை, ஆகிய இடங்களில் பல்வேறு ஆடல் பாடல்களை தெரிந்துக் கொள்ள முடிகிறது.

மூவேந்தரும் பாரியின் பரம்பு மலையினை கைப்பற்ற முற்றுகையிட்டனர். பெரும் படையுடன் வந்த மூவேந்தர்களையும் கண்ட கபிலர் நீவிர் பாரியைப் போரிட்டு வெல்ல முடியாது எனக்கூறி

விரைஒலி கூந்தல் விறிலியர் பின்வர

ஆடினீர் பாடினீர் செலினே

நாடும் குன்றும் ஒருங்கீயும்மே”

வெல்லும் வழியையும் கூறுகிறார் கபிலர்.

குறுந்தொகையில் தோழி ஒருத்த

அகவன் மகளே! பாடுக பாட்டே

இன்னும் பாடுக பாட்டே! அவர்

நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே”

(குறு - 23)

எனப் பாடியுள்ளாள். மலையைச் சிறப்பித்துப் பாடும் பாடல்களும் சங்ககாலத்தில் இடம் பெற்றிருக்கின்றன என்பதை உணரலாம்.

குறிஞ்சி நில மக்கள் குறிஞ்சிப் பண்ணைப் பாடிக்கொண்டு குரவை ஆடியவர்கள் என்பதை

"தினைகுறு மகளிர் இசைபடு வள்ளை"

(மலைபடுகடாம் - 342)

எனவும்

"குறவர் தம் பெண்டிரோடும்

மான்தோல் சிறுபறை நறங்கக் கல்லென

வான்தோய் மீமிசை அயரும் குரவை"

எனவும் மலைப்படுகடாத்தில் பெருங்குன்றூர்க் கிழார் பாடியுள்ளார்.

மதுரைக்காஞ்சியில், மாங்குடி மருதனார் நெய்தல் நிலமக்கள் இன்னிசை எழுப்பிக் கூடிப் பாடிக் குரவை ஆடும் சிறப்பினை,

"இரும்புள் ஓம்பும் இசையே, என்றும்

மணிப்பூ முண்டகத்து மணல்மலி நானல்

பரதவ மகளிர் குரவையொடு ஒலிப்ப"

எனப் பாடியுள்ளார்.

மதுரைக்காஞ்சி, குறிஞ்சிப்பாட்டு கூறும் தொழிற் பாடல்கள்

தொழிலின் கடுமையைக் குறைப்பதற்காகவே தொழிற் பாடலைப் பாடுகின்றனர். நாட்டுப்புற மக்கள், நீர் இறைப்பவர் பாடும் பாட்டினையும், கிளி கடியும் பாட்டினையும் மதுரைக்காஞ்சியில் காலையில் தினைப்புனங் காப்பர். அப்போது தினையைக் கவரவரும் கிளியை ஓட்ட, ஆலோலப் பாட்டிசைப்பர்.

"கிளிகடி மகளிர் விளிடு பூசல்"

பெருங்கௌசிகனார் பாடியுள்ளார்.

"புள்ளார் இயந்த வியங்குமலைச் சிலம்பின்

வள்ளுயிர் தெள்விளி இடையிடை பயிற்றிக்

கிள்ளை ஒப்பியும்"

எனக் குறிஞ்சிப் பாட்டில் கபிலர் ஆலோலேப் பாடல்களைக் குறிப்பிட்டுள்ளதை அறியலாம்.

நடவு நடும் பொழுது, களையெடுக்கும் பொழுதும், நெல்லரியும்பொழுதும்உழவர்கள்பாடல்களைப்பாடுவார்கள்.

சிலம்பில் கோவலனும், கண்ணகியும், கவுந்தியுடன் காட்டு வழிச் செல்கின்ற பொழுது உழவுப் பாடல்களைக் கேட்பதாக இளங்கோவடிகள் பாடியுள்ளார்.

"அகவினம் பாடுவோம் வா தோழி"

என்று உலக்கைப் பாட்டினை வள்ளனைப் பாட்டைப் பாட அழைப்பதைக் கலித்தொகையில் காணமுடிகிறது.

புறநானூறு காட்டும் சடங்குப் பாடல்கள்

திருமண காலத்தில், ஒவ்வொரு வீடாகச் சென்று காய்கறிகள் சேர்த்து வரும் சடங்கினைத் திருவாதிரை திருமணச் சடங்கு என்பர்.

இச்செய்தியை,

"பொய்த்தல் மகளையாய்ப் பிறன்மணைப் பாடிக்

எய்திய பலர்க்கீத்த பயம்" (புற-238)

புறநானூறு, சிலப்பதிகாரம் கூறும் ஒப்பாரிப் பாடல்கள்

இறந்தபிறகு மனம் விட்டுப்பாடி அழும் பாடல்களே ஒப்பாரி பாடல்களாகும். இறந்து விட்ட இளவெளமனைக் காணச் சென்ற புலவர் பெருஞ்சித்தனார்.

தம் பாடலில் கணவர் இறந்தபிறகு பெண்கள் ஒப்பாரி பாடும் தன்மையைத்

"தொடிகழி மகளிரின் தொல்கவின் வாடிப்

பாடுநர் கடும்பும் பையென் றனவே"

எனப் புறநானூற்றில் பாடியுள்ளார்.

பாரி இறந்தபின், பாரி மகளிர் பாடும்

"அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவின்"

என்ற புறநானூற்றுப் பாடலில் ஒப்பாரி பாடலைக் காணலாம். சிலப்பதிகாரத்தில் ஊர்சூழ் வாயில் கணவனை இழந்த கண்ணகி துன்புற்று பாடும் பாடல்கள் ஒப்பாரி பாடலை ஒத்துள்ளது.

பழம்பெரும் இலக்கணமாகிய தொல்காப்பியத்தில் பண்ணத்தி என நாட்டுபடபுறப் பாடல்களைக் கூறியுள்ளார். செம்மொழி இலக்கியமான திருமுறுகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, நற்றினை, பரிபாடல், புறநானூறு, குறுந்தொகை, மலைபடுகடாம், குறிஞ்சிப்பாட்டு, கலித்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களில், நாட்டுப்புறப் பாடல்களில் மனம் செலுத்தி இன்புற்று, அவற்றைப் பற்றித் தம் நூல்களில் பல பாடல்களைப் பாடியுள்ளார்கள் என்பதை இவற்றிலிருந்து தெரிந்துக் கொள்ளமுடிகிறது.

ஆன்மா, அறம் வேறு பற்றிய கருத்துக்களில் வளையாபதியும், மணிமேகலையும்

*மா.விஜயலெட்சுமி, *முனைவர் பட்ட ஆய்வாளர், பாரதிதாசன் உயராய்வு மையம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி – 24.*

முன்னுரை

ஐம்பெருங்காப்பியங்கள் சிறப்பாக பேசப்படுகின்றன. அவற்றில் வளையாபதியும் மணிமேகலையும் உயிர்களை பலியிடுவது பாவச்செயல் என்று கூறுகிறது. எனவே உயிரகளிடம் அன்புக்காட்ட வேண்டும். கொல்லுவதும் உண்ணுவதும் பாவமே என்பதையும், எதைச் செய்யக்கூடாது, எதைச் செய்ய வேண்டும் என்பதை தீர்மானிக்க வேண்டும். செல்வம் என்பது நிலையானது அல்ல. தவம் செய்வது மனிதனின் வாழ்க்கை அமைதியை உண்டாக்கும். வேதங்களினால் மனிதன் நல்லறம் மேற்கொள்வதும், ஊன் உண்ணுவது ஆன்மாவை அறம் வென்றிடும் என்பதையும், குணம் அறிந்து புரிந்துக்கொள்வதும் பற்றி இக்கட்டுரையில் ஆராய்வது நோக்கமாக அமைகிறது.

எதைச் செய்யக்கூடாது

பொய் சொல்லக்கூடாது, புறங்கூறக்கூடாது, இழிவாக பேசக்கூடாது, மற்ற உயிர்களைக் கொன்று உணவாக உட்கொள்ளக்கூடாது, தீயவர்களுடன் நட்புறவுக்கூடாது. என்பதை வளையாபதி சுட்டுகிறது. இதனை,

பொய்யன் மின்புறம் கூறன்மின்; யாரையும்

வையன் மின்; வடி வல்லன் சொல்லி நீர்

உய்யன் மின்; உயிர் கொன்றுண்டு வாழுநாள்

செய்யன் மின்; சிறி யாரொடு தீயன்மின்

என்ற பாடல்வரிகள் உணர்த்துகின்றன.

இதே கருத்தை மணிமேகலையில் துன்பத்தைப் போக்குக என்று அருகில் இருந்த மணிமேகலை தெய்வத்தை பணிந்து இவ்வுலகில் அறமே அரசாட்சி புரியவேண்டும் எனவும், அறத்தின் ஆணையே இவ்வுலகில் உள்ள மக்களுக்காக பிறவி தோறும் மாண்புடையவள் அத்துன்பத்தைப் போக்க மணிமேகலை தெய்வமானது அறத்தைக் காக்க தோன்றியது. என்பதை,

எவ்வம் உற்றான் – தனது எவ்வம்தீர் எனப்

பவ்வத்து எடுத்து, “ பாரமிதை முற்றவும்

அறஅரசு ஆளவும், அறஆழி உருட்டவும்

பிறவிதோறு உதவும் பெற்றியள்” என்றே

என்ற பாடல்வரிகள் கூறுகின்றன.

களவு கொலை தவிரத்தல் வேண்டும்

பிறர் பொருள்களைக் களவாட கூடாது, களவாடியப் பொருளைப் பயன்படுத்தல் கூடாது, நன்மை பெறவேண்டும் என்ற உணர்வோடு உயிர்களைப் பலியிடக்கூடாது. அவை நம்பகத்தன்மை அற்ற நிலை, அதேபோல் வறுமையில் வாழ்பவர்களை இழிவாக பேசுதல் கூடாது என்று வளையாபதி உணர்த்துகிறது. இதனை,

கள்ளன் மின்;கள வாயின யாவையும்

கொள்ளன் மின்;கொலை கூடி வருமறம்

எள்ளன் மின்;இலர் என்றெண்ணி யாரையும்

நள்ளன் மின்;பிறர் பெண்ணோடு நண்ணன்மின்

என்ற பாடல்வரிகள் மூலம் அறியலாம்.

மேலும், மணிமேகலையில் ஆதி புத்தன் உரைத்த கருத்து குற்றமற்ற கருத்தற்றவைகள். அவை ஒரு பொருளை கண் முன்னே கண்டால் அதை நேரமுகமாக அறியவேண்டும், மற்றொன்று சாதி, குணம், தொழில் முதலியவற்றை அனுமானத்தில் காணுதல் முறையன்று அதற்கு பிரத்தியோகம் என்பதை அறிவோம். என்பதை,

நொடிகுவள், நங்காய்; நுண்ணிநின் கேள்,நீ;

ஆதி சிநேந்திரன் அளவை இரண்டே,

ஏதம்இல பிரத்தியம், கருத்துஅளவு என்ன;

சுட்டுணர் வைப்பிரதி தியக்கம் எனச்சொலி

விட்டனர், நாம சாதி, குணம், கிரியைகள்;

என்ற பாடல்வரிகள் உணர்த்துகின்றன.

செல்வம் நிலையற்றது தவம் நிலையானது

அரசர்கள் கட்டளைகளின் காரணமாக திருடுவது, அழிப்பது போன்றவை தவறு. பொருள்கள் செல்வம் நிலையானது அல்ல எனவே செல்வத்தின் மீது ஆசை வைப்பது துன்பத்தையே தரும். துறவிகள் என்பவர்கள் பொருளின் மீது ஆசைபடுதல் கூடாது. பிறருடைய பொருளுக்கு ஆசைபடாமல் வாழ்தலே சிறந்த பண்பு. அப்படி வாழ்ந்தால் அவர்கள் மோட்சம் அடைவர். இதனை,

வெள்ளம் மறவி விறல் வேந்தர் தீத்தாயம்

கள்வர் என்று இவ்வாறிற் கைகறப்பத் தீரந்தகலும்

உள்ளில் ஒருபொருளை ஒட்டாது ஒழிந்தவர்

எள்ளும் பெருந்துயர்ளோய் எவ்வம் இகப்பவோ.

என்ற பாடல்வரிகள் மூலம் காணமுடிகின்றன.

தருமம் என்பது குற்றமற்ற எண்ணங்களோடு சாதிக்கப்பட வேண்டும். அதுவே தருமம், ஒலி நிலையற்றது பக்கமாக கூறுவது பக்தி தன்வசம் இனி, பக்கம் எனவே இருவகையாக கூறுவது சபக்கத் தொடர்ச்சி, விபக்கத் தொடர்ச்சி எனவும் குடல்போல் என்று சொல்லப்படும் எனவே வாழ்க்கை நிலையானது அல்ல, நிலையற்றதும் அல்ல என்பதை,

தூய காரிய ஏதுச் சுபாவம்

ஆயின், “சத்தம் அநித்தம்” என்றால்

பக்கம், “பண்ணப் படுத லால்” எனல்

பக்க தன்ம வசனம் ஆகும்;

என்ற பாடல்வரிகள் கூறுகின்றன.

வேதங்களும் நல்லறங்களும்

எல்லா உயிர்களிடமும் அன்போடும் இரக்கத்தோடும் பழக வேண்டும். ஒவ்வொரு நாளும் நற்செயல்கள் செய்தல் வேண்டும். நன்மைகளை மற்றவர் அறிந்து கொள்ளும்படி எடுத்துச்சொல்லுதல் நல்லறமே, தீவினைகளை நினைத்தாலே தவறு துன்பங்களை எண்ணிப் பயந்து அவற்றை கைவிடுதல் வேண்டும். என வளையாபதி கூறுகிறது. இதனை,

ஆற்றுமின், அருள் ஆருயிர் மாட்டெல்லாம்;

தூற்று மின் அறம், தோட் நனி துன்னைமின்

மாற்று மின் கழி மாயமும் மானமும்

போற்று மின்பொரு ளாஇவை கொண்டு நீர்.

என்ற பாடல்வரிகள் வழியாக அறியலாம்.

அதையே, மணிமேகலையில் மூன்று வேதங்கள் கையாளப்படுகிறது. அவற்றில் குற்றமில்லாதனவும் குற்றமுடையனவும் நல்லவை, நன்பக்கம், நல்லது ஏதுமில் திட்டாந்தம் என்றும், தீயவை பக்கப் போலி, ஏதுப்போலி, திட்டாந்தப் போலி என்றும் தீயபக்கம், தீயவேது, தீய என வழங்கப்படுகின்றன.

இதனை,

ஒட்டிய உபநயம், நிகமனம் இரண்டும்

திட்டாந் தத்தி லேசென்று அடங்கும்

பக்கம், ஏது, திட்டாந் தங்கள்

ஒக்க நல்லவும் தீயவும் உள.

என்ற பாடல்வரிகளில் காணமுடிகின்றன.

ஊன் உண்ணாமையும், ஆன்மாவின் அறநெறி

மனித பிறப்பால் பல்வேறு விதமான துன்பங்கள் அனைவருக்கும் ஏற்படுகிறது. அந்தத் துன்பங்களை ஆராய்ந்து பார்த்து உயிர்கொலை செய்வது பாவம் என அறிதல் வேண்டும். எனவே நல்லறங்கள் மேற்கொள்வது அவசியம் புலால் உணவுகளை விரும்பி உண்ணுவது பாவச்செயல். அவை அனைவரும் உண்டு மகிழ்வது தீமையைத் தந்து பாவத்தை சேர்ப்பதாக அமைகின்றன. இதனை,

பிறவிக் கடலகத்து ஆராய்ந்து உணரின்

தெறுவதில் குற்றம் இலார்களும் இல்லை

அறவகை ஓராவிடக்கு மிகை வோர்

குறைவின்றித் தம்சுற்றம் தின்றனார் ஆவார்.

என்ற பாடல்வரிகள் கூறுகின்றன.

மணிமேகலையில் அப்பிரசித்த விசேடமானது தத்தமக்கு எதிரிகளை வாதித்து சாதிக்கும் பொருட்டு அறியாமல் இருந்தாலும் பௌத்தனும் சாங்கியனும் வாதிப் பிரதிவாதியாகி செய்த தவறுகளை ஒப்புக்கொண்டு பொருள்களை நிலைப்பெறக் கொண்டாலும் அவை நிலையற்ற தன்மைக் கொண்டவையாக கருதப்படுவார். இதனைக் குற்றமாகக் கருதப்படுவார். என்பதை,

அப்பிரத சித்த விசேடணம் ஆவது

தத்தம் எதிரிக்குச் சாத்தியம் தெரியானம்,

பௌத்தன் மாறாய் நின்றசாங் கியனைக்

குறித்து "சத்தம் விளாசி" என்றால்

அவன்அவி நாச வாதி ஆதலின்

சாத்திய விளாசம்அப் பிரசித்தம் ஆகும்.

என்ற பாடல்வரிகள் மூலம் காணலாம்.

ஊன் உண்ணாமை, தன்மி விசேட விபரீத பயன்கள்

உயிர்களிடத்து வேறுபாடுகளின் அவற்றை கருணையுடன்பாதுகாத்துக்கொள்ளவேண்டும். உயிர்களைக் கொன்று அவற்றை உண்டு சுவைப்பது பாவச்செயல் என்பதாகும். எனவே, அவற்றிடம் அன்பு கொண்டு வாழ்ந்தால் தேவர்களோடு வாழும் வாழ்க்கை உங்களுக்கும் உண்டு, அவற்றை தொழுது வணங்கினால் சந்திரனைப் போன்று ஒளிமயமான வாழ்வினை வாழ்ந்து மகிழ்வீர்கள்.

இதனை,

உயிர்கள் ஓம்புமின் ஊன்விழைந்து உண்ணன்மின்

செயிர்கள் நீங்குமின் செற்றம் இகழ்ந்து ஓரீஇக்

கதிகள் நல்லுருக் கண்டனிர் கைதொழு

மதிகள் போல மறுவிலிர் தோன்றுவீர்.

என்ற பாடல்வரிகள் மூலம் காணமுடிகின்றன.

மணிமேகலையில் பாவத்தை விட அபாவமாகச் சாதிப்பது "பொருள், குணம், கருமம்" போன்ற நீக்கி உண்மையான வாழ்க்கை வாழ வேண்டும். எடுத்துக்காட்டாக ஒரு தொழிலைச் செய்யும் போது அவற்றிற்கு எந்த விதமான பங்கம் வகிக்காமல் குணத்தோடு பேசி செயல்பட வேண்டும். இதுவே தன்மி விசேட விபரீத சாதனம் என்று அறியமுடிகிறது. என்பதை,

தன்மி விசேட விபரீத சாதனம்

தன்மி விசேட அபாவம் சாதித்தல்

முன்னம் காட்டப் பட்ட ஏதுவே

பாவம் ஆகின்றது; கருத்தா வுடைய

கிரியையும் குணமும்ஆம்–அதனை விபரீதம்

ஆக்கியது ஆதலான், தன்மி விசேடம்.

என்ற பாடல்வரிகள் கூறுகின்றன.

முடிவுரை

மனிதன் தன் நிலையில் இருந்து பல விதமான மாற்றங்களை அடைகிறான். அந்த மாற்றத்தின் நிலையையும் அவன் வாழ்க்கையையும் ஒரு முறை சிந்தித்து செயல்பட்டால் மட்டுமே அவன் வாழ்க்கையின் எல்லையை அடையமுடியும். அப்படியென்றால் எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்ய வேண்டாம் என்று சிந்திக்க வேண்டும். அச்சிந்தனையே ஆன்மா என்ற அறத்தை வழிநடத்த முடியும். அந்த அறம் பாவங்களைத் தவிர்த்தல் வேண்டும். மற்றவர்களிடம் அன்பு செலுத்துதல் வேண்டும். கொலை, கொள்ளை செய்தல் கூடாது. அறம் செய்தல் வேண்டும். மற்றவர்கள் நம்மை உணர்த்தும் அளவிற்கு நன்மை செய்தல் வேண்டும். ஊன் உண்ணுவதை தவிர்த்தல் வேண்டும். சாதிக்க வேண்டும் என்றால் தவறுயின்றி சாதிக்க வேண்டும். ஆசைகள் அறவே மறுக்கப்பட வேண்டும். உதவும் குணம் கொண்டவனாக இருத்தல் அவசியம் என்பதை இந்த இரு காப்பியங்கள் வழி அறியலாகும் செய்திகளாகும்.

திருஞானசம்பந்தர் தேவாரத்தில் முப்பொருள் உண்மைகள்

****ச.உலகநாயகி,** *முனைவர் பட்ட ஆய்வாளர், தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி, தருமபுரம், மயிலாடுதுறை.*

முன்னுரை

சித்தாந்தம் என்ற சொல்லுக்கு முடிந்த முடிவு என்பது பொருள் ஆகும். சித்தாந்தத்தில் அடிப்படையாகக் கொள்ளப்படும் பொருள்கள் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளாகும். திருஞானசம்பந்தரால் அருளப் பெற்ற முதல் மூன்று திருமுறைகளில் இடம் பெற்றுள்ள முப்பொருள் உண்மைகள் இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

பதி

பதி என்பது இறைவனைக் குறிக்கும் சித்தாந்தக் கலைச் சொல். கடவுள், இறை, பதி என்பன ஒரு பொருளன. பதி என்னும் சொல் காப்பவன் என்னும் பொருளுடையது. தலைமைத் தன்மையும் காக்கும் பண்பும் உடையவனே பதியாவான்.

இறைவன் ஒருவன்

இறைவன் ஒருவன் என்பது சைவசமயக் கருத்தாகும். ஒன்றாகிய இறைவன் பலவாகிய உயிர்களை இயங்கும்படி செய்கின்றான். இறைவன் ஒருவன் என்பதை,

"**ஏகபெருந்தகை**" (1:4:4) "**ஒருத்தன்**" (1:111:1) "**உலகிற்கொரு முதலானவன்**" (1:6:6) "**ஒருவன்**" (1:93:9) "**ஒரு தலைவன்**" (1:131:1), எனவரும் ஞானசம்பந்தர் வாக்கால் அறியமுடிகிறது.

பதி அநாதி

அநாதி என்பதற்கு ஆதியற்றது என்பது பொருளாகும். சித்தாந்தம் உரைக்கும் உண்மைப் பொருள்கள் மூன்றும் தனித்தனிப் பொருள்களாகும். ஒன்று மற்றொன்றால் தோற்றுவிக்கப்பட்டதன்று. இவை நிலைபேறுடையவை. தோற்றமில்லாததால் முடிவுமில்லை. இதுவே 'அநாதி' எனச் சித்தாந்தத்தால் சுட்டப்படுகிறது. இறைவனின் அநாதித் தன்மையைத்

"துஞ்சுநாள் துறந்து தோற்றமுமில்லாச் சுடாவிடுசோதி" (1:41:4) "பிறவாதவனே" (2:20:6)

"பிறப்பிலி" (2:77:3), "பிறப்பிலாப்பெருமானார்" (3:64:7)

என ஞானசம்பந்தர் தம் பாடல்களில் குறிப்பிடுகிறார்.

பதி எங்கும் நிறைந்தவன்

பதி ஒருவனே எங்கும் எதிலும் நீக்கமற நிறைந்தவனாகக் காணப்படுகிறான். இதனைச் சம்பந்தரின்

"எல்லாம் ஆயவன்" (1:113:2) "நிறையவன்" (1:110:6) "எங்குமாயிருந்தவர்" (3:93:7) "எங்குமாகி நின்றான்" (2:6:6)

எனும் வாக்கால் அறியமுடிகிறது.

பதியின் மூவகைத் திருமேனிகள்

இறைவன் உருவம், அருவம், அருவுருவம் என மூவகைத் திருமேனிகளில் நின்று அருள்புரிகிறான்.

உருவம்

உருவம் என்பது கண்ணுக்குப் புலனாவது ஆகும். சிவபெருமான் அடியார்கள் விரும்பும் வடிவத்திற்கேற்ப உருவம் கொள்கிறான். இறைவன் கொள்ளும் வடிவங்கள் பல என்பதைச் சம்பந்தர்

“நினைவார் வேடமாம் ஆதி” (1:28:10) “பலவுருவன்” (1:13:2), “வேடம் பல வல்லான்” (1:46:3) “வடிவுமாயிரமுடையார்” (2:94:3)

எனக் குறிப்பிடுகிறார்.

உருவத் திருமேனிகளில் இறைவன் ‘மகேசுவரன்’ எனப்படுகிறான், மகேசுவர வடிவங்கள் இருபத்தைந்து ஆகும் இறைவனின் உருவத்தைச் சம்பந்தர் தம் முதல் பாடலிலேயே ‘தோடுடைய செவியன், விடையேறி, மதிசூடி, சுடலைப்பொடி பூசி’ என்று இறைவனை அழகாக வடிவமைத்துக் காட்டுகிறார்.

“ஆடலன்” (1:58:5) “சந்திரசேகரன்” (3:60:3) “காலகாலர்” (1:72:9)“தேவியொர் கூறினர்” (1:8:4) “காமனைக் காய்ந்தவன்” (1:50:2) “மறைநால்வர்க்கு உருவளரால நீழலமர்ந்து” (1:101:4)

என இறைவனின் பல்வேறு வடிவங்களைச் சம்பந்தர் காட்டுகிறார்.

அருவம்

அருவம் என்பது கண்ணுக்குப் புலனாகாதது ஆகும். இறைவன் தன்னிலையில் அருவாய் நிற்பான் என்பதை

“அருவன்” (1:94:9) “அல்ல உருவாய்” (1:129:7) “உருவிலான்” (3:14:2)

என்ற சொற்களால் சம்பந்தர் குறிப்பிடுகிறார்.

அருவுருவம்

அருவுருவம் என்பது கண்ணுக்குப்புலனாயிலும் ஒளிப்பிழம்பாய் நிற்பதாகும். அருவுருவத் திருமேனி சதாசிவம் எனப்படும், இஃது அனைத்து சிவாலயங்களிலும் மூலவராக இருக்கும் இலிங்கத் திருமேனி ஆகும். அருவம், உருவம் இரண்டுக்கும் இடைப்பட்டது அருவுருவம் ஆகும். இதனை

“அழலது உருவத்தான்” (3:53:10) “எரிதரும் உருவினர்” (3:86:3) “கனல்அன உருவினர்” (3:93:3) “தழல் அன உருவினர்” (3:93:7)

எனச் சம்பந்தர் குறிப்பிடுகிறார்.

எண்குணங்கள்

இறைவனின் பெருமை மிகுகுணங்கள் எட்டு ஆகும். அவை தன்வயம் உடைமை, தூயஉடம்பு உடைமை, இயற்கை உணர்வு உடைமை, முற்றுணர்வு உடைமை, இயல்பாகவே பாசமின்மை, பேரருள் உடைமை, முடிவில் ஆற்றலுடைமை, வரம்பில் இன்பம் உடைமை என்பனவாகும். வள்ளுவரும் இறைவனை எண்குணத்தான் (9) எனக் குறிப்பிடுகிறார். சம்பந்தரும் இதனை

“எண்குணங்களும்” (1:131:1) “எண்ணமருங்குணத்தார்” (2:69:1) “எண்ணில்ல குணத்தார்” (2:6:4)

என்கிறார்.

இறைவனின் தொழில்கள்

இறைவன் உயிர்களை ஈடேற்ற ஐந்தொழில் செய்கிறான். இறைவன் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்னும் ஐந்தொழில்களைச் செய்கிறான். உயிர்கள் இம்மை, மறுமை, வீடு எனும் நலன்களைப் பெறுதலே இறைவனது தொழிலின் பயனாகும். ஞானசம்பந்தரின்,

“தோடுடைய செவியன்”	-	**படைத்தல்**
“மதிசூடி”	-	**காத்தல்**
“சுடலைப் பொடி பூசி”	-	**அழித்தல்**
“உள்ளங்கவர் கள்வன்”	-	**மறைத்தல்**
“விடைஏறி”	-	**அருளல் (1:1:1)**

என்ற முதல் பாடல் ஐந்தொழில்களையும் குறிப்பாய் உணர்த்துகிறது.

பசு

சைவசித்தாந்தம் உயிரைப் பசு என்னும் சொல்லால் குறிப்பிடுகிறது. இறைவனைப் போல் உயிரும் அநாதி ஆகும். உயிரின் அநாதித் தன்மையைச் சம்பந்தர்,

“விளையாததோர் பாசில் வருபசு” (1:12:3) “தொல்லுயிர்” (1:114:5) என்ற சொல்லால் குறிப்பிடுகிறார்.

உயிரைச் சம்பந்தா பசு (1:12:3), உயிர் (2:33:6, 2:49:7), ஆவி (1:62:6), உள்ளம் (2:22:5) எனப் பல பெயர்களால் குறிப்பிடுகின்றார்.

பசுக்கள் பல

உயிர்கள் எண்ணற்றவை என்பதைப் **“பல்லுயிர்” (1:53:2) “உயிர்கட்கு” (3:9:1) “மன்னுயிர்கள்” (3:80:3), “வையகத்துயிர்கள்” (3:53:11)** எனச் சம்பந்தர் குறிப்பிடுவதிலிருந்து அறியமுடிகிறது.

உடல் வகைகள்

நால்வகைத் தோற்றத்தை அடிப்படையாகக் கொண்டு உயிர் எடுக்கும் உடல் வகைகள் பல.

அவ்வுடல்கள் எண்பத்து நான்கு நூறாயிரம் என்பது சைவசித்தாந்த முடிவாகும், இதனை,

“எண்பத்து நான்கு நூறாயிரம் என்று எடுத்தேன்” (சிவப்.47) என்று உமாவதி சிவாசாரியாரும்,

“உரைசேரும் எண்பத்து நான்கு நூறாயிரம்யோனி பேதம்” (1:132:4)

என்று ஞானசம்பந்தரும் குறிப்பிடுகின்றனர்.

எழுவகைப் பிறப்பு

உயிர்கள் எழுவகைப் பிறப்பினை அடைகின்றன அவை தாவரம், நீர் வாழ்வன, ஊர்வன, பறவை, விலங்கு, மனிதர், தேவர் என்பன ஆகும். உயிர்களுக்கு ஏழ்பிறவி உண்டென்பதை ஞானசம்பந்தர்,

“எழுமையும்... நிலவகைதனில்” (1:19:9) “எழுமையும் விழுமியராய்” (1:47:6) “திவமலி தருசுரர்முதலியர் திகழ்தரும் உயிரவை” (1:21:1) “ஏழு பிறப்பு” (3:38:10)

என்று கூறுவதிலிருந்து நம்மால் அறியமுடிகிறது.

உயிரின் சிறப்பியல்பு

உயிர்களுக்கு இருவகைச் சார்புகள் உள்ளன. ஒன்று உலகச்சார்பு, மற்றொன்று கடவுட்சார்பு, உயிர் எந்தப் பொருளைப் பற்றி நிற்கிறதோ, அந்தப் பொருளின் தன்மையைப் பெறுகிறது. இதனையே சார்ந்ததன் வண்ணமாதல் என்பர். இத்தன்மையைச் சம்பந்தர்

“பிறவியால் வருவன கேடுள” (2:215:5) என்று பிறவியினால் உண்டாகிய உலகச் சார்பினால் உயிர்கள் துன்பமடைதலை உணர்த்துகின்றார்.

“செற்றமில் சீரானைத் திருவாப்ப னூரானைப் பற்று மனமுடையார் வினை பற்றறுப்பாரே” (1:88:1)

என்ற பாடலடியில் கடவுட்சார்பினால் உயிர்களின் வினைப்பற்று நீங்குதலையும்,

“சார்ந்தவாக் கின்பங்கள் தழைக்கும் வண்ணம் நேர்ந்தவன்” (1:113:5)

என்ற பாடலடியில் கடவுட்சார்பினால் உயிர்கள் இன்பம் அடைதலையும் குறிப்பிடுகின்றார். கடவுள்சார்பே உயிர்களுக்கு வேண்டுவது என்பதைச் சம்பந்தர், **“சைவனாரவர் சார்வலால் யாதும் சார்விலோ நாங்களே” (2:213:9)** என்ற பாடலடியால் உணர்த்துகிறார்.

பாசம்

இறைவனைச் சென்றடைவதே உயிர்களின் நோக்கம் ஆகும். உயிர்கள் இறைவனைச் சேரவிடாமல் அவற்றின் அறிவைப் பாசங்கள் மறைத்துக் கொண்டிருக்கின்றன. இதனால் ஏற்படுகின்ற அறியாமையே உயிர்களின் துன்பங்களுக்குக் காரணமாக அமைகின்றது.

பாசம் வேறுபெயர்கள்

பாசத்தைச் சம்பந்தர் **“தளை” (1:12:3) “பாசம்” (3:49:11), “பந்தம்” (1:96:7), “இருள்” (1:38:3) “குற்றம்” (2:10:7), “ஆசு” (2:21:7), “மாசு” (2:112:2), “மலம்” (1:119:6, 2:24:10)** என்ற வேறுபெயர்களாலும் குறிப்பிடுகிறார்.

பாசம்-அநாதி

பாசமும் அநாதி ஆகும். இதனைச் சம்பந்தார் **“விளையாததொர் பாசில் வருபசு பாச வேதனை ஒண்தளை.” (1:12:3)** என்கிறார்

இதில் பசு – உயிர், பாசம் – ஆணவம், வேதனை – நல்வினை தீவினை, ஒண்தளை – மாயை ஆகும்.

மும்மலம்

மலங்கள் ஆணவம், கன்மம், மாயை என மூன்றாகப் பிரிக்கப்படுகிறது.

ஆணவம்

சம்பந்தர் ஆணவத்தை **“ஊனத்திருள்” (1:38:3) “இருள்” (1:19:3)** என்ற சொற்களால் குறிப்பிடுகிறார்.

ஆணவத்திற்குச் செருக்குற்று நிற்கும் தன்மை உள்ளது. இராவணனின் செயலைக் கொண்டு செருக்கினைச் சம்பந்தர் புலப்படுத்துகிறார். ஒவ்வொரு பதிகத்திலும் எட்டாவது பாடலில் செருக்குற்ற இராவணனின் செயலைக் குறிப்பிடுகிறார். இதனை

“ஒருவரையும் மேல்வலிகொடேன் என எழுந்தவிறலோன்” (3:82:8) “தன்னியல் தசமுகன்” (3:87:8) “பண்டரக்கன் எடுத்த பலத்தை” (3:114:8)

என்ற பாடலடிகளால் அறியமுடிகிறது.

கன்மம்

ஆணவ மலச் சேர்க்கையால் உயிர்கள் செய்யும் வினைகளின் தொகுப்பே கன்மம் எனப்படும். ஞானசம்பந்தர்

தொல்வினை (1:1:1), மேல்வினை (1:54:8) வினை (1:3:2), அறிவினை (1:5:7), தீராவினை (1:85:3) வல்வினை (1:118:9), என்று கன்மத்தை வினை என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார்.

மும்மலமும் முப்புரமும்

இறைவன் முப்புரங்களை எரித்தது உயிர்களின் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களும் இறைவனால் நீக்கப்படுவதைக் குறிக்கிறது என்பதைத் திருமூலர்

“முப்புரமாவது மும்மலகாரியம்” (தி.ம.343) என்று குறிப்பிடுகிறார். சம்பந்தர் முப்புரம் எரித்த வரலாற்றை

“அம்பந்தீ மூஎயில் எய்தவன்” (1:10:1) “மூவார் புரங்கள் எரித்த அன்று” (1:69:1) “அருந்திறல் அவுணர்தம் அரணமூன்றெய்த” (3:20:5)

எனப் பல இடங்களில் குறிப்பிடுகின்றார்.

தத்துவங்கள்

மாயையிலிருந்து நேரே தோன்றும் காரியங்கள் தத்துவங்கள் எனப்படும். ஆன்ம தத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவம் ஆகிய மூன்றும் அகக்கருவிகள். இவை 36 தத்துவங்கள் ஆகும்.

“ஒன்றோன்றொடொன்று மொருநான்கொ டைந்து மிருமூன்றோடு ஏழுமுடனாய்” (2:88:4)

ஒன்றோன்றொடொன்றும்	3
ஒரு நான் கொடைந்தும்	20
இருமூன்றோடு ஏழுமுடனாய்	13
	....
	36

சிவதத்துவங்கள்	5
வித்தியா தத்துவங்கள்	7
ஆன்மதத்துவங்கள்	24
	....
	36

என்ற பாடலடிகளால் ஞானசம்பந்தர் முப்பத்தாறு தத்துவங்களையும் குறிப்பிடுகின்றார்.

முடிவுரை

சம்பந்தர் தம்தேவாரத்தில் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களும் அநாதி தன்மை உடையவை என்கிறார். இறைவன் ஒருவனே அவன் எங்கும் நிறைந்திருப்பவன். அவன் எண்குணங்களுடன் ஐந்தொழில்களை இயற்றுகிறான். மூவகைத் திருமேனிகளைக் கொள்கிறான். பசுவாகிய உயிர் ஏழு பிறவிகளில் பல உடல்களைப் பெறுகின்றன. ஆணவம் உயிர்களின் அறிவை மறைக்கும் வல்லமைக் கொண்டவை. இறைவன் முப்புரம் எரித்தது ஆணவம், கன்மம், மாயை அழித்ததையே குறிக்கிறது முதலிய செய்திகள் சம்பந்தர் தேவாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழும் ஐவகை நிலங்களும்

***ந.துளசி ராமன்,** *உதவிப் பேராசிரியர் (வீணை), இசைத் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.*

பண்டைய காலத்திலிருந்தே இசையானது தூய்மையாகவும், புனிதமாகவும், பக்தி உணர்வோடும் மக்களால் வளர்க்கப்பட்டதன் அடிப்படையில் இதன் தொன்மையை அறியமுடிகிறது. இன்றைய காலத்தில் மக்களின் வாழ்வியலோடு நெருங்கிய தொடர்புடைய இசையானது தொல்காப்பியரின் காலம் முதல் தற்காலம் வரை பல்வேறு வகையான வளர்ச்சியை பெற்று சிறப்பாகத் திகழ்கிறது.

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான இளங்கோவடிகளால் இயற்றப்பட்ட சிலப்பதிகாரத்தில் காணப்படும் இசைக் குறிப்புக்களும், இசைக் கல்வெட்டுக்கள், சிற்பம், ஓவியம், ஓலைச்சுவடிகள் போன்றவற்றில் காணப்படும் இசை குறிப்புகளும் இசையின் தொன்மையினை பறை சாற்றுகின்றன.

ஆயக்கலைகள் அறுபத்தி நான்கில் அரிய கலைகளாகிய இசைக்கலை மிகவும் ஆற்றல் உடையது. ஒலியின் அடிப்படையில் அமைந்த நுண் கலை ஆகிய இசைக் கலையை நுட்ப உணர்வினைக் கொண்டே அறிந்து சுவைக்க இயலும். நுண் இசை ஒலிகள் பாடுதல், கருவி இசைத்தல் எனக் குறிப்பிடலாம். நரம்பிலிருந்து எழும் ஓசையானது ஏழு இசையாக அமைந்துள்ளதை குறிக்கும். தேவாரப் பாடலாகிய,

“ஏழிசை ஏழ் நரம்பின் ஓசையே”

என்ற வரிகளின் வாயிலாக அறியலாம். நரம்பிசைக் கருவிகளில் மிகவும் உன்னதமாக கருதப்படுவது யாழ்.

யாழோசையானது நரம்புகளை அசைப்பதனால் ஏற்படும் காற்றதிர்வினால் தோன்றும் புறவழி ஒலியாகும். அத்தகைய ஒலியானது ஒழுங்குப்படுத்தப்பட்ட ஒலியாக கேட்கப்படும்போது இனிமையைக் கொடுக்கின்றது. யாழ் போன்ற பண்ணிசைக் கருவிகள் ஐவகை நிலத்துடன் நெருங்கிய தொடர்புக்கொண்டது. இதனை

“தெய்வமுணாவே மாமரம் புட்பறை செய்தி யாழின் பகுதியோடு தொகைஇ அவ்வகை பிறவும் கருவென மொழிப” (111: அகத். 18)

என்ற தொல்காப்பிய நூற்பா குறிப்பிடுகிறது. குறிஞ்சி நிலத்திற்கு குறிஞ்சி யாழும், பாலை நிலத்திற்கு பாலையாழும், முல்லை நிலத்திற்கு முல்லையாழும், மருத நிலத்திற்கு மருதயாழும், நெய்தல் நிலத்திற்கு விளரியாழும் பண்ணிசை நரம்புக்கருவியாக இருந்துள்ளமை புலப்படுகிறது.

பெரும்பாணாற்றுப்படை நூல்

வில்யாழ் கொண்டு குறிஞ்சிப்பண் பாடும் வழக்கத்தினை,

“வில்யாழிசைக்கும் விரலெறி குறிஞ்சி”

என்ற பாடல் வரியின் வாயிலாக வில்யாழ் மீட்டிக்கொண்டு குறிஞ்சிப்பண் குறிஞ்சி நிலத்தில் பாடப்பட்டதை தெரிவிக்கின்றது.

புறநானூற்றுப் பாடலான,

"**அருளா யகலோ கொடிதே யிருள் வரச்**
சீறியாழ் செவ்வழி

பண்ணி யாழநின் காரெதிர் பாடினோம்
ஆக"

என்ற பாடலின் வாயிலாக சீறியாழின் துணைகொண்டு செவ்வழிப்பண் பாடப்பட்டதை அறியமுடிகின்றது. முல்லை நிலத்திற்கும், நெய்தல் நிலத்திற்கும் செவ்வழிப்பண் உரியது என்பது குறிப்பிடத்தக்கது.

பாலை நிலத்திற்குரிய பண் பாலைப்பண் இப்பண் பேரியாழ் கொண்டு இசைக்கப்பட்டது என அறியலாகிறது. மருத நிலத்திற்கும் பண், மருதப்பண், இப்பண் சீறியாழைக் கொண்டு இசைக்கப்பட்டதை,

"**மருதம் பண்ணி கருங்கோட்டுச்**
சீறியாழ் நரம்புமீதிறாவது

புணர் தொன்றிக் கடவ தறிந்த இன்குரல்
விளலியர்"

என்ற மலைப்படுகடாம் பாடல் வழி உணர முடிகிறது. இதன் வாயிலாக முற்காலத்தில் நரம்பிசைக்கருவியான யாழ் ஐவகை நிலமக்களின் வாழ்வியலோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமை புலப்படுகிறது.

நிலையாமை – நிச்சயமற்றதன் நிலை

*முனைவர் சு. அரங்கநாதன், *உதவிப் பேராசிரியர், தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை – 15.*

இலக்கியம் என்பது இன்பியலையோ அல்லது துன்பியலையோ பேசுவதோடு அல்லாமல் ஒரு தத்துவார்த்தமான இயங்கியலாகக் கட்டமைக்கப்படுகிறது. ஒரு படைப்பு இன்பியலாக இருக்கும் பட்சத்தில் அது பொழுதுபோக்கு அம்சமாகிறது. துன்பியலாக இருக்கும் போது ஒரு இரக்க உணரவை தோற்றுவிக்கிறது. இதற்கு இடையில் ஒரு மெய்யியலைச் சொல்லக் கூடிய ஒருவகை இலக்கிய அமைப்பை காஞ்சி எனும் இலக்கிய வகைமையாகச் சுட்டுகின்றனர். இது இன்பியலுக்கும் துன்பியலுக்கும் ஒரு பாலமாக அமைகிறது. இன்பியலையும் துன்பியலையும் இணைத்து ஒரு அர்த்தமுள்ள வாழ்க்கை நிலையை இது கட்டமைக்கிற வேலையைச் செய்கிறது.

ஆரம்ப கால கட்டத்தில் தொல்காப்பியம் என்பது பழந்தமிழரின் வாழ்க்கை முறையைப் பேசுகிறது என்ற ஒற்றைப் புரிதலோடு விவாதிக்கப்பட்டாலும் பின்னாளில் அது இலக்கியக் கோட்பாட்டு இலக்கணம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து அகம், புறம், அணி பற்றி தனித்தனி நூற்கள் எழுந்தன. அதில் புறம் பற்றியதில் புறப்பொருள் வெண்பாமாலை மிக முக்கியப் பங்கு வகிக்கிறது.

தொல்காப்பியம் சொன்ன ஏழு திணைகளைத் தாண்டி புறப்பொருள் வெண்பாமாலை படலங்கள் 12, அதாவது புறத்திணைகள் 9, பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை ஆகிய மூன்றோடு 12 படலங்களாக வகைபடுத்துகிறது. இதன் ஆசிரியர், ஐயனாரிதனார். காலம் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு ஆகும். தொல்காப்பியத்திற்கும் இந்நூலிற்கும் ஏறக்குறைய 12 நூற்றாண்டு கால இடைவெளி. அதனால் தான் பல மாற்றங்கள் இதில் பதிவாகியுள்ளன. புறப்பொருள் நூற்களில் சொல்லப்படும் இலக்கண வரையறைகள் தமிழர்களின் போர் நெறிமுறைகள் தான் என்பதில் சந்தேகம் இல்லை. காரணம் ஒரு குறிப்பிட்ட ஒரு மன்னரைப் பற்றியோ, வீரனைப் பற்றியோ பெயரைக்குறிப்பிட்டுப் பாடுவதுதான். ஆனால் அவ்வாறு பாடுவதற்கும் ஒரு மரபைச் சொன்னது நமது இலக்கியப்பாரம்பரியத்திற்கே உரியது.

காஞ்சிப்படலம்

தொல்காப்பியத்தில் காஞ்சித்திணை என்று சொல்லப்பட்டது பிற்கால புறப்பொருள் வெண்பாமாலையில் காஞ்சிப்படலம் என்ற சொல்லால் சொல்லப்படுகிறது. புறத்திணைகளுக்குப் புறனாக அமையும் அகத்திணைகள் பற்றிப் பேசிய தொல்காப்பிய அமைப்பு இங்கே பேசப்படவில்லை.

“காஞ்சிதானே பெருந்திணைப் புறனே” என்பதைப்போல,

அதேபோல காச்திணையின் இலக்கணம் கூறும் தொல்காப்பியம் பின்வருமாறு கூறுகிறது.

“பாங்கரும் சிறப்பின் பல்லாற்றானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே” **(தொல்காப்பியம்-1024)**

அதாவது, துணையில்லாத சிறப்பினையுடைய வீட்டின்பம் காரணமாக, பலவழிகளிலும் நிலை பேறில்லாத உலக இயற்கையைப் பொருந்திய நல்ல நெறியினை உடைத்து காஞ்சி என்பதாகும். இதில் கவனிக்க வேண்டியது காஞ்சி என்பது நிலையின்மையை சொல்வது என்பதாக புரிந்து கொள்ளப்படுவது தான். அதாவது காஞ்சித்திணை என்றாலே நிலையாமையைப் பேசுகிறது என்பது. ஆனால் இது நிலையாமை என்று எதையும் சொல்வதில்லை. உலக இயற்கை என்று சொல்கிறது. இதில் 20 துறைகள் சொல்லப்படுகிறது. ஓர் அரசனுக்கு யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, செல்வம் நிலையாமை போன்ற நிலையாமைக் கருத்துக்களை உணர்த்துவதாகக் கூறுகின்றார். ஓர் அரசன் மண்ணாசை காரணமாகப் பகைவர் நாட்டின் மீது கொண்ட ஆசையால், படை எடுத்து வந்த பகையரசனை எதிரத்துப் போர் புரிவதையும் ஒருசேர வஞ்சியெனக் கொண்டார். ஆனால் புறப்பொருள் வெண்பாமாலையில் வெட்சிப் போருக்கு எதிராகப் கரந்தைப் போரையும், உழிஞைப் போருக்கு எதிராகப் நொச்சிப் போரையும், கூறுவதைப் போல

வஞ்சிப் போருக்கு எதிராகக் காஞ்சிப்போரினை ஓர் அரசன் மேற்கொள்வதாகக் கூறுகின்றார்.

காஞ்சித் திணையின் இலக்கணம்

காஞ்சித் திணையும் அதன் துறைகளுமாக ஐயனாரிதனார் குறிப்பிடுவன மொத்தம் இருபத்திரண்டு ஆகும். இவற்றுள் முதற்கண் சொல்லப்படும் காஞ்சி என்பது காஞ்சித் திணையின் இலக்கணத்தைக் கூறுவதாகும். அதனை அடுத்துக் காஞ்சி எதிரவு முதலாகச் சொல்லப்படும் இருபத்தொன்றும் காஞ்சித் திணையின் துறைகள் ஆகும்.

வேகின்ற சினத்தை உடைய பகைவன் ஆகிய வஞ்சி வேந்தன் போர் மேற்கொண்டு வந்து தன் நாட்டினிடத்தே தங்கியிருப்ப, அந்நாட்டிற்கு உரிய அரசன் காஞ்சிப் பூவைச் சூடிக்கொண்டு தன் நாட்டினைக் காத்துக் கொள்ள கருதியது காஞ்சித்திணை.

"வெஞ்சின மாற்றான் விடுதர", வேந்தன்

காஞ்சி சூடிக் கடிமனை கருதின்று

காஞ்சித் திணையின் துறைகள்

"காஞ்சி, காஞ்சி எதிரவே, தழிஞ்சி

பெரும்படை வழக்கொடு, பெருங்காஞ்சிய்யே,

வாள்செலவு என்றா, குடையது செலவே,

வஞ்சினக் காஞ்சி, பூக்கோள் நிலையே,

புகழ்தலைக் காஞ்சி, தலைமாராயம்,

தலையொடு முடிதல், மறப்பெயரக் காஞ்சி,

மாற்றரும் பேய்நிலை, பேய்க்காஞ் சிய்யே,

தொட்ட காஞ்சி, தொடாக்காஞ் சிய்யே,

ஆஞ்சிக் காஞ்சி, மகட்பாற் காஞ்சி,

முனைகடி முன்னிருப்பு, உளப்படத் தொகைஇ

எண்ணிய வகையான் இருபத்து இரண்டும்

கண்ணிய காஞ்சித் துறைஎன மொழிப",

(நூற்பா–4)

என்று காஞ்சித் திணையின் துறைகள் சொல்லப்படுகிறது.

வஞ்சிப்படைகளைத் தடுத்து நிறுத்தல்

வஞ்சி வேந்தனின் படைகள் தன் நாட்டினுள் புகுந்தது அறிந்த காஞ்சி வேந்தன் காஞ்சிப் பூவைச் சூடிய அளவில் அவனுடைய மறவர்கள் உடனே சென்று அப்பகைப் படைகளைத் தடுத்து நிறுத்திப் போர் புரிவதைக் 'காஞ்சி எதிரவு' தழிஞ்சி, படைவழக்கு, பெருங்காஞ்சி என்னும் நான்கு துறைகள் கூறுகின்றன.

தம் மீது வரும் வருகின்ற வஞ்சி வேந்தன் படையினது வரவினை மிகவும் பொறாத ஒரு காஞ்சி மறவனுடைய வெற்றியைச் சிறப்பித்துச் சொல்வது காஞ்சி எதிரவு,

"மேல்வரும் படைவரல் மிகவும் ஆற்றா

வேல்வல் ஆடவன் விறல்மிகுத் தன்று"

பரந்து எழுந்து வருகின்ற வஞ்சி வேந்தனது படைகள், தங்கள் நாட்டின் எல்லையில் புகாதபடி, அரிய வழிகள் எல்லாவற்றையும் காஞ்சி மறவர் காத்துக் கொள்வது தழிஞ்சி எனப்படும்.

"பரந்து எழுதரு படைத்தானை

வரம்புஇகவாமைச் சுரம்காத்தன்று".

இதுதுறைக்கு இரு வகையான விளக்கங்கள் சொல்லப்படுகின்றன.

அதாவது, காஞ்சி வேந்தன் தன்னுடைய மறவர்களுக்கு வாள், வேல், வில், முதலிய படைக்கருவிகளை வழங்குவது படைவழக்கு என்னும் துறையாம்.

"முத்துஅவிரபுண் மறவேந்தன்

ஓத்தவரக்குப் படைவழங்கின்று"

இரண்டாவது, காஞ்சி வேந்தன் படைக்கருவிகளை வழங்கிய பின்னர் வீரர்கள் தமது வீரப்பண்பினைத் தாமே உயரத்திக் கூறுவது என்பதாகும்.

"கொடுத்தபின்னரக் கழல்மறவர்

எடுத்துரைப்பினும் அத்துறைஆகும்".

பகைவர் படையினைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் வாய்ந்த காஞ்சி மறவர்கள் தத்தம் பேராற்றலை வஞ்சிவேந்தனின் மிகப் பெரிய படையை எதிரத்துப் போர் புரியும் முகத்தான் வெளிப்படுத்துவது பெருங்காஞ்சி.

"தாங்குதிறல் மறவர் தத்தம் ஆற்றல்

வீங்குபெறும் படையின் வெளப்படுத் தன்று"

காஞ்சிப் படைகளின் புறப்பாடு

காஞ்சி மறவர்கள் அணிவகுத்து நில்லாது உடனே சென்று வஞ்சிப் படையினரைத் தடுத்து நிறுத்தியதும், காஞ்சிவேந்தன் அவர்களோடு போர் செய்து அவர்களை விரட்டியடிக்க, தன் படைகளை முறையாக அணிவகுத்துப் புறப்படுமாறு செய்வான். இது தொடர்பான செய்திகளை 'வாள்செலவு, குடை செலவு, வஞ்சினக் காஞ்சி, பூக்கோள் நிலை' என்னும் நான்கு துறைகள் சொல்கின்றன.

வஞ்சி அரசன் போருக்கு அறைகூவல் விடுத்த பின்னர்ப் போர்க்களம் நோக்கிக் காஞ்சி அரசன் தனது வாளினை முன்னே செல்லுமாறு விடுவது வாள்செலவு.

“அருமுனையான் அறைகூவியபின்

செருமுனைமேல் வாள்சென்றன்று”

கொதிக்கின்ற நெருப்புப் போன்ற வேலை உடைய காஞ்சி மன்னன், பழைமையான மறக்குடியில் பிறந்த வீரர்கள் புடை சூழ்ந்துவர், தனது வெண்கொற்றக் குடையை முன்னே செல்லுமாறு விடுவது குடைசெலவு.

“முதுகுடி மறவர முன்னுறச் சூழக்

கொதிஅழல் வேலோன் குடைசென் றன்று”

வெவ்விய சினத்தை உடைய காஞ்சி மன்னன், தன் நாட்டின் மீது படை எடுத்து வந்த பகைவரைத் தன் அடியில் வீழச் செய்யும் பொருட்டுச் சூளுரைத்தல் வஞ்சினக் காஞ்சி எனப்படும்.

“வெஞ்சின வேந்தன் வேற்றவரப் பணிப்ப

வஞ்சினம் கூறிய வகைமொழிந் தன்று”

கடல்போன்று பெரிய காஞ்சி மறவர்படை, வஞ்சியாருடன் போர் செய்தல் பொருட்டுத் தம் அரசன் வழங்கிய காஞ்சிப் புவினைச் சூடிக் கொள்வது புக்கோள்நிலை.

“காரஎதிரிய கடல்தானை

போரஎதிரிய புக்கொண்டன்று”

காஞ்சிப் போர்க்களக் காட்சிகள்

கண்டார்க்கு அச்சத்தைத் தோற்றுவிக்கும் போர்களக் காட்சிகள் சிலவற்றைத் தலைக்காஞ்சி தலைமாராயம், தலையொடு முடிதல், மறக்காஞ்சி ஆகிய நான்கு துறைகள் காட்டுகின்றன.

போர்க்களத்தில் மிக்க வலிமையுடன் போர் செய்து பகைவரைக் கலக்கி இறுதியில் இறந்துபட்ட காஞ்சி மறவனுடைய தலையைப் பாராட்டுவது தலைக்காஞ்சி.

“மைந்துஉயர மறம்கடந்தான்

பைந்தலைச் சிறப்புஉரைத்தன்று”

போரிலே இறந்துபட்ட மறவனுடைய தலையைக் கொண்டு வந்தவன் உள்ளம் மகிழ்ச்சியால் நிறையும்படி அவனுக்குக் காஞ்சி வேந்தன் செல்வத்தை வழங்குவது தலைமாராயம்.

“தலைகொடுவந்தான் உள்மலியச்

சிலையுடைவேந்தன் சிறப்புஈந்தன்று”

போரின்கண் இறந்து பட்ட கணவனின் தலைகண்டு அவன் மனைவி அத்தலையுடனே இறந்ததைக் கூறுவது தலையொடு முடிதல்.

“மண்டுஅமருள் மாறாமைந்தின்

கொண்டான் தலையொடு கோல்வளை முடிந்தின்று”

மறக்காஞ்சி எனும் துறைக்கு இரண்டு விளக்கங்கள் சொல்லப்படுகின்றன. வஞ்சியார் செய்யும் போர் ஒழியும் படி, காஞ்சி வேந்தன் போர்த்தொழிலை நடத்துவது மறக்காஞ்சி என்பதும், காஞ்சிமறவன் பகைவர் முன்னேற்றம் கண்டு பொறாதவனாய், தன் மாரபில் பட்ட புண்ணைத் தானே கிழித்துக்கொண்டு உயிரை நீத்தலும் மறக்காஞ்சி என்பதாகும்.

“இலைப்பொலிதார இகல்வேந்தன்

மலைப்புஒழிய மறம்கடாயின்று

மண்கெழு மறவன் மாறுநிலை நோனான்

புண்கிழிந்து முடியினும் அத்துறை ஆகும்”

காஞ்சிப் போரில் பேய்களின் செயல்

போரக்களம் என்றவுடன் பேய்களைப் பற்றிய நினைவு வராமல் போகாது. காஞ்சிப் படலத்தில் பேய்கள் தொடர்பாக நான்கு துறைகள் அமைந்துள்ளன. அவை, பேய்நிலை, பேய்க்காஞ்சி, தொட்ட காஞ்சி, தொடர்க் காஞ்சி என்பனவாகும். போரக்களத்தில் புண்பட்டுக் கிடக்கும் வீரர்களைச் சூழ்ந்திருக்கும் பேய்களின் செயலைப் பேய்நிலை, பேய்க்காஞ்சி எனும் இருதுறைகளும், புண்பட்ட மறவரைக் காஞ்சி மகளிர் தம் இல்லத்தில் வைத்துக் காக்கும்போது, அம்மறவரைத் தீண்டச் செல்லும் பேய்களின் செயலைத் தொட்டகாஞ்சி, தொடர்க் காஞ்சி ஆகிய இருதறைகளும் விளக்குகின்றன. போர்க்களத்தே விழுப்புண்பட்டு விழுந்து கிடக்கும் மறவனது நிலைமையினைக் கண்டு பேயானது அவன்பால் அன்புகொண்டு அவனைப் பிரியாமல் பாதுகாப்பது பேய்நிலை.

“செருவேலான் திறம்நோக்கிப்

பிரிவு இன்றிப் பேய்ஓம்பின்று”

பிணங்கள் மிகுந்த போர்க்களத்தில் புண்பட்டு வீழ்ந்து கிடக்கும் மறவரைப் பேய்மகள் அச்சுறுத்துவது பேயக்காஞ்சி எனப்படும்.

“பிணம்பிறங்கிய களத்துவீழ்ந்தார்க்கு

அணங்குஆற்ற அச்சுறீஇயன்று”

அகன்ற மனையின்கண் பாதுகாக்கப்படும் காஞ்சிமறவனது புண்ணைப் பேய்மகள் தீண்டுவது தொட்டகாஞ்சி ஆகும்.

"வியன்மனைவிடலை புண்காப்பத்

து ய ல் மு லை ப் பே ழ் வா ய் பேய்தொட்டன்று"

ஒரு காஞ்சி மறவனுடைய புண்ணைத் தீண்டுவதற்குச் சென்ற பேய் தீண்ட அஞ்சிநடுங்கி நீங்குவது தொடர்க் காஞ்சி. பேய் அஞ்சி நீங்குவதற்குக் காரணம் அவன் மனைவியும், உறவினர்களும் பேய்க்குப் பகையான செயல்களைச் செய்தலே ஆகும்.

"அடல்அஞ்சா நெடுந்தகைபுண்

தொடல்அஞ்சித் துடித்தநீங்கின்று".

காஞ்சி வேந்தர்-மறவர்-பெண்கள் சிறப்பு

காஞ்சிப் படலத்தின் கடைசியாக இடம்பெற்றுள்ள மன்னைக் காஞ்சி, கட்காஞ்சி, ஆஞ்சிக்காஞ்சி, மகட்பாற்காஞ்சி, முனைகடி முன்னிருப்பு ஆகிய ஐந்து துறைகள் காஞ்சி அரசன் மற்றும் வீரர்கள், பெண்கள் ஆகியோரின் மாண்பினைக் குறித்து வருகின்றன.

அகன்ற உலகத்தில் உள்ளோர் வியக்கும்படி போரிலே இறந்துபட்டு விண்ணுலகம் சென்ற காஞ்சி மறவனுடைய பண்பினைப் புகழ்ந்து அவனது அழிவிற்கு இரங்குவது மன்னைக்காஞ்சி.

"வியல்இடம்மருள விண்படரந்தோள்

இயல்புஏத்தி அழிபுஇரங்கின்று"

காஞ்சி வேந்தன் தன்னுடைய வீரமறவர்களுக்குக் கள்ளினை வழங்குவது கட்காஞ்சி என்னும் துறை.

"நறமலியும் நறுந்தராரன்

மறமைந்தரக்கு மட்டுஈந்தன்று"

ஆஞ்சிக்காஞ்சி எனும் துறைக்கு இரண்டு விதமான விளக்கங்கள் சொல்லப்படுகின்றன. அன்புமிக்க தன் கணவன் போரில் இறந்துபட்டானாக, அவனோடே எரியின்கண் புகுந்து உயிரவிடும் கற்புடைய மடந்தையினது சிறப்பைப் பாராட்டுவது ஒன்று. மற்றொன்று, போரில் தன் கணவனுடைய உயிரைப் போக்கிய வேலினாலே அவனுடைய மனைவி தனது இனிய உயிரைப் போக்கிக் கொள்ளுதலும் ஆஞ்சிக் காஞ்சி என்னும் துறையே ஆகும்.

"காதல் கணவனொடு கனைஎரி மூழ்கும்

மாதர் மெல்லியல் மலிபுஉரைத் தன்று"

"மன்உயிர் நீத்த வேலின் மனையோள்

இன்உயிர நீப்பினும் அத்துறை ஆகும்"

ஆழகிய அணிகலன்களை உடைய நின் மகளை எனக்குத் தருக என்று கேட்கும் வஞ்சிவேந்தனொடு காஞ்சிவேந்தன் மாறுபட்டு நிற்பது மகட்பாற் காஞ்சி.

"ஏந்திழையாள் தருகஎன்னும்

வேந்தனோடு வேறுநின்று"

காஞ்சி வேந்தன், வஞ்சி மன்னனையும் அவனுக்குத் துணையாக வந்த குறநில மன்னரையும் அவர்கள் தங்கியிருந்த தன் நாட்டுப் போர்முனையினின்று புறம் கொடுத்து ஓடுமாறு செய்வது முனைகடி முன்னிருப்பு ஆகும்.

"மன்னர்யாரையும் மறம்காற்றி

முன்இருந்த முனைகடிந்தன்று"

தொல்காப்பியர் காஞ்சித்திணையில் நிலையாமை பற்றிக் கூறியுள்ள கருத்துக்களை ஐயனாரிதனார் புறப்பொருள் வெண்பா மாலையில் பொதுவியலில் காஞ்சிப்பொதுவியல் என்ற தலைப்பில் முதுமொழிக்காஞ்சி முதலான ஆறு துறைகளில் விளக்கிக்காட்டுகிறார். காஞ்சிப் படலத்தில் வஞ்சிப்போருக்கு எதிராக நிகழ்த்தப்படும் காஞ்சிப் போர் பற்றிய செய்திகளை மட்டுமே கூறுகிறார். ஐயனாரிதனார் காஞ்சித் திணையின் இலக்கணத்தைக் காஞ்சித் திணை எதிரவு முதலான 21 துறைகளைக் கொண்டு விளக்குகிறார். இத்துறைகளில் வஞ்சி அரசன் படைகள் தன் நாட்டில் புகாதவாறு காஞ்சி அரசன் தடுத்து நிறுத்தல், காஞ்சி அரசன் வஞ்சினம் மொழிந்து மறவர்கள் பகைவரோடு ஆண்மையுடன் போர் புரிதல், காஞ்சிப் போரில் புண்பட்ட மறவர்களைப் பேய் தீண்டுதல், காஞ்சி மகளிர் மாண்பு, காஞ்சி மறவரின் மறப்பண்பு, காஞ்சி வேந்தனின் வெற்றி ஆகியன பற்றி நிகழ்ச்சிகளைக் கூறுகின்றார்.

காஞ்சிப் படலம் என்பது காஞ்சிவேந்தனின் மறத்தையும், காஞ்சி மறவரின் பேராண்மையையும், காஞ்சி மகளிரின் கற்புத்தன்மையையும் ஒருசேரக் காட்டுகிறது. அதையும் தாண்டி காஞ்சி என்பது நிலையில்லாத இந்த உலகத்தில் சில வரன்முறைகளுக்கு

உட்பட்டு செயல்படும் வன்மத்தின் உச்சமாக தொல்காப்பியர் காட்டுகிறார். ஆனால் இங்கே ஐயனாரிதனார் காஞ்சிப்படலம் என்பதை வஞ்சி, உழிஞை, தும்பை உள்ளிட்ட போர்களைப் போன்றதாக காட்டுகிறார். இதில் தொல்காப்பியர் சொன்ன சில துறைகளும், சொல்லாத துறைகளும் இடம்பெற்றிருக்கின்றது. மற்ற போர்களிலும் இதுபோன்றதொரு வன்மம் நிகழ்ந்திருக்கும், நிகழும். ஆனால் இங்கு காஞ்சிப் படலத்தில் நிலையாமை எனும் கருத்தியலோடு ஒத்துப்போகின்ற ஒரு போரின் உச்ச வன்மத்தை காட்டுவதன் மூலமாக வாழ்க்கை என்பதன் உண்மைத் தன்மையையும், ஒரு உயிரப்படைப்பின் உண்மைத் தன்மையையும் காட்டுகிறது.

பயன்கொண்ட நூற்கள்

1. புறப்பொருள் வெண்பாமாலை

2. தொல்காப்பியம்,

3. சங்க காலச் சமுதாயம், சுப்பிரமணியன். கா.,

4. தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும். கே.கே.பிள்ளை.

கண்ணகி எனும் தொன்மம்

***முனைவர் ஆ. அறிவுமொழி,** *உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, அன்னை வேளாங்கண்ணி மகளிர் கல்லூரி, சென்னை – 600 015.*

மனிதன் என்று கூடி வாழத்தொடங்கினானோ அன்றிலிருந்தே கதை சொல்ல ஆரம்பித்திருக்க வேண்டும். கதைகள் காப்பியமான வரலாறு தெரிந்ததுதான். தமிழ் இலக்கியப் பரப்பில் உருவமும், உள்ளடக்கமும் தமிழ் இலக்கிய வகைமைக்கான அடிப்படை. தமிழ் இலக்கியங்கள் குறித்த வகைபாட்டில் உருவம், உள்ளடக்கம், காலம் போன்றவை முக்கியத்துவம் பெற்றிருப்பதைப் பார்க்க முடிகின்றது. இன்றைய தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியில் பல்வித ஊடகங்களால் கருத்துப்பரிமாற்றமும், செய்திப் பரிமாற்றமும் அனைத்து இடங்களுக்கும் சென்று விடுகின்றது. ஆனால் பழங்காலத்தில் இத்தகைய ஊடகங்கள் இல்லாத காலகட்டத்தில் கதை என்பது, கருத்துக்களைக் கொண்டு சேர்க்கும் மிகப்பெரிய கருவியாக இருந்திருக்கிறது. ஓவியங்களில் தொடங்கி இன்றுவரை பல் ஊடக வளரச்சியில் கதை என்பது முக்கியத்துவம் பெறுகின்றது. காரணம் இன்றைய சினிமா, தொலைக்காட்சி என்று எந்தவொரு காணொளி ஊடகத்திலும் கதை அடிப்படையாக இருக்கின்றது. இந்தக் கதைகள் எதையெல்லாம் கொண்டு சேர்த்தன என்றால் அதன் பட்டியல் நீண்டுகொண்டே செல்கிறது. அதாவது நீதி, பக்தி, புராணச்செய்திகள், சமயம், மதம், சாதியம், பெண் ஆண் உறவுகள், சமூக நடப்பியல் என அனைத்துக் களத்தையும் இது தொடுகிறது. இக்கதையைச் சமய வாதிகளும், சமூக வாதிகளும் ஒரு பிரச்சாரக் கருவியாகக் கொண்டனர் என்று கூட சொல்லலாம்.

தமிழ்க் காப்பியங்க் கதை வாய்வழிச் சொல்லப்படும் கதைகளாக இருந்து பின் காப்பியம் என்னும் இலக்கிய வடிவம் பெற்றதை அறிந்திருக்கிறோம். ஆனால் இக்கதைகள் எல்லா பகுதிகளிலும் ஒரே மாதிரி சொல்லப்படுவதில்லை. கதை சொல்லும் இடத்திற்கு, சமூகத்திற்க, கதை சொல்லியின் அனுபவத்திற்கு ஏற்ப தன்னளவில் மாற்றங்களைப் பெறுகின்றது. என்றாலும் கதை என்பது காப்பியம் சொல்லும் கதைதான். அந்த வகையில் சிலப்பதிகாரம் குறித்த வாய்மொழிக் கதை ஒன்று புதிய செய்திகளுடன் கண்ணகி கதை என்ற தலைப்பில் கொங்கு நாடோடிக் கதைகள் (காவ்யா வெளயீடு, பதிப்பாசிரியர்கள்– முனைவர் தே. ஞானசேகரன், முனைவர் சு. அரங்கநாதன்,) எனும் நூலில் இடம்பெற்றுள்ளது. இத்தொன்மம் குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நாட்டுப்புறக் கதைகள் என்பது ஆசை நிறைவேறுதற்குரிய கருவியே பழங்கதைகள் என்றும். மனிதமனத்தின் நனவிலி மனக்கனவுகளைக் காட்டும் பழங்கதைகள் மக்கள் மனோபாவங்களின் பிரதிபலிப்பு என்றும், ஆசைகள், அவலங்கள், தேவைகள், விருப்பு வெறுப்புகள், கனவுகள், கற்பனைக் கதைகளாகின்றன. கதைகள் மக்களின் தாகங்கள், தவிப்புகள், ஏக்கங்கள் எல்லாவற்றையும் எடுத்தியம்புகின்றன என்றும், சமுதாயத்தினால் திரித்து மறைத்து வைக்கப்பட்டுள்ள உலகியல் உண்மைகளே நாட்டுப்புறக்கதைகள் ஆகும். என்றும், மக்கள் வாழ்ந்த வரலாற்றையும், வாழும் நாடுகளின் எழுச்சி, மற்றும் வீழ்ச்சி, மக்களின் வெறுப்பு மற்றும் விருப்பு, மனித லட்சியம் மற்றும் தோல்வி போன்றன பற்றிய விளக்கமாகும் (செ. அனந்தம்மாள், இராசபாளையம் வட்டார நாட்டுப்புறக் கதைகளில் பெண்கள் – ப.29, வெளயிடப்படாத ஆய்வேடு, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.) என்றும் நாட்டுப்புறக் கதைகளுக்கு விளக்கம் தருவர்.

Whenever the PU is present in the CR network, the SU will immediately release the licensed bands because the PU has an exclusive privilege to use them [1–3].CR nodes compete to sense available channels. But some SUs are selfish, and try to occupy all or part of available channels. Usually selfish CR attacks are carried out by sending fake signals or fake channel information. If a SU recognizes the presence of a PU by sensing the signals of the PU, the SU won't use the licensed channels. In this case, by sending faked PU signals, a selfish SU prohibits other competing SUs from accessing the channels. Another type of selfish attack is carried out when SUs share the sensed available channels.

Usually each SU periodically informs its neighboring SUs of current available channels by broadcasting channel allocation information such as the number of available channels and channels in use. In this case, a selfish SU broadcasts faked channel allocation information to other neighboring SUs in order to occupy all or a part of the available channels. For example, even though a selfish SU uses only two out of five channels, it will broadcast that all five channels are in use and then pre-occupy the three extra channels. Thus, these selfish attacks degrade the performance of a CR network significantly.

There has been some research on selfish attack detection in conventional wireless communications. On the other hand, little research on the CR selfish attack problem has been done so far. Because of the dynamic characteristics of CR networks, it is impossible to use the selfish attack detection techniques used in traditional wireless communications for CR networks. In this article, we identify a new selfish attack type and introduce a selfish attack detection technique, COOPON (called Cooperative neighboring cognitive radio Nodes), for the attack type. We focus on selfish attacks of SUs toward multiple channel access in cognitive radio ad-hoc networks.

All neighboring SUs exchange the channel allocation information both received from and sent to the target SU, which will be investigated by all of its neighboring SUs. The target SU and its neighboring SUs are 1-hop neighbors. Then, each individual SU will compare the total number of channels reported to be currently used by the target node to the total number of channels reported to be currently used by all of the neighboring SUs. If there is any discrepancy between the two figures, all of the legitimate SUs will recognize a selfish attacker. Our proposed technique is an intuitive approach and simple to compute, but reliable due to using deterministic channel allocation information as well as the support of cooperative neighboring nodes.

Types of Selfish Attacks

Attack Type 1

Selfish attacks are different depending on what and how they attack in order to pre-occupy CR spectrum resources. There are three different selfish attack types shown in Fig. 1. Type 1 is the signal fake selfish attack. A Type 1 attack is designed to prohibit a legitimate SU (LSU) from sensing available spectrum bands by sending faked PU signals. The selfish SU (SSU) will emulate the characteristics of PU signals. A legitimate SU who overhears the faked signals makes a decision that the PU is now active and so the legitimate SU will give up sensing available channels.

Attack Type 2

Type 2 attacks are also a selfish SU emulating the characteristics of signals of a PU, but they are carried out in dynamic multiple channel access. In a normal dynamic signal access process, the SUs will periodically sense the current operating band to know if the PU is active or not, and if it is, the SUs will immediately switch to use other available channels. In this attack type, illustrated in Fig. 1, by launching a continuous fake signal attack on multiple bands in a round-robin fashion, an attacker can effectively limit legitimate SUs from identifying and using available spectrum channels.

Attack Type 3

In Type 3, called a channel pre-occupation selfish attack, attacks can occur in the communication environment that is used to broadcast the current available channel information to neighboring nodes for transmission. We consider a communication Environment that broadcasting is carried out through a common control channel (CCC) which is a channel dedicated only to exchanging management information. A selfish SU will broadcast fake free (or available) channel lists to its neighboring SUs, as illustrated in Fig. 1. Even though a selfish SU only uses three channels, it will send a list of all five occupied channels. Thus, a legitimate SU is prohibited from using the two available channels.

Attack and Detection Mechanism

Attack Mechanism

In a cognitive radio network, the common control channel (CCC) is used to broadcast and exchange managing information and parameters to manage the CR network among secondary ad-hoc users. The CCC is a channel dedicated only to exchanging managing information and parameters. A list of current channel allocation information is broadcast to all neighboring SUs as shown in Fig. 1. The list contains all of other neighboring users' channel allocation information.

Type3 in Fig.1 shows that a selfish secondary user (SSU) broadcasts separate channel allocation information lists through individual CCC to the left-hand side legal selfish user (LSU) and the right-hand side LSU,

respectively. In reality, a list is broadcast once, and it contains the channel allocation information on all of the neighboring nodes. The SU will use the list information distributed through CCC to access channels for transmission. A selfish secondary node will use CCC for selfish attacks by sending fake current channel allocation information to its neighboring SUs. When the attackers try to pre-occupy available channels, they will broadcast an inflated larger number of currently used spectrum channels than they actually are.

Detection Algorithm

We mentioned above, all currently used channels in the target node and neighboring nodes are summed up in two steps Channel target node and Channel neighboring node. Then Channel target node will be compared to Channel neighboring node. According to the example in Fig. 2, Channel target node is 7 (2+1+2+2) and Channel neighboring node is 5 (2+1+1+1). Because 7 > 5, the target secondary node is identified as a selfish attacker. In other words, the checked target node inflates its currently used channels number. Then COOPON will check the next neighboring node after it selects one of the unchecked neighboring secondary nodes as a target node.

CONCLUSION

We identify a new selfish attack type, named Type 3 in this article, and propose a detection approach for it, COOPON. Because we use the deterministic channel allocation information, COOPON gives very highly reliable selfish attack detection results by simple computing. The proposed reliable and simple computing technique can be well fitted for practical use in the future. Our approach is designed for cognitive radio ad-hoc networks. We make use of ad-hoc network advantages such as autonomous and cooperative characteristics for better detection reliabilities. For future work, we plan to apply Markov chain model and game theory to do theoretical analysis of more than one selfish SU in a neighbor, which gives less detection accuracy.

References

X. Tan and H. Zhang, "A CORDIC-Jacobi Based Spectrum Sensing Algorithm for cognitive Radio," KSII Trans. Internet and Info. Systems, vol. 6, no. 9, Sept. 2012, pp. 1998–2016.

C.-H. Chin, J. G. Kim, and D. Lee, "Stability of Slotted Aloha with Selfish Users under Delay Constraint," KSII Trans. Internet and Info. Systems, vol. 5, no. 3, Mar. 2011, pp. 542–59.

S. Li et al., "Location Privacy Preservation in Collaborative Spectrum Sensing," IEEE INFOCOM'12, 2012, pp. 729–37.

A STUDY ON CLASSIFICATION TECHNIQUES IN DATAMINING FOR PREDICTION OF HEART DISEASE

Mrs. C.USHA NANDHINI, M.Sc., M.Phil, *Assistant Professor, Department of Computer Applications, Vellalar College for Women (Autonomous), Erode -638 012.*

I INTRODUCTION

DATA MINING

Data Mining refers to extracting or "mining" knowledge from large amounts of data. It is a step in the KDD process of applying data analysis and discovery algorithm. This process consists basically of steps that are performed before carrying out data mining, such as data selection, data cleaning, pre-processing, and data transformation. Data Mining involves many different algorithms to accomplish different tasks. All of these algorithms attempt to fit a model to the data. The algorithms examine the data and determine a model that is closest is the characteristics of the data being examined. Classification is the most popular data mining technique for medical diagnosis. There are number if techniques available such as K Nearest Neighbor, Decision Tree Classifier, Bayesian Classifier etc, there have been numerous comparisons of the different classifications and prediction methods.

II HEART DISEASE

The heart is important organ or part of our body. Life is itself dependent on efficient working of heart. If operation of heart is not proper, it will affect the other body parts of human such as brain, kidney etc. It is nothing more than a pump, which pumps blood through the body. If circulation of blood in body is inefficient the organs like brain suffer and if heart stops working altogether, death occurs within minutes. Life is completely dependent on efficient working of the heart. The term Heart disease refers to disease of heart & blood vessel system within it.

There are number of factors which increase the risk of Heart disease:

- Family history of heart disease
- Smoking
- Cholesterol
- Poor diet
- High blood pressure

- High blood cholesterol
- Obesity
- Physical inactivity
- Hyper tension

Symptoms of a Heart Attack

Symptoms of a heart attack can include:

- Discomfort, pressure, heaviness, or pain in the chest, arm, or below the breastbone.
- Discomfort radiating to the back, jaw, throat, or arm.
- Fullness, indigestion, or choking feeling (may feel like heartburn).
- Sweating, nausea, vomiting, or dizziness.
- Extreme weakness, anxiety, or shortness of breath.
- Rapid or irregular heartbeats

III LITERATURE SURVAY

In year 2013, **M.Akhiljabbar et.al [2]** "classification of heart disease using k nearest neighbor and genetic algorithm" have proposed a technique for prediction of Heart Disease. Nearest neighbor (KNN) is very simple, most popular, highly efficient and effective algorithm for pattern recognition. KNN is a straight forward classifier, where samples are classified based on the class of their nearest neighbor. Medical data bases are high volume in nature. If the data set contains redundant and irrelevant attributes, classification may produce less accurate result. In this paper they have presented a novel approach namely GA with KNN & GA without KNN for classifying heart disease. As a way to validate the proposed method, they have tested with emphasis on heart disease on A.P besides other machine learning data sets taken from UCI repository.

Experimental results carried out on 7 data sets show that their approach is a competitive method for classification. This prediction model helps the doctors in efficient heart disease diagnosis process with fewer attributes. Genetic algorithms perform global search in complex large and multimodal landscapes and provide optimal solution. Experimental results shows that their algorithm enhance the accuracy in diagnosis of heart disease. Identification of major risk factors and developing decision support system, and effective control measures and health education programs will decline in the heart disease mortality.

In year 2013, **RajwantKaur et.al [1]** **"**a closure looks to data mining techniques for prediction of heart disease" have proposed a technique for prediction of Heart Disease. In this paper, Genetic NN, KNN, SVM, GA classification techniques for heart disease are discussed. The study of these techniques shows that main issue in this field is accurate results of heart disease prediction on the basis of risk factors. Beside this high cost of medical tests is also the main issue. All these techniques overcome the problem of accurate results on the basis of information collected through risk factors. Now days, Neural Network is highly useable method for prediction of heart diseases. The study of various techniques results, neural network is best method as compare to others. By enhancing these techniques, better results can be achieved and cost of medical tests can also be reduced.

In year 2015,**AkashJaradet.al [3]**"intelligent heart disease prediction system with mongo db" have proposed a technique for prediction of Heart Disease. This paper focuses on the aspect which is

neglected in the process i.e. the data which is not mined. They use 14 attributes to predict the chances of heart disease prediction and thereby preventive measures can be taken to avoid it. The system is reliable, expandable and web based and user-friendly.

It also serves a purpose of training nurses and doctors newly introduced in the field related to heart disease. In this paper, fourteen attributes are considered which form the primary basis for tests and give accurate results more or less. Many more input attribute scan be taken but their goal is to predict with less number of attributes and faster efficiency to predict the risk of having heart disease at a particular age span. Two data mining classification techniques were applied namely K-means & Naive Bayes.

In year 2014, **AdityaMethailaet.al [5]** "EARLY HEART DISEASE PREDICTION USING DATA MINING TECHNIQUES" have proposed a technique for prediction of Heart Disease. This paper intends to use data mining Classification Modeling Techniques, namely, Decision Trees, Naïve Bayes and Neural Network, along with weighted association Apriori algorithm and MAFIA algorithm in Heart Disease Prediction. Decision Tree has outperformed with 99.62% accuracy by using 15 attributes.

Also the accuracy of the Decision Tree and Bayesian Classification further improves after applying genetic algorithm to reduce the actual data size to get the optimal subset of attribute sufficient for heart disease prediction. Straight Apriori-based algorithms count all of the 2k subsets of each k-item set they discover, and thus do not scale for long item sets. They use "look a heads" to reduce the number of item sets to be counted. MAFIA is an improvement when the item sets in the database are very long. In year 2016, **PrachiPaliwalet.al [4]** "An Efficient Method For Predicting Heart Disease Problem Using Fitness Value" have proposed a technique for prediction of Heart Disease.

In the field of Medical Science there are huge amount of data. Data mining techniques are be used to discover hidden pattern form these data. Advance data mining techniques have been developed now days. The efficiency of these techniques are compared through sensitivity, specificity, accuracy and error rate. Some well known Data mining classification techniques, Decision Tree, Artificial neural networks, and Support Vector Machine and Naïve Bayes Classifier.

In this paper they introduced a new method based on the fitness value of the attribute to predict the heart disease problem. Proposed method considers all attribute given to heart attack condition. They have taken only ten attribute which are main responsible for heart attack.

IV CONCLUSION

Our goal is to analyze different data mining techniques in a way that they help us to predict and employ the heart disease prediction system which predicts the possibility of heart disease risk of patients for next ten years. To spread awareness amongst patients to take precautionary actions and hence live longer; and to assist doctors to diagnose and predict the probable complications well in advance.

As the heart disease patients are increasing world-wide each year and huge amounts of data is available for research, researchers are using data mining techniques in the diagnosis of heart disease. Analysis presented by different researcher's shows that different data mining techniques and classifiers are defined in this work which has emerged in recent years for efficient and

effective heart disease diagnosis. The analysis shows that using different techniques and taking different number of attributes we get different accuracies for predicting heart diseases.

REFERENCES

1. Ms. Chaitrali S. Dangare, Dr. Mrs. Sulabha S. Apte, "A data mining approach for prediction of heart disease using neural networks, international journal of computer engineering and technology",2012

2. M.A.nisharabanu and B.Gomathy," Disease Forecasting System Using Data Mining Methods",2014.

3. Aqueel Ahmed, Shaikh Abdul Hannan,"Data Mining Techniques to Find Out Heart Diseases", International Journal of Innovative Technology and Exploring Engineering(IJITEE)ISSN: 2278- 3075, Volume-1,Issue-4,September 2012.

4. Ms. Ishtake S.H, Prof. Sanap S.A., "Intelligent Heart Disease Prediction System Using Data Mining Techniques", International J. Of Healthcare & Biomedical Research, 2013.

5. Chitra R and Seenivasagam V, "Review Of Heart Disease Prediction System Using Data Mining And Hybrid Intelligent Techniques", ISSN: 2229-6956 (online) Ictact Journal On Soft Computing, July 2013, Volume: 03, Issue: 04, 2013.

பொன்னியின் செல்வன் நாவலில் நந்தினியின் ஆளுமை

*முனைவர் கோ.நிர்மலாதேவி, *தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர், பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி, கோவை.*

நோக்கம்

கற்பு என்பது வாழ்வின் ஒழுக்க நிலை. உண்மைத் தன்மையைக் கொண்டது. இதற்கான சொற்கள் மாற்றம் செய்யப்பட்டாலும், பொருளாழம் கண்டுபிடிக்கப்பட்டாலும், கற்பு என்ற சொல்லின் முழுமை எப்போதும் ஒரே முகத்தைத்தான் கொண்டிருக்க முடியும். கற்பின் தன்மையை அறிய முல்லைப் பூவை உதாரணமாக இலக்கியங்கள் காட்டுகின்றன. 'முல்லை சான்ற கற்பின்' என்று கலித்தொகை அடையாளப் படுத்துகின்றது. தனது தேவைக்காகவும், சமூக மாற்றங்களுக்காகவும் கற்பு என்னும் மனத்திட்பத்தை மாறுகின்ற மதிப்பு என்றெண்ணி கால மாற்றங்களுக்குள் கற்பு என்பதின் பொருள் விளக்கம் சிதைந்து விடுகின்றது.

கணவனே தன்னுடைய தலைவன் என்னும் மனத்திண்மையைத்தான் கற்பு என்று சொல்ல முடியும். தலைவன் மீது கொண்டிருக்கும் அசையாத நம்பிக்கை, கணவன் தன் மீது கொண்டிருக்கும் உறுதியான நம்பிக்கையின் அடையாளம். இந்த அடையாளம் களவுக் காலத்திலிருந்து வரைவு காலத்திலும், வரைவின்பின் நடைபெறும் இல்லறத்திலும் உறுதியாகப் பிணைக்கப்பட்டிருக்கும். இல்லறங்களில் சிறந்த ஒழுக்கமாகக் கருதப்படும் கற்பொழுக்கம் தனிமனித விழுமியமாக வாழ்தலில் போற்றப்படுகிறது.

கல்கியின் பொன்னியின் செல்வன் நாவலில் நந்தினி என்ற கதாபாத்திரம் நாவல் முழுவதும் ஒழுக்கத்தில் வழுவாதவளாகவும், மர்ம மகையாகவும், சூழ்ச்சி திறன் மிக்கவளாகவும், ஆசிரியர் படைத்து இருக்கிறார். நந்தினி அழகு பெற்றவள். ஆற்றலும் பெற்றவள். நந்தினியின் அழகும் அறிவும் ஒரு பேரரசைக் கவிழ்க்கும், அழிக்கும், புனைகதை உலகில் நந்தினியை மிஞ்சிய வஞ்சமகள் ஒருத்தியைக் காண்பது மிகவும் அரிது என கூறும் வஞ்சம் நிறைந்தவாக இருந்தாலும் கற்பு என வரும்பொழுது இவளை போன்ற கற்பில் சிறந்தவளை நாம் காண முடியாது என்பதை ஆராயும் வண்ணமாக இக்கட்டுரை அமைகிறது.

கற்பு – தொல்காப்பியர் விளக்கம்

> **"கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்,**
> **மெல்லியற் பொறையும், நிறையும் வல்லிதின்**
> **விருந்து புறந்தருதலும், சுற்றம் ஓம்பலும்**
> **பிளவும் அன்ன கிழவோள் மாண்புகள்"**

என்று பெண்களின் நிலைகளையும், அவற்றில் கற்பு என்கின்ற மனத்திட்பத்தைத் தொல்காப்பியர் வலியுறுத்துகிறார்.

கற்பு என்னும் மனத்திட்பத்தைப் பண்டைக் காலத்தில் மூன்று வகையாகப் பார்த்தனர். "கணவன் இறந்த செய்தி கேட்டு உயிர் விடுதல் தலைக் கற்பாகும். இடைக் கற்பென்பது, கணவனுடன் தானும் உயிர் மடிதலாகும். கணவனோடு உயிர் துறக்காது கைம்மை நோற்று வாழ்வது கடைக் கற்பாகும்" என்று வகைப்படுத்தியுள்ளனர்.

"கற்பெனப்படுவது சொல் திறம்பாமை" என்று நீதி இலக்கியகள் கற்பிற்கு இலக்கணம் வகுக்கின்றன. ஆக கற்பு என்பது வாய்மையுடன், மன உறுதியுடன் இருக்கும் நல்லொழுக்கம் என்று அடையாளப்படுத்த முடியும். தன்னைவிட்டு மாதவியிடம் கோவலன் சென்ற போதும் அவனே தன்னுடைய கணவன் என்ற மன உறுதிப்பாடும், கணவனைக் காணாத தேவந்தி குளம் சுற்றி இறைவனை வேண்ட கண்ணகியை அழைக்கும்போது, 'பீடன்று' என்று சொல்லி தலைவனின் மீது கொண்டுள்ள அன்பினைக் கண்ணகி உறுதிப்படுத்துகின்றாள். கணவனே கண்கண்ட தெய்வம், என் கணவனை விட்டுக் கடவுளைத் தொழும் பண்பு என்னால் உயர்ந்ததாகவோ, பெருமையாகவோ கொள்ள

முடியாது என்பதின் அடையாளமே ‘பீடன்று’ என்ற சொல் வாயிலாகக் கையாளப்பட்டுள்ளது. கணவனையே தெய்வமாகத் தொழும் மனைவியின் சொல்லிற்கு இயற்கையும் கட்டுப்படும் என்பது வள்ளுவரின் கற்பொழுக்க நெறியாகும்.

“**தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**
பெய்யெனப் பெய்யும் மழை”

இந்தக் கருத்தமைவைக் கொண்டு இன்று பொருத்திப் பார்த்து தீர்வைக் காண வேண்டுமென்பது தவறான கண்ணோட்டமாகும். அவளுடைய வாய்மையாற்றலும், மனத்தூய்மையும், மன உறுதியும் இயற்கையைக் கூட கட்டுப்படுத்தும் ஆற்றல் கொண்டது என்று புரிந்து கொள்ள முடியும். ஒரு பெண்ணுக்கு மட்டுமே கற்பு என்ற ஒழுக்கத்தை வரையறுக்காமல் ஆணுக்கும் பொதுவானதாக்க வேண்டும் என்று புதிய சிந்தனையைத் தூண்டிவிட்ட பெருமை பாரதிக்கு உண்டு.

“கற்பு நிலையென்று சொல்ல வந்தாரிரு
கட்சிக்குமஃது பொதுவில் வைப்போம்”

என்று பாரதி புரட்சி செய்திருக்கின்றார்.

நந்தினி

கல்கியின் வரலாற்று நாவலில் கற்பில் சிறந்தவளாக நந்தினியைக் கூறலாம். பலர் நந்தினியை அடைய விரும்ப யாரிடமும் அவள் மயகாமல் வந்தியத்தேவனிடம் மட்டும் மனதைப் பறிகொடுக்கிறாள். நந்தினியின் அழகை கூறும்பொழுது, இவ்வளவு அழகும் இவ்வளவு மயக்குந்திறனும் இவ்வளவு சூழ்ச்சியும் துணிவும், நெஞ்சுரமும் கொண்ட ஒரு பெண் இருக்கிறாளா! என்று எவரையும் வியப்புறச் செய்யும் பாத்திரப்படைப்பு நந்தினி. ஒரு சமயத்தில் அவளை முழுவதுமாக அறிமுகப் படுத்தினால் அழகின் பேரொளியைப் படிப்போர் தாங்க மாட்டார்கள் என்று நினைத்தே, அவளது முகத்தை மட்டும் முதலில் காட்டுகிறாள் ஆசிரியர். பின் முழு அழகையும், அதன் ஆற்றலையும் வெளிப்படுத்துகிறார்.

பல்லக்கின் திரை விலகப் பழுவூர் ராணி நந்தினியின் முகம் தெரிகிறது. “மேகத்தினால் மூடப்பட்டிருந்த பூரண சந்திரன் மேகத்திரை விலகியதும் பளீரென்று ஒளி வீசுவது போல் சிவிகைக்குள்ளே காந்திமயமான ஒரு பெண்ணின் முகம் தெரிந்தது” என்று ஆசிரியர் முக அழகைக் காட்டுகிறார்.

நந்தினியின் அழகு

தேவலோகத்து மந்தார மரங்களிலிருந்து உதிர்ந்த மலர்களைச் சேகரித்தான். சேகரித்த மலர்களைத் தேவலோகத்தில் தேவாமிர்தம் வைத்திருக்கும் தங்கக் கலசத்தில் போட்டான் அமுதமும் மலர்களும் ஊறிக் கலந்து ஒரே குழம்பான பிறகு எடுத்தான். அந்தக் குழம்பில் வெண்ணிலாக் கிரணங்களை ஊட்டினான். பண்டைக்காலத்துப் பாணர்களை அழைத்து வந்து யாழ்வாசிக்கச் சொன்னான். அந்த யாழின் தசையையும் கலந்தான். அப்படி ஏற்பட்ட அற்புதமான கலவையினால் உன் திருமேனியைப் படைத்தான் பிரம்மதேவன் என்று பெரிய பழுவேட்டரையரின் வாக்கினால் அவள் உருவத்தை வருணிக்கிறார் ஆசிரியர்.

“காசிப்பட்டின் மென்மையும், கள்ளின் போதையும், காட்டுத்தேனின் இனிப்பும், கார் காலத்து மின்னலின் ஜொலிப்பும் ஒரு பெண்ணின் குரலில் கலந்திருக்க முடியுமா? அவ்விதம் இதோ கலந்திருக்கின்றனவே” என்று குரலினிமையைச் சொற்களால் ஆசிரியர் பதிவு செய்கிறார்.

நந்தினியின் பேரழகை ஆசிரியர் வேறெந்தப் பெண்ணுக்கும் வழங்கவில்லை. அவள் அழகு அற்புதமானது. ஆனால் ஆபத்து நிறைந்தது. குந்தவை, நந்தினி ஆகிய இருவர்க்குமுள்ள சக்தியை ஆர்வார்க்கடியார் உணர்த்துகிறார்.

“ஒருவன் நரகத்தில் விழப் போகிறவனாயிருந்தால், அவனைத் தடுத்து நிறுத்திக் குந்தவை தேவி சொர்க்கத்துக்கு அவனைக் கொண்டு போய்ச் சேர்த்து விடுவார். அது ஒருவித சக்தி. நந்தினி ....நரகத்தையே சொர்க்கம் என்று சொல்லிச் சாதித்து, அதை நம்பும்படியும் செய்து, நரகத்தில் சந்தோசமாகக் குதிக்கும்படி செய்து விடுவாள்”. நந்தினி தன் அழகினால் செய்யும் சாதனை இது என்கிறார் ஆசிரியர்.

நந்தினியின் அழகில் முதலில் ஆதித்தகரிகாலர் மயங்குகிறார். பின் பெரிய பழுவேட்டரையர் மயங்கி மணம் செய்து கொள்கிறார். கந்தன்மாறன் கருத்திழந்து அவள் கட்டளையை நிறைவேற்றக் காத்திருக்கிறான். பார்த்திபேந்திரன் தனக்கு நூறு உயிர்கள் இருந்தால் அவ்வளவையும் அவள் விருப்பத்தை நிறைவேற்ற அர்ப்பணிப்பதாகக் கூறுகிறான்.

காதல் வலையில் நந்தினி

நந்தினியின் எழிற்சுடரில் இவர் விட்டில்களாக அனைவரும் விழ, வந்தியத்தேவன் ஒருவன் மட்டும் விலகித் தப்புகிறான். அழகைக் கண்டதும் அறிவையிழந்து தடுமாறும் ஆடவரிடையே, தன்னிலை இழக்காத அவனது தைரியம் நந்தினியைக் கவருகிறது. குந்தவை சொன்னபடி, அவள் வீரபாண்டியன் உட்பட வேறு

யாரையும் காதலிக்கவில்லை. வந்தியத்தேவன் ஒருவனையே உண்மையாகக் காதலிக்கிறாள். நந்தினி தான் மேற்கொண்ட அனைத்துச் செயல்களிலும் வெற்றி பெறுகிறாள். ஆனால் இவள் தோற்றது இந்த வந்தியத்தேவன் ஒருவனிடம் மட்டும்தான்.

நந்தினி இளமையிலேயே குந்தவையின் வெறுப்பைப் பெற்று, அதன் காரணமாகச் சோழ குலத்தையே வெறுக்கிறாள். நிராயுதபாணியாய்க் காயமுற்றுக் கிடந்த வீரபாண்டியன். தன் காதலர் என்றுகூறி அவரைக் காப்பாற்ற அவள் வேண்டியும் கரிகாலன் வீரபாண்டியனைக் கொன்றான். அதனால் குறிப்பாக ஆதித்த கரிகாலனை அதிகமாய் வெறுக்கிறாள். பாண்டியனின் ஆபத்துதவிகளுடன் சேர்ந்து சோழர் குலத்தையே வேரறுக்கச் சபதம் செய்கிறாள். கரிகாலனைத் தானே கொல்லும் பொறுப்பையும் மேற்கொள்கிறாள். வைர நெஞ்சோடு செயல்பட்டு, தான் மேற்கொண்ட செயலில் வெற்றி பெறுகிறாள். கரிகாலனைக் கொன்றது யார் என்பதை ஆசிரியர் வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும், கரிகாலனின் மரணம், நந்தினியின் வெற்றி என்பதில் சிறிதும் ஐயமில்லை.

நிறைவாக – – – –

நந்தினி என்ற கதாபாத்திரம் நாவல் முழுவதும் ஒழுக்கத்தில் வழுவாதவளாகவும், மர்ம மகையாகவும், சூழ்ச்சி திறன் மிக்கவளாகவும், ஆசிரியர் படைத்து இருக்கிறார். குந்தவை ஆற்றல் பெற்றவள். அழகும் பெற்றவள். நந்தினி அழகு பெற்றவள். ஆற்றலும் பெற்றவள். குந்தவையின் அறிவும் அழகும் ஒரு பேரரசைக் கட்டிக் காக்கும். நந்தினியின் அழகும் அறிவும் ஒரு பேரரசைக் கவிழ்க்கும், அழிக்கும். புனைகதை உலகில் நந்தினியை மிஞ்சிய வஞ்சமகள் ஒருத்தியைக் காண்பது மிகவும் அரிது எனலாம். இந்தச் செயல்கள் மூலம் நந்தினி கற்பில் சிறந்தவள் என்று கூறலாம். ஒரு பெண் என்பவள் எதை நினைத்தாலும் சாதிக்க முடியும். இவள் நினைத்திருந்தால் உலகில் இருக்கக் கூடிய ஆண்கள் அனைவரையும் மயக்கி தான் நினைத்ததை சாதித்து இருக்கலாம். இவ்வளவு அழகு பொருந்தியவளாக இருந்தும் வீரபாண்டியனைக் கொன்ற ஆதித்த கரிகாலனைப் பழி வாங்க நினைக்கிறாள். ஆதலால் சோழர் குலத்தையே வெறுக்கிறாள். இறுதியில் தான் மேற்கொண்ட செயலில் வெற்றியும் பெறுகிறாள் எனலாம்.

துணைநூற்பட்டியல்

கிருஷ்ணமூர்த்தி. இரா (கல்கி) – பொன்னியின் செல்வன்
வர்த்தமானன் பதிப்பகம்
தியாகராய நகர்
சென்னை – 17 , 2005.

சுந்தா., – பொன்னியின் புதல்வர்
வானதி பதிப்பகம்
சென்னை
முதற்பதிப்பு 1976

நச்சினார்க்கினியர் – தொல்காப்பிய உரை
கழக வெளியீடு
சென்னை.

பூவண்ணன் – கல்கியின் வரலாற்று நாவல்கள்
வானதி பதிப்பகம்
சென்னை, 1988.

மெய்யப்பன்.ச., – கல்கியின் எழுத்துலகம்
மணிவாசகர் பதிப்பகம்
பாரிமுனை
சென்னை

மோகன்.இரா., – இலக்கிய விருந்து
மீனாட்சி புத்தக நிலையம்
மதுரை.

அஞ்ஞாடி நாவல் காட்டும் சமூகம்

* **இரா.இராஜபிரபு,** *ஆய்வியல் நிறைஞர், தமிழாய்வுத்துறை, மஹேந்ரா கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) காளிப்பட்டி, நாமக்கல் மாவட்டம் – 637 501.*

சமூகம் இணைந்து வாழும் மக்கட் தொகுதியைக் குறிக்கம் சமூகம் அல்லது சமுதாயம் என்ற சொல் பழந்தமிழரின் தொல் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலோ, சங்கத்தமிழ் மக்களின் வாழ்வியல் களஞ்சியமாகி சங்க இலக்கியத்திலோ அமையவில்லை. மேலும் உலகம் எனவும், மக்கள் எனவும் கருத்தில் கொண்டும், அவர்தம் எண்ணங்களின் பிழிவுகளாக அமைந்து காணப்படுகிறது. அன்னி தாமசு வரையறைப்படி சமூகம் என்ற சொல் இந்த உலகம் மற்றும் மக்களின் வாழ்வியலே என்பதை இவ்வாய்வுக் கட்டுரை எடுத்துரைக்கிறது.

சமூகம் மற்றும் அவற்றின் நிறுவனங்களின் பொது நிலை மற்றும் சிறப்பு நிலைகளை பல்வேற கூறுகளாக தமிழ் நாவல்கள் தன்னகத்தே கொண்டுள்ளது. இதன் மூலமாக ஒரு சமூகத்தின் உண்மையான பக்கத்தை உள்ளவாறு உணர முடிகிறது. நாவல் என்பது ஒரு கலைவடிவம் என்பதற்கு மேலாகச் சமூக ஆவணம் என்பதற்கான தகுதி பெற்று விளங்குகிறது என்பதை அஞ்ஞாடி நாவல் மூலமாக இங்கு எடுத்துரைக்கப்படுகிறது.

அஞ்ஞாடி கதைக்களம்

அஞ்ஞாடியின் நாவிலின் களம் தமிழகத்தின் தெற்குப்பகுதியின் உள்ள கருக்கல் என்னும் கிரரமாக கொண்டுள்ளது. ஆண்டி மாரி என்னும் இருவேறு ஒதுக்கப்பட்ட மனிதர்களின் வாழ்விலிருந்து உருவாகியிருக்கும் இப்படைப்பு பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியின் காணமுடிகிறது.

ஆண்டிக்குப்பின், மாரி வண்ணான் கழுகுமலை பெரிய நாடார் ஆகிய மூன்று கதாப்பாத்திரங்களின் வாயிலாக சமூகங்களின் வம்ச வரலாறும், ஒடுக்குமுறைக்கு ஆளான சமூக வரலாறும் அறியமுடிகிறது.

சாதிய வழக்காறுகள்

சமுதாயத்தில் சாதி எனப்படுவது வரையறைகளை உருவாக்கம் முக்கியக்கூறாகக் காணப்படுகிறது. இச்சாதிப்பாகுபாடு எல்லா நிலையிலும் தனது ஆதிக்கத்தைச் செலுத்திக் கொண்டிருககிறது என்பது கசப்பான உண்மையாகும். இவ்வகையில் ஒரு சாராரைத் தீண்டத்தகாதவர்கள் என்று கூறி ஒதுக்கிடும் சமுதாயக் கொடுமையை ஆசிரியர் பரவலாகப் பதிவு செய்துள்ளார்.

தமிழச் சமூக வரலாற்றில் நிகழ்வான கழுகுமலை, சிவகாசி சாதிக் கலவரங்களும், தலித்துகள் கிறிஸ்தவத்திற்க மதமாறிய வரலாறும் இந்த நாவலின் சமூகவியல் பரிமாணங்களை எடுத்துரைக்கின்றன.

மேலும் சைவர்கள் எண்ணூறு சமணர்களை கழுவிலேற்றி கொலை செய்த துன்பவயில் சம்பவத்தினையும் பதிவு செய்கின்றது. தாதுவருஷப் பஞ்சத்தில் அடித்தள மக்கள் அவதியுறம் நிலை போன்றவற்றினை நம் கண்முன்னே ஆசிரியர் காட்சிப்படுத்திருப்பதை தெளிவுபடுத்துகிறது.

சமூக பரிமாணம்

பாண்டிய மன்னர்களின் வீழ்ச்சி, நாயக்க மன்னர்களின் ஆட்சியதிகாரம், பாளையக்காரார்களின் விடுதலைப் போராட்ட யுத்தங்கள், ஜமீன்களின் அதிகாரமும் அடக்குமுறைகளும் விவரிக்கப்பட்டுள்ளன. இவை தவிர அப்பர், பிள்ளையாண்டவர், கான்சாகிப், கட்டபொம்மன், ஊமைத்துரை, என பல்வேற சமூக வரலாற்று பரிமாணங்களையும் ஆயிரம் ஆண்டுகால சமூக வரலாற்றின் சாரத்தையும் கொண்டதாக இந்நாவல் வெளிப்படுத்துகிறது.

பஞ்சம், சாதிச்சண்டை, ஒரு இனமே இடம் பெயர்வது பல்வேறு சாதிகளின் பொறாமைக்கும் எதிர்ப்புக்குமிடையே நாடார்களின் பொருளாதார முன்னேற்றம் தங்கள் சமூக மேம்பாட்டுக்கான அவர்களது முயற்சி, வெள்ளைக்காரர்களுக்கு எதிராக அங்கு நடந்த சண்டைகள் ஆடுமாடுகளை, கோவில் நகைகளைத் திருடுவது, எந்திரமயமாதலின் விளைவுகள் எனப் பல சமூகப் பரிமாணங்களை துல்லியமாக ஆசிரியர் கூறியுள்ளார்.

இயற்கை சீற்றம்

சமூகம் இரண்டு நிலைகளில் மாற்றமடைகின்றது. ஒன்று இயற்கை மாற்றம். மற்றொன்று மனிதருள் ஏற்படும் மாற்றம். இந்நாவலில் ஆசிரியர் இயற்கையின் கொரூரத்தை மட்டுமல்ல அதன் விளைவையும் விரிவாக எடுத்துரைக்கின்றார். வறட்சியும் பஞ்சமும் மக்களைப் பாடாய்ப்படுத்தும் நிலையின் தாதுவருஷப் பஞ்சத்தின் மூலமாக காட்ப்படுத்துகின்றார்.

சாணக்கிழங்கை அத்தைப் பதப்படுத்தும் முன் பசியில் கிழங்கையே தின்றுவிட நாக்கில் அரிப்பெடுக்கும் சிறுவர். மாட்டுக்குப் பதிலாக கமலையிறைக்கும மனிதர்கள். வாழைக்கு உரமாகும் பிண்ணாக்கைத் திருட்டுத்தனமாகச் சேகரித்துத் தின்பதையும், எறும்புகள் சேர்த்து வைத்த தானியங்களைத் தங்கள் பசிக்குத் தேடுவதையும், பரமாரிக்க முடியாமல் பிள்கைள் போல் வளர்த்த கழுதையையும், நாயையும் கொன்று விடுவதையும், கடைசியில் மனிதர்களே வயது வித்தியாசமில்லாமல் வரிசையாக செத்து மடிவதையும் ஆசிரியர் பஞ்சத்தின் அவலமாக சித்தரித்துள்ளார்.

பஞ்சத்தில் மனிதனின் இறப்பினைப் பற்றி எடுத்துக்காட்டும் பொழுது யார் யாரை தூக்கிச் செல்வார்கள் என்பது தெரியாது. ஒருவருக்கு ஒரு குழி. பிறகு ஒரு குடும்பத்திற்கு ஒரு குழி. அதன்பிறக ஒருநாளில் சாகிற எல்லோருக்கும் ஒரு குழி என்று ஒன்றாகப் போட்டு மூடுகின்றார் என மரணம் மட்டுமே மனிதனுள் சமத்துவத்தை உண்டாக்க முடியும் என்பதை கேலியாகவும் ஏக்கத்துடனும் ஆசிரியர் கூறியிருப்பதை காண முடிகிறது.

முடிவுரை

இந்நாவிலில் ஆவணச் சான்றுகளின் அடிப்படையில் பெரும்பாலும் கடந்தகால வரலாற்றை, சமூகத்தை ஆசிரியர் அணுகியிருக்கிறார் என்பதினை அறிய முடிகின்றது.

ஒரு நூற்றாண்டின் வராற்றில் நிகழும் சமூக மாற்றம், அதன் விளைவுகளையும் அதில் நிகழும் ஏற்றத்தாழ்வுகள் போன்றவை எடுத்துக்கரைக்பட்டுள்ளது.

சாதிய அடிப்படையில் ஏற்படும் சிக்கல்கள் மற்றும் தனிமனிதக் கோட்பாட்டை மையமாகக் கொண்டு சமுதாயத்தின் பல நிலையில் உள்ள மாந்தரைப் படைத்து அந்நிலையின் நல்லவை, நலிவுகள், சீர்கேடுகள், போராடும் வகை போன்றவற்றை சமுதாயப் பார்வையுடன் காட்டுவதுடன் சமுதாயத்தின் பல முகங்களைச் சமூக நோக்குடன் விவரிப்பதை உணரமுடிகின்றது.

பார்வை நூல்கள்

1. தாயம்மாள் அறவாணன், தமிழ் சமூகவியல் கருத்தாடல்.

2. சுப்பையா அரங்கன், சமூகவியல் அறிஞர்களும் கோட்பாடுகளும்.

விளம்பு நிலை மனிதர்களும் தலித்தியமும்

*முனைவர் கா.காந்தி, *பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், தமிழாய்வுத்துறை, மஹேந்ரா கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) காளிப்பட்டி, நாமக்கல் மாவட்டம் – 637 501.*

முன்னுரை

தமிழ் மொழியில் பல்வேற இலக்கிய வகைகள் தோன்றியுள்ளன. அதில் ஒன்று தலித்தியம். இது, பின் நவீனத்துவ இயக்கத்தில் ஒன்று ஆகும். தலித்தியம் என்ற சொல் மராட்டிய இலக்கியத்தில் வேறூன்றி, பின் பல மாநில இலக்கியங்களில் பரவி இருந்தன. இத்தலித்தியம் என்ற சொல் முதலில் சாதிரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களை குறித்து ஆய்வதாக இருந்தது. இதற்குப் பின்னர் விளிம்புநிலை ஆய்வு தோன்றியது. இவ்விளம்பு நிலை ஆய்வானது சாதி ரீதியாக மட்டுமின்றி, வர்க்க ரீதியாகவும், மத ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பின் தள்ளப்பட்ட அனைத்து மக்களைப் பற்றி ஆய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை வெளிப்படுத்துகிறது.

விளிம்புநிலை – சொல் விளக்கம்

பொருளாதாரம், கல்வி, சமூக அந்தஸ்து ஆகியவற்றிலிருந்து விலகி இருப்பது அல்லது ஒதுக்கப்பட்டிருப்பது ‘விளிம்பு நிலை’ எனப்படும். விளிம்பு என்பது மையத்திலிருந்து விலகி பொருளாதாரம், கல்வி, வேலைவாய்ப்பில் தாழ்ந்த நிலையில் இருப்பவர்களைக் குறிக்கும். இவ்விளம்பினை நோக்கிச் செல்பவர்கள் அல்லது தன்னிறைவு அடையாதவர்கள் ‘விளிம்புநிலை மனிதர்கள்’ எனப்படுகின்றனர்.

விளிம்புநிலை உள்ளடக்கம்

விளிம்புநிலை மனிதர்கள்

1. சாதியில் பின்தங்கியவர்கள்

2. பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள்

3. கல்வியில் பின்தங்கியவர்கள் என மூன்று பிரிவுகளாகப் பகுக்க முடிகிறது.

சாதியில் பின்தங்கியவர்கள்

சாதி அமைப்பு என்பது பண்டைய காலத்திலிருந்து இன்றை காலம் வரை தொடர்கிறது. அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்ற சாதிப் பாகுபாடுகளின் அடிப்படையிலும் இன்றும் சமுதாயத்தில் கல்வி, பொருளாதாரம், சமூக அந்தஸ்தில் உயர்ந்தவர்கள் மேல் சாதியினர் எனவும், இவைகளில் பின்தங்கியவர்கள் மற்றும் சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர்கள் கீழ்ச்சாதியினர் எனவும் வகுத்துக் கொண்டு வாழந்து வருகின்றனர். இந்த கீழ்ச்சாதி மக்கள் கல்வி நிலையிலும், பொருளதார நிலையிலும், சமூக மதிப்பிலும் மற்ற இன மக்களைப் போன்று முன்னேற்றும் அடைய வேண்டும் என்றும், ஒட்டு மொத்த சமுதயாத்தில் சமநிலைப்பெறவேண்டும் என்றும் எண்ணி செயல்படுகின்றனர் என்பதை உணரமுடிகிறது.

பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள்

பழங்காலத்தில் தொழில் அடிப்படையில் சாதிகள் பிரிக்கப்பட்ட நிலையில் சமுதாய மக்களிடைய பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் ஏற்படத் தொடங்கின. அவரவர்கள் செய்த தொழிலுக்கு ஏற்ப வருமானங்களால் உயர்வு பெற்றும், உயர்ந்த நிலையில் வாழ்ந்த மக்களது பொருளாதாரத்தால் பெருகி, பின்தங்கிய நிலையில் வாழ்ந்த மனிதர்களின் பொருளாதார நிலை கீழ்நோக்கியே தள்ளப்பட்டது. இக்கீழ்நிலையில் வாழும் விளிம்புநிலை மனிதர்கள் மேல்நிலையை அடைந்த மையத்தை நோக்கி நகர்ந்து செல்ல முற்படும் பொழுது அவர்களுக்கு சமூகங்கள், கலாச்சாரங்கள்

மூடநம்பிக்கைகள் போன்றவை இடையூறாக இருக்கின்றன. பொருளாதார நிலையில் வாழும் இவ்விளம்பு நிலை மனிதர்கள் தங்கள் எண்ணிய மையத்தை அடைய பலவகைப் போராட்டங்களை இன்றும் நடத்தி வருகின்றனர் என்பதை விளக்க முடிகிறது.

கல்வியில் பின்தங்கியவர்கள்

நம் சமூகத்தில் அரசர்கள், அந்தணர்கள் போன்ற உயர்குடியில் பிறந்த ஆண் மக்களுக்கு மட்டுமே கல்வி கற்கும் உரிமை உண்டு என்ற நிலை இருந்து வந்தது. பிற்காலத்தில் கல்வி கற்க வேண்டும் என்ற மையத்தை நோக்கி கல்வி மறுக்கப்பட்ட குடியில் பிறந்த மக்கள் நகரும்பொழுது அரசியல், பொருளாதாரம் காணமாக சில இன மக்களுக்கு மட்டும் கல்வி கற்கும் வாய்பு அளிக்கப்பட்டது. தாழ்ந்த இனத்தைச் சார்ந்தவர்களுக்கும் பெண்களுக்கும் கல்வி மறுக்கப்பட்டு வந்தது. இவர்கள் கல்வி எனும் பாத்திரத்தின் விளிம்பிலிருந்து பாத்திரத்திற்குள் செல்வதற்காக பலவகையான குழுக்களாக பிரிந்து தங்களது கல்வி கற்கம் உரிமையைப் பெற எதிர்ப்புகள், போராட்டங்கள் என நிகழ்ச்சி கல்வி கற்கும் உரிமையை கொஞ்சம் கொஞ்சமாக பெற்று வருகின்றனர் என்பதை இன்றும் உணரமுடிகிறது.

விளிம்புநிலை இனவேறுபாடு

சாதி, பொருளாதாரம், கல்வி ஆகியவற்றில் உயர்நிலைகளைப் பெற்றிருப்பவர்களே சமுதாயத்தில் உயர் மதிப்பில் இருக்கின்றனர். சாதி, பொருளதாரம், கல்வி ஆகியவற்றை பெற்றிருக்கும் சராசரியின் அடிப்படையில் ஒரு மனிதனின் மதிப்புகள் சமூகத்தில் மதிக்கப்படுகின்றன. குறைவான மதிப்பினைப் பெற்றுள்ள கருத்துக்கள் ஒட்டுமொத்த சமுதாயத்தில் எடுபடுவதில்லை. ஆனால் உயர் மதிப்பினைப் பெற்றுள்ள ஒரு தனி மனிதன் கூறும் கருத்துக்கள் உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஆகையினால் சமூக மதிப்பில் விளிம்பு நிலையில் வாழும் மதிப்பு குறைந்த மக்கள் சமுதாய அமைப்பில் உயர் மதிப்பில் வாழும் மையத்தை நோக்கி செல்வது இயல்பாகும். இவர்களில் குறிப்பாக,

1. இன அடிப்படையில் தாழ்த்தப்பட்டோர்

2. பொருளாதார அடிப்படையில் பின்தங்கியுள்ளோர்

3. உடற்கூறு அடிப்படையில் மூன்றாம் பாலினத்தவர்கள்

4. கல்வி அறிவு அடிப்படையில் கல்லாதோர்

5. உரிமையற்ற நிலையில் பெண்களங

என்ற ஐவகை மனிதர்களைக் குறிப்பிடுகின்றனர்.

இன அடிப்படையில் தாழ்த்தப்பட்டோர் என்ற வகையில் கருப்பர் இனம் தலித்தினம் என்ற இரு இனங்களைக் குறிப்பிடலாம். இதில் நிறம் அடிப்படையில் கருப்பினம் வெள்ளையர் இனத்தைக் காட்டியிலும் அனைத்து நிலைகளிலும் மேலோங்கி இருக்கின்றது. தலித் இனிமே, தான் ஒரு தாழ்வான இனம் என்று நினைப்பதினாலும், மற்ற இனங்களை தலித் இனத்தை தாழ்வான இனமென்று ஒதுக்குவதாலும் தலித்தினம் பின்தங்கிய நிலையில் உள்ளது. இந்த நிலையில் தான் இனைறய சமூகம் இயங்கி வருகிறது. இச்சமூக இயக்கத்தினை எதிர்த்து இன அடிப்படையில் தாழ்த்தப்பட்ட தலித் இன விளிம்புநிலை மனிதர்கள் அவ்வப்போது தங்களது எதிர்ப்புகளையும் அதன்வழி போராட்டங்களையும் நடத்தி சில சமயங்களில் வெற்றிகளையும் அடைந்து வருகின்றனர்.

தலித்தியம் – தலித் சொல் விளக்கம்

'தலித்' என்ற சொல் மாராட்டிய சொல். இதை முதன் முதலில் சோதிராவ் பூலே கையாண்டபொழுது அதற்கு 'புறச்சாதியினர்' என்ற பொருளே கொடுக்கப்பட்டுள்ளது. அம்பேத்கார் 'தலித்' என்ற சொல்லைப் பயன்படுத்தினாலும் தொடர்ந்து அவர் அதைக் கையாளவில்லை. 1950–ல் 'தலித்' என்பது புத்த சமயத்திற்கு மாறிய தாழ்த்தப்பட்டோரைக் குறித்தது. தாழ்த்தப்பட்டவர்கள், மலைவாழ் மக்கள், புதிய பவுத்தர்கள், உழைக்கும் மக்கள், நிலமற்றவர்கள், ஏழை விவசாயிகள், பெண்கள், அரசியல் பொருளாதார ரீதியாகவும் மதத்தின் பெயராலும் சுரண்டப்படும் அனைவரும் தலித்துகள் என கெயில் ஓம்வெத் என்ற அறிஞரும், 'தலித்' என்பது மராத்திய சொல்லாகம். தலித் என்ற இச்சொல் இந்திய சமூக அரசியல் தளத்தில் தாழ்ந்த சாதியினரைக் குறிப்பிடுவதற்க பயன்படுத்தப்படுகிறது.

தலித்தியமும், தலித் இயக்கமும்

அடக்கப்பட்டு, அமுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு ஓரம் கட்டப்பட்டு விளிம்புநிலை மக்களின் அனுபவத்துயரக் குரலே 'தலித்தியம்' ஆகும். சமூக, அரசியல், பொருளாதார சாதி அடக்கு முறைகளிலிருந்தும் ஒடுக்கு முறைகளிலிருந்தும் அவற்றைத் தகர்த்து எறிந்து வெளிவரத் துடிக்கும் உணர்வை, ஒரு உன்னத முனைப்பை, வெளிப்படுத்துவதே தலித்தியம் ஆகும். தலித் இயக்கத்தின் கருதுகோள் தலித் விடுதலையை முன் வைத்த மனித விடுதலையாகும்.

தலித்துகளின் வாழ்வியல், அவர்களது சமூக பண்பாட்டு தலித் சாரத்தை எந்த எழுத்து

அடையாளப்படுத்துகிறதோ அதுதான் தலித் இலக்கியம். யாரெல்லாம் தலித்தாக தன்னை உணர்ந்து எழுதுகிறார்களோ அவர்களே தலித் எழுத்தாளர்கள். தாழ்த்தப்பட்ட மட்ககள் என்று சொல்லப்படும் இச்சமூகத்தின் அடித்தட்டு உழைக்கும் மக்கள், தமது ஆடையிழந்து, அரைச்சான் வயிற்றுக்கு உணவு இழந்து, தங்குமிடத்தை இழந்து, அழுக்கு மனிதர்களாக, சுதந்திரக்காற்றை சுவாசிக்காத அவல வாழ்க்கையை அனுபவித்து சேரிகளிலும், ஆற்றோரங்களிலும், சாலைகளின் ஓரங்களிலும் வீடுகளை அமைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இம்மக்களின் அனுபவ இலக்கியங்களே தலில் இலக்கியம் என்று கருத முடிகிறது.

தமிழகச் சூழலில் தலித் இலக்கியம்

தலித் இலக்கியத்தின் இன்றியமையாத தீண்டாமை எதிர்ப்பு, சாதி ஒழிப்பு ஆகிய கூறுகள் இரண்டாயிரமாண்டுகள் பழமையான தமில் இலக்கியங்களிலிருந்து இன்று வரை இடம் பெறுகின்றன. சங்க இலக்கிய புறநானூற்றில் சாதி எதிர்ப்பு, வருணாசிர எதிர்ப்புக் கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. சங்க மருவிய கால இலக்கியங்களான திருக்குறள், நாலடியார் போன்ற இலக்கியங்களிலும் சாதி எதிர்ப்புக் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. பக்தி இலக்கியத்தில் வைணவ நெறியில் சாதி மறுப்பு காணப்படுகிறது. இவற்றினால் அவைரும் சமம் என்ற கருத்து நிலவுகிறது. 20ம் நூற்றாண்டின் இறுதிப் பதினைந்த ஆண்டுகளில் தலித் இலக்கியம் எனும் புதிய வகை இலக்கிய முயற்சிகள் உருவாகி உள்ளன. அம்பேத்கார் நூற்றாண்டு விழா தமிழகத்தில் கொண்டாடப்பட்டதன் விளைவாகத் தலித் மக்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்வு தலித் இலக்கியம் தோன்ற இன்றியமையாத காரணியாக அமைந்ததுள்ளது.

தலித் மக்கள், அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் வாயிலாகவே கொடுமைகளுக்கு எதிராக போராடி விடுதலை பெற முடியும் என்னும் அரசயில் விழிப்புணர்வின் வெளிப்பாடாகவே தலித் இலக்கியம் தோன்றியது. இத்தலித் இலக்கியம் தலித் மக்களின் வாழ்வியலையும் அவர்களின் அரசியல், சமூக சூழ்நிலையையும் அவர்களின் மனநிலைப் பற்றி அறிந்து ஆராய்ந்து எழுதப்படுகின்றது.

தலித் இலக்கியப் படைப்புகள்

தலித் மக்களின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றிய படைப்பிலக்கியம் அனைத்தும் தலித் இலக்கியப் படைப்புகள் எனப்படும். இந்த படைப்பிலிக்கியங்களில் கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், என்ற வகைகளாக காணமுடிகின்றன. தமிழ் தலித் படைப்பளாளர்களில் ஈழத் தமிழ் படைப்பாளர் டானியல் முக்கியமானவராவார். தலித் படைப்பளர்களை, தலித் கவிஞர்கள், தலித் புதினப் படைப்பாளர்கள், தலித் சிறுகதைப் படைப்பளர்கள், மொழி பெயர்ப்பாளர்கள், நாடகப் படைப்பாளர்கள், இசைப்பாடல் இயற்றுவோர், கானாப்பாடல் பாடுவோர் என வகைப்படுத்த முடிகிறது.

தமிழகத்தில் குறிப்பிடத்தக்க தலித் கவிஞர்களாக இளந்துறவி, கண்மணி குணசேகரன், தலையாரி, பாரதி வசந்தன், நவகவி, மோகனப்பிரியன், இரத்தின புகழேந்தி, ராஜமுருகுபாண்டியன் ஆகியோர் உள்ளனர். இன்குலாப், பழமலய் ஆகிய இரு கவிஞர்களும் தலித் இனத்தைச் சாராத கவிஞர்களாக இருந்தாலும் சமூக படைப்பாளர்களாக கருதப்படுகின்றனர்.

தனிக்கவிதை படைப்புகள்

கண்மணி குணசேகரன் **'தலைமுறை கோடம்'** என்னும் கவிதைத் தொகுப்பையும் **தலையாரி 'எங்கே எமது முகம்'** என்னும் கவிதை தொகுப்பையும் வெளியிட்டுள்ளனர். பாரதி வசந்தன் **'புதிய நெருப்பு'** எனும் கவிதை நூலை வெளியிட்டுள்ளார். தஞ்சை மாவட்டம் கீழ் வெண்மணி கிராமத்தில் கூலி உயர்வு கேட்ட 44 தலித்துக்கள் உயிருடன் கொளுத்தப்பட்ட கீழ் வெண்மணிப் படுகொலையை மையமாகக் கொண்டு படைக்கப்பட்ட நவகவியின் **'வெண்மணி'** எனும் நெடுங்கவிதைத் தொகுப்பும், மோகனப்பிரியன் எழுதிய மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன் எனும் கவிதைத் தொகுப்பும், தமிழ்நாடு இறையியல் கல்லூரியின் தலித் ஆய்வு மையத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ளன. கிறிஸ்துவ தலித்துகளின் சாதி எதிர்ப்பு குரலாக ஒலிப்பதே இரத்தின புகழேந்தி எழுதிய **'மண்கவுச்சி'** என்னும் தலித் படைப்பில் காண முடிகிறது.

தலித் இனத்தைச் சாராத கவிஞர்கள்

இன்குலாப் என்பவர் நாத்திகராக இருந்து தலித் மக்களின் விடுதலைக்காக கவிதைகள் படைத்துள்ளார். பழமலய் **'சனங்களின் கதை' 'குரோட்டன்சுகளோடு கொஞ்ச நேரம்', 'இவர்கள் வாழந்தது'**, போன்ற கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். தலித் கவிதைப் படைப்புகளின் வாயிலாக சமய எதிர்ப்புக் கருத்துக்களும், பார்ப்பனிய எதிர்ப்புக் கருத்துக்களும் வெளிப்படுகின்றன. தலித் மக்கள் மீதான வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் குறித்து விழிப்புணர்வைத் தலித் மக்களுக்கு ஏற்படுத்தத் தலித் கவிதைகள் முயல வேண்டும். தலித் கவிதைகள், தலித் மீது காட்டப்படும் தீண்டாமை, சாதிய ஒடுக்குமுறை குறித்த விழிப்புணர்வின் வெளிப்பாடாக அமைந்து இலக்கிய பதிவுகளாக வெளிப்படுத்துகிறது.

தலித் புதினப் படைப்பாளர்கள், படைப்புகள்

தமிழில் தலித் புதினங்களைப் படைப்புகள் குறிப்பிடத் தகுந்தவர் ஈழத்துத் தமிழ் எழுத்தாளரான கே.டானியல் ஆவார். இவரைத் தவிர தமிழகத்தில் அறிவழகன், இமையம், சிவகாமி, பாமா, பூமணி, மாற்கு ஆகியோர் குறிப்பிடதக்கவர்கள்.

கே.டானியல் எழுதிய அடிமைகள், கானல், கோவிந்தன், தண்ணீர், பஞ்சமர், பஞ்ச கோணங்கள் அனைத்தும் தலித் புதினங்கள் ஆகும். மையக்குறி, முருங்கை, இலைக்கஞ்சி, இருளில் கதிர்கள் என்பன தலித்தியத்தை விளக்கும் குறும் புதினங்கள் ஆகம். அறிவழகன் எழுதிய **'கழிசடை'** எனும் புதினம் துப்புரவத் தொழிலாளர்கள் மற்றும் மலம் அள்ளுவோரின் அவலங்களைக் கருப்பொருளாகக் கொண்டது. இமையம் எழுதிய **'கோவேறு கழுதைகள்'** என்னும் புதினம் **'பறவை வண்ணார்'** என்று அழைக்கப்படும் புதிரை வண்ணார்களின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு அழைக்கப்பட்டுள்ளது. தலித் பெண் படைப்பாளர்களுள் ஒருவரான சிவகாமி எழுதி **'பழையன கழிதலும்'** என்று புதினம் தலித் மக்களின் அவல நிலையையும் தலித் இயக்கத் தலைவர்களிடம் உள்ள குறைபாடுகளையும் சட்டிக்காட்டியுள்ளது. **'ஆனந்தாயி'** என்ற புதினம் தலித் பெண்ணின் அவலத்தைச் சுட்டிக்காட்டியுள்ளது. பாமா எழுதிய **'கருக்கு', 'சங்கதி'** எனும் புதினங்களில் கருக்கு எனும் புதினம் தமிழின் முதலில் தலித் தன் வரலாற்றுப் புதினம் ஆகும். பூமணி படைத்த **'பிறகு'** எனும் புதினம் தமிழக தலித் கிறித்துவர்களின் நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது. இவர்களின் நாவல்களில் தலித் மக்களின் சாதிய ஒடுக்க முறைகளும் அவற்றிற்கு எதிரான சிறுசிறு எதிர்ப்புகளும் தான் கருப்பொருளாக உள்ளன. தமிழகத்தை தலித் புதினங்களின் வாயிலாககத் தலித் மக்களின் வாழ்க்கைமுறை, உயர்சாதியினர் தலித்துகள மீது நடத்தும் வன்முறை கிறித்துவ சமயத்திலும் தலித்துகள் தீண்டாமைக்குள்ளாக்கபடுதல் ஆகிய நிகழ்வுகள் அறிப்படுகின்றன.

தலித் சிறுகதை ஆசிரியர்கள் படைப்புகள்

தமிழில் தலித் சிறுகதை ஆசிரியர்களாக அறியப்படுபவர்கள் பெரும்பாலும் தலித் இனத்தைச் சார்ந்தவர்களாக உள்ளனர். **அருகன், அபிமானியி, விழி.பா.இதயவேந்தன், இரத்தின புகழேந்தி, உஞ்சை ராசன், பாப்லோ அறிக்குயில், கண்மணி குணசேகரன்** போன்றோர்கள்சிறுகதைஆசிரியர்களாகவும்தலித்இயக்கத்தின் இயங்கும் போராளிகளாகவும் இருக்கிறார்கள். இவர்கள் தங்கள் படைப்புகளில் தலித்துக்களுடைய உணர்வுகளையும், போர்குணங்களையும் துல்லியமாகச் சித்தரித்துள்ளனர்.

ஜெயகாந்தின் 'ஒரு பகல்நேர பாசஞ்சர் வண்டி' எனும் சிறுகதையில் பிறப்பால் பாப்பாத்தியான ஒரு பெண் குழந்தை, பறையன் அம்மாசிக் கிழவனிடம் வளர்ந்து ஊரார் பார்வையில் வேலைக்காரியாகத் தெரிந்து பின்னார் பார்ப்பன இளைஞனிடம் சேர்வதாகக் கரு அமைந்துள்ளது. தலித்துகளின் பிறப்பு என்பது பாவத்துக்குத் தண்டனை எனும் பொருளிலும் கதைகள் புனையப்பட்டுள்ளன. ராஜாஜி எழுதிய **'புனர் ஜென்மம்'** கதையில் இப்படிப்பட்ட புனைவைப் படைத்துள்ளார். **'துண்பக் கேணி'** சிறுகதையில் புதுமைப்பித்தன் தலித்தான பெண்ணை தேவர் இனத்தைச் சேர்ந்த நளன் என்பவர் தாக்குவதாகப் படைத்துள்ளார். அண்ணாவின் **'செவ்வாழை'** எனும் சிறுகதை பண்ணையாரின் கொடுமையான அபகரிப்புக் குற்றத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. அருகனின் சாதிபாத்தியம் என்னும் கதை உயர்சாதியினர், தங்களைத் தாங்களே ஒதுக்கிக் கொள்ளும் தீண்டாமை நிகழ்வின் பதிவாக உணர்த்துகிறது.

தலித்துகளின் போராட்டத்தை மையமாக வைத்து விழி.பா.இதயவேந்தன் **'நந்தனார் தெரு'** எனும் சிறுகதையை எழுதியுள்ளார். தலித் சிறுகதையில் மேல்சாதி ஒடுக்குமுறைகளும், தலித் பெண்கள்படும் துன்பங்களும், தலித்துகளின் ஆதிக்க எதிர்ப்புச் செயல்களம் கருவாக உள்ளன. தலித் சிக்கலை மையமாகக் கொண்டு எழுதப்படும் தலித் சிறுகதைகளில் தலித் ஆடவர்களிடம் தலித் பெண்டிர் அடிமைப்பட்டு வாழ்ந்து வருகின்ற எதார்த்த நிலைகளை சித்தரிக்கப்பட்டுள்ளன.

தலித் நாடகங்களும் இசைப் பாடல்களும்

20ம் நூற்றாண்டின் இறுதிலிருந்து தலித் நாடகம், தலித் அரங்கு எனும் சொற்றொடர்கள் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. தலித் நாடகங்கள் தலித் மக்களின் அவல நிலைகளை மையமாகக் கொண்டு படைக்கப்பட்டன. நாடகங்களின்றி இலக்கியத்தில் **பள்ளு, குறிஞ்சி, துளுவ நாடகங்களிலும்** தலித் கதை மாந்தர்கள் இடம் பெற்றுள்ளனர். நவீன நாடகங்களும் திராவிட இயக்க நாடகங்களும் மேற்கத்திய கலைவடிவின் தாக்கத்தால் உருவாயின. கே.ஏ.குணசேகரன் படைத்த **'பல ஆடுகள்'** தலித் சிக்கல்களை மையப்படுத்தி எழுதிய முதல் நாடகம் ஆகும். **அ.ராமசாமி 'தண்ணீர்', 'வார்த்தை மிருகம்'** தலித் நாடகங்களை இயற்றியுள்ளார். **ம.ஜீவா எழுதிய 'தீ' நாடகம்** உயர்சாதிக்காரர்களால் தீயிலிட்டுக் கொளுத்தப்படும் தலித் குடைகளின், குடிமக்களின், கோழிகளின் ஓலக்குரல் காட்டப்படுகிறது. நாட்டுப்புறப் பாடல்கள்,

நகர்புறத் தலித் மக்களின் கானாப் பாடல்கள் இயக்கத்தின் கொள்ளைப் பாடல்கள் எனும் வகைகயில் தலித் இசைப்பாடல்கள் அடைந்துள்ளன. நாட்டுப்புறத் தலித் பாடல்கள் அம்மக்களின் வாழ்க்கை வட்டச் சடங்குகளில் அதிகம் பாடப்படுகின்றன.

முடிவுரை

1. பண்டைக்காலத்தில் மக்கள் தொழில் அடிப்படையில் பிரிக்கப்பட்டு வாழ்ந்து வந்தார்கள். அவர்களுள் கல்வி, சாதி, பொருளாதாரம், சமூக மதிப்பில் தாழ்ந்தவர்களே விளிம்புநிலை மனிதர்களாக கருதப்பட்டனர்.

2. விளிம்புநிலை மனிதர்களுள் இன அடிப்படையில் கருப்பின மனிதர்கள் தலித்துகள், கல்வி அறிவு இல்லாதோர், உடற்கூறு அடிப்படையில் மூன்றாம் பாலினத்தவர்கள் போன்றோல் இடம் பெறுகின்றனர். இவர்களுள் தலித் மக்களை உயர்சாதிக்கார்களின் செயல்பாடுகளால் பல இன்னல்களுக்கு ஆளாகி உயர்சாதிக்காரர்களின் விளக்கப்பட்டுள்ளது.

3. தலித் படைப்பாளர்கள் இலக்கியங்களில் அவர்களின் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் எதார்த்தமான வாழ்வியலை படைப்புகளாக வெளியிட்டுள்ளதை உணரமுடிகின்றன.

ஸூஃபி மெய்ஞ்ஞானி
தக்கலை பீர்முகம்மது சாகிபும் ஞானப் புகழ்ச்சியும்

உ. அலிபாவா, *பேராசிரியர் மற்றும் தலைவர், தமிழியல்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி - 620 024.*

தமிழ்நாட்டு ஸூஃபிப் புலவர்களுள் தலையாய இடத்தைப் பெறுபவரும் காலத்தால் முந்தைய இடத்தைப் பெறுபவருமாகத் திகழ்பவர் கன்னியாகுமரி மாவட்டம் தக்கலையில் அடக்கமாகியுள்ள தவமான் மேதை பீர்முகம்மது சாகிபு அவர்கள் ஆவார்கள். இஸ்லாமிய ஞானக் கருத்துகளை அள்ளி வழங்கிய அப்பா அவர்களை மக்கள் எல்லோரும் அன்று தொட்டு இன்று வரை 'தக்கலை பீர்முகம்மது அப்பா' என்றே அன்போடு அழைத்து மகிழ்கின்றனர்.

இஸ்லாமிய ஞான கருத்துகளை முதலில் விரித்துரைத்த மெய்ஞ்ஞானியான அப்பா அவர்கள் திருநெல்வேலி மாவட்டம் தென்காசி வட்டம் கணிகபுரத்தில் தோன்றியவர்கள். அப்பா அவர்களின் தந்தையார் 'சிறுமலுக்கர்', பாட்டனார் 'வாவாஞ்சி' என்னும் பெயரிய பெரியார். இதனை அப்பா அவர்களே தம் நூல்களில்,

... ... ஞான வல்லபம்
சிந்தையுட் டெளிந்த ஞானச் சிறுமலுக்கர் செல்வன்யான் ***(3:2-1)***

என ஞானப்பூட்டுவிலும்

தென்காசி நாடு சிறுமலுக்க ரென்னுமவர்
தன்பால னிக்கதையைச் சாற்றினான் ***(23:1-2)***

என ஞானப் புகழ்ச்சியிலும்

சிறும லுக்க ரகம கிழ்ந்த செல்வன் ***(8:1)***

என ஞானமணி மாலையிலும்

சிறுமலுக்க ரீன்றதவச் சிறப்புடைய பீர்முகம்மது ***(7:1)***

என ஞானக் குறத்திலும்

வேதகுல வாவாஞ்சி பேரனான
வேந்தரெனும் சிறுமலுக்க ரீன்ற பாலன்
நீதமிலா திந்நூலைப் பொய்யென் னாமல்
நிலைநிறுத்தப் பீர்முகம்ம தென்போன் யானே ***(30:2-3)***

எனத் திருமெய்ஞ்ஞானச் சரநூலிலும் பதிவு செய்துள்ளார்.

சூஃபி ஞானியருள் காலத்தாலும் பாடல் எண்ணிக்கையாலும் முதலிடம் பெற்றுத் திகழும் அப்பா அவர்களின் பிறந்த ஆண்டு தெரியவில்லை; பெற்றோர் பற்றி அவர்தம் பாடற் குறிப்புத் தவிர வேறொன்றும் கிடைக்கவில்லை. பிசுமில் குறத்தில்,

மனமது மகிழ அறிவையு மறிந்து
வழுத்தினார் சதக்கத் துல்லாவே
(2)

என்று அப்பா அவர்கள் பாடுவதிலிருந்து அவர் காயல்பட்டினத்தில் பிறந்து கீழக் கரையில் வாழ்ந்து மறைந்த மெய்ஞ்ஞானி சதக்கத்துல்லா அப்பா அவர்களின் காலத்தைச் சார்ந்தவர் என்பது புலப்படுகிறது.

தக்கலை பீர்முகம்மது அப்பா அவர்களும் கீழக்கரை மெய்ஞ்ஞானி சதக்கத்துல்லா அப்பா அவர்களும் சந்தித்த குறிப்பினை வைத்து அப்பா அவர்களின் காலத்தைக் கணிக்கலாம். "ஞானி சதக்கத்துல்லா இந்தியாவை ஆட்சி புரிந்த மொகலாயப் பேரரசர் அவுரங்கசீப்பின் காலத்தவர். அவுரங்கசீப் கி.பி. 1658 முதல் 1707 வரை ஆண்டவர்" (இந்திய வரலாறு கி.பி. 1206 - 1707, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1972, ப. 320) என்று ஏ. உஸ்மான் ஷெரீப் குறிப்பிடுகின்றார். எனவே "பீர்முகம்மது அப்பா அவர்கள் கி.பி. பதினேழாம் நூற்றாண்டின் அண்மையில் வாழ்ந்தவர் எனத் துணியலாம்" எனும் கா. முகம்மது பாரூக், "பீர்முகம்மது அப்பா தாம் பாடிய 'திருநெறி நீதம்' என்னும் நூலில் அந்நூலைப் பாடிய காலத்தை,

குருநபி ஹிஜ்ரத் தாகி குவலயத்
தாயிரத்தின்
இருபத்தி ரெண்டா மாண்டில்
இயம்பிடும் ரபியுலாகிர்
கருமமென் றிருப தன்று காரண
வெள்ளி நாளில்
திருநெறி நீதம் பாடத் திருவருள்
பெருகத்தானே *(17)*

என்னும் பாடல் மூலமாக ஹிஜ்ரியாண்டு 1022 எனக் குறிப்பிட்டுளள செய்தியும் மேற்கண்ட கருத்தை அரண் செய்ய உதவுகிறது" (மெய்ஞ்ஞானி பீர்முகம்மது அப்பா இலக்கிய ஆய்வுக் கோவை, ப. 45) என்று குறிப்பிடுகின்றார்.

திருநெறி நீதத்தின் அடிப்படையில் காலத்தைக் கணிக்கின்றபோது எழும் சிக்கலைக் குறிப்பிடும் பீ.மு. அஜமல்கானின் கருத்தும் இவண் உன்னத்தக்கது.

"இப்பாடலின் அடிப்படையில் திருநெறி நீதம் ஹிஜ்றி 1022 ஆம் ஆண்டு றபியுலாஹிர் மாதம் முதலாம் பிறை வெள்ளிக்கிழமையன்று இயற்றுவிக்கப் பட்டிருக்க வேண்டும். இந்த இஸ்லாமிய ஆண்டு, மாதம், நாளுக்கிணையான கிறித்துவ காலம் கி.பி. 1613 ஆம் ஆண்டு சூன் மாதம் ஏழாம் தேதியாகும். எனவே திருநெறி நீதத்தின் ஆசிரியரான தக்கலை பீர்முகம்மது அப்பா அவர்களின் காலத்தைக் கி.பி. பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதி என்று இதனடிப்படையில் கொள்ளலாம் எனினும் இக்கருத்து மேலும் ஆய்விற்குரியது. மேலும் தக்கலை பீர்முகம்மது அப்பா அவர்களின் காலத்தைக் கணித்திட அவர்கள் தொடர்பு கொண்டிருந்தவர்களின் காலத்தையும் காட்டு வதுண்டு. அத்தகைய தொடர்புகளுள் முக்கியமானதாகக் காணப்படுவது கீழக்கரை ஷெய்கு சதக்கத்துல்லா அவர்களின் தொடர்பே. திருநெறி நீதத்தை 1929 இல் பதிப்பித்த ஆசிரியர் அந்நூலின் வரலாறு என்ற பகுதியின் முதலில் குறித்துள்ள செய்தி இங்கு முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது. 'நினைவிற் கலந்திருக்கின்ற எல்லா ஞானப் பொருள்களையும் கூட்டித் திரட்டி நீதியின் நாயகன் என்ற திருநாமத்துடன் நமது நபிநாயகம் அவர்கள் அருளிச் செய்தார்கள். அதை ஒரு கோர்வையாகத் திரட்டி ஹலரத்து மௌலானா ரூமி அவர்கள் தங்கள் மதுரவி ஹரீபிலும் கசாலியிமாம் கோர்வைக் கஞ்சில் ஆரிபின் என்னும் கித்தாபிலும் செய்குல் அக்குபார் சமுசுல் மாரிபி என்னும் கித்தாபிலும் தயிக்கா முதிரிய்யா குக்குமுல் காகிதாபிக்குக் கித்தாபிலும் நீதமாம்பல கித்தாபிலும் சொன்னார்கள். அதைக் காயல் பட்டணத்துக் குதுபு ஷெய்கு சதகத்துல்லா லெவ்வை ஆலிமவர்கள் மொழி பெயர்த்துச் சொல்ல தக்கலைக்கு வந்த காலம் கொல்லம் 620 ஆம் வருடம் என்று சொல்லப்படுகிறது.

பீர்முகம்மது சாகிபு அவர்கள் சரித்திரத்தில் ஷெய்கு சதகத்துல்லா ஷெய்கு பீர்முகம்மது சாகிபு அவர்களுக்கு உரை கொடுத்தார்கள். இப்பகுதியின் மூலமாக ஷெய்கு சதக்கத் துல்லா அவர்களும் ஷெய்கு பீர்முகம்மது அப்பா அவர்களும் சமகாலத்தவர் என்று கொள்ள வேண்டும்" (இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு, தொகுதி 4, பக். 60 - 61) என்று குறிப்பிடும் பீ.மு. அஜ்மல்கான் இக் கருத்துக்கு ஆதாரமாக உள்ள திருநெறி நீதப் பாடல்களை (16,17) எடுத்துக்காட்டுகிறார். இருப்பினும் காலக் கணிப்பில் சிக்கல்கள் உள்ளனவாகவே அவர் கருதுகிறார். அவற்றுக்கான காரணங்களையும் அவர் வரையறுத்துத் தருகிறார்.

"சதக்கத்துல்லா அவர்களின் காலத் திற்கு அறுதியிட்டுக் கூறும்படியான சான்றா தாரங்கள் உள்ளன. ஷெய்கு சதக்கத் துல்லா அவர்களின் பிறப்பு ஹிஜ்றி 1042 ஆகும். இதற்கு இணையான கிறித்துவ ஆண்டு கி.பி. 1632 எனலாம். திருநெறி நீதத்தின் முதல் பதிப்பின்படியும் மேற்குறித்த செய்யுளுக்கு அடுத்த பதினேழாவது செய்யுளின்படியும் திருநெறி நீதம் இயற்றப்பட்டது ஹிஜ்றி 1022 ஆம் ஆண்டாகும். அதாவது கி.பி. 1613 ஆம் ஆண்டு. அப்படியாயின் கி.பி. 1632இல் பிறந்த ஷெய்கு சதக்கத்துல்லா எங்ஙனம் கி.பி. 1613இல் இயற்றுவிக்கப்பட்ட திரு நெறிநீதத்திற்கு உரை தந்திருக்க முடியும். ஷெய்கு சதக்கத்துல்லா அவர்களின் பிறப்பிற்கும் திருநெறிநீதம் இயற்று விக்கப் பட்டதாகக் குறிக்கப்பட்டுள்ள காலத்திற்கும் இடையே ஏறத்தாழப் பத்தொன்பது ஆண்டுகால இடைவெளி காணப்படுகிறது. எனவே ஷெய்கு சதக்கத்துல்லா அப்பாவின் சம காலத்தவர் பீர் முகம்மது அப்பா என்று எடுத்தியம் புவதற்கான அடிப்படைச் சான்றா தாரங்கள் தவறானவைகளாக இருப்பதால் இக்கருத்தும் ஏற்றுக் கொள்ள முடியாததாக உள்ளது. திருநெறி நீதத்தில் உள்ள பதினாறு பதினேழாவது செய்யுட்கள் திருநெறி நீதத்தின் மூலத்தில் இடம் பெற்றிருந்தனவா அல்லது முதல் பதிப்பினைச் செய்வித்தவரால் இடைச்செருகலாக அமைக்கப்பட்டதா என்பது ஆய்விற்குரியது. எனவே திருநெறி நீதத்தை அடிப்படையாகக் கொண்டு பீர்முகம்மது அப்பா அவர்களின் காலத்தைக் கணித்திடுவதில் பல்வேறான சிக்கல்கள் இருப்பதாகவே தோன்றுகின்றது" (இஸ் லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு, தொகுதி 4, ப.62) என்று ஐயப்படும் பீ.மு. அஜ்மல்கான் தொடர்ந்து, "பீர்முகம்மது அப்பா அவர் களால் இயற்றப்பட்ட ஏனைய சூஃபி மெய்ஞ்ஞான இலக்கியங்களிலும் காலம் பற்றிய குறிப்புரைகள் கிடைக்காத காரணத்தால் செவிவழிச் செய்திகளின் அடிப் படையிலும் அவர் பயன்படுத்தி இருக்கும் மொழி நடையின் அடிப் படையிலும் அப்பா அவர்கள் கி.பி. பதினேழாம் நூற்றாண்டினைச் சேர்ந்தவராக இருக்கலாம் எனத் தீர்மானிக்க வேண்டி யிருக்கிறது" (இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு, தொகுதி 4, பக். 62 - 63) என முடிவுக்கு வருகிறார்.

இளமைக் காலமும் படைப்புகளும்

இளம் பருவத்திலேயே தம் பெற்றோ ரையும் தென்காசிப் பகுதியையும் விட்டு நீங்கிய பீர்முகம்மது அப்பா அவர்களின் இளமைக்காலம் கேரள மாநிலக் காடுகளிலும் மலைப் பகுதிகளிலும் கழிந்தது. தொடர்ந்து அப்பா அவர்கள் யானை மலைப் பகுதியில் தம் வாழ்வின் பல்லாண்டுக் காலத்தை யோக நிட்டையில் கழித்து ள்ளார்கள்.

இங்கு வாழும்போதுதான் காலங் குடியிருப்புப் பெரிய மீரான் கனி அண்ணாவியாரும் குலசேகரப் பட்டினம் காரியப்பாப் புலவரும் அப்பா அவர்களிடம் தீட்சை பெற்றனர் என்று குறிப்பிடுகின்றனர். 'யானை மலைப் பகுதியில் அப்பா அவர்கள் தங்கியிருந்த பகுதிதான் இன்று பீர்மேடு (Peer Medu) என்று வழங்கப்படுகிறது' என்று திருவிதாங்கூர் ஸ்டேட் மானுவல் குறிப்பிடுகிறது ("It is said to have been the residence of the Muhammadan Saint Peer Muhammad hence the name of place" - T.K. Velupillai, The Travancore State Manual, Vol. I, The Government of Travancore, 1940, P. 779).

பெயர்க்காரணம்

இஸ்லாமிய மெய்ஞ்ஞானத்தில் - சூஃபித்துவத்தில் 'பீர்' என்றால் 'ஆன்மீகக் குரு' என்று பொருள். 'முகம்மது' என்பது இஸ்லாமிய மார்க்கத்தின் இறுதித் தூதுவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் திருநாமம். சூஃபிகள் இஸ்லாத்தின் முதல் ஆன்மீகக் குருவாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையே கொள்கின்றனர்.

தமிழகமும் கேரளமும் மிகச் சிறந்த மெய்ஞ்ஞான மேதையாகக் கொண்டாடும் அப்பா அவர்கள் தம்முடைய பெயரைத் தமக்கு இறைவனாகிய 'அல்லாஹ்வே' சூட்டியதாக ஒரு பாடலில் பாடி அகம் மகிழ்கிறார்.

புறவுலகில் தாம் பிறக்கும் முன்பே ஆத்மீக அகவுலகில் அல்லாஹ் தம்மை பீர்முகம்மது என்று அழைத்துத் தமது இதயத்தில் அவனின் பேரருளைக் கண்டுவர வேண்டுமெனப் பணித்த செய்தியினை,

பாருலகும் வானுலகும் பார அறுசும் குறுசும்
தாருலகும் ஒன்றாய்ச் சமைத்த நாள் பீர்முகம்மத்
என்றழைத்துப் பேசி அவர் இருதயத்தி
லும் னெளிவைக் கண்டுவரச் சொன்னாய் என் காவலனே

எனக் குறிப்பிடும் அப்பா அவர்கள், இன்னொரு பாடலில், சூஃபித்துவ நெறியில் ஞானப் பாதைக்குக் குருவாக ஏற்றுக் கொண்டவருக்கு மரியாதை செலுத்தும் பொருட்டு இப்பெயர் தம் குருவால் சூட்டப்பட்டதாகவும்,

சிலு மலுக்கர் சிகர மெய்த்தருள் செல்வன் இரு கண்ணற்றவன்
பிறகு நட்பொடு தருவெனக்கிடு பேரு பீர் முஹம்மது

எனக் குறிப்பிடுகிறார்.

மெய்ஞ்ஞானம் - சூஃபித்துவம்

இஸ்லாமிய மார்க்க மெய்ஞ்ஞானம், 'சூஃபித்துவம்' எனப்படுகிறது. இஸ்லாமிய மெய்ஞ்ஞானியர் 'சூஃபிகள்' எனப் படுகின்றனர். இத்தகைய சூஃபி ஞானியர் தமிழ்நாட்டுச் சித்தரைப் போன்றவர்கள். இவர்கள் அகத்தும், புறத்தும் தூய்மை யானவர்கள்; அவர்கள் தியாக சீலர்கள்.

தம்மைத் தாமே கட்டுப்படுத்திக் கொண்டு - தம் மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு இத்தகைய 'சூஃபி' ஞானிகள் வாழ்ந்தனர். அவர்கள் இறைவனை அடையப் பல படித்தரங்களைக் கடக்க வேண்டும் என்று கருதினர்.

பீர் முகம்மது அப்பா அவர்களும் மெய்ஞ்ஞானப் பாதையில் கடக்க வேண்டிய ஷரீஅத், தரீகத், ஹகீகத், மஃரிபத் எனும் நான்கு நிலைகளைக் கூறுகிறார். இதனை 'ஞானமணிமாலை' என்னும் சூஃபி இலக்கியத்தில்,

ஆதியை யறிய வேண்டி லழகிய நி லைமை நாலா

யோதிய ஷரீஅத் தென்னு முவந்திருந் தரீகத் தென்னும்
நீதிசேர் ஹகீகத் தென்னும் நெறியுள்ள மஃரிபத்தா
லாதியைக் காணலாமென் றஹ்மத ரருளிச் செய்தார்
(11)

என அவர் அழகாகப் பதிவு செய்கிறார்.

இஸ்லாமிய மெய்ஞ்ஞானம் 'குரு வழியே ஒரு வழி' எனக் குறிப்பிடுகிறது. குருவின் துணையின்றி மெய்ஞ்ஞானத்தை அடைய முடியாது எனவும் அந்நெறி குறிப்பிடுகிறது. இதனை நன்குணர்ந்த அப்பா அவர்கள்,

குருக்களற்ற ஞானமும் குணங்களற்ற சீசனும்
கருக்களற்ற வித்தையும் களங்க மற்ற புத்தியும்
உருக்கமற்ற நெஞ்சமும் உணர்ச்சியற்ற விவையெலாஞ்
சுருக்கமற்ற சோதியைத் தொடர்ச்சியற்ற தொக்குமே
(208)

என ஞானமணிமாலையில் சந்த நயத்துடன் குறிப்பிடுகிறார்.

குரு இல்லாத வழி நேர்வழியாக இருக்காது என்பதை 'பிசுமில் குறத்தில்' மிக எளிமையாக அப்பா அவர்கள் எடுத் துரைக்கிறார். குருவில்லாத மெய்ஞ்ஞான நிலை புருடனில்லாமல் வாழும் இல்லாளின் நிலையை ஒத்தது என்கிறார். சரியான குருவில்லாமல் இறைவனை வணங்கும் வணக்கம் கோழி சேவலின் துணையின்றி முட்டையிட்டதை ஒத்தது என்றும் குறிப்பிடுகிறார்.

வழியான குருவில்லாத வணக்கம் முழுதெல்லாம்
வையகத்தில் புருடனில்லாள் வாழ்ந்த சுகமொக்கும்
தெரியாத குருமாரின் திருமொழி கேட்பதுதான்
தெரிவையர்கள் குசறாவைச் சேர்ந்திருந்த துவனம்
சரியான குருவில்லா வணக்கமுள தெல்லாம்
சாவலில்லாக் கோழி முட்டையிட்டது போலுவமை

எனும் பாடல் குருவின் முக்கியத்துவம் குறித்த அப்பா அவர்களின் பார்வையை - கொள்கையை எடுத்துரைக்கும் நோக்கில் அமைந்துள்ளது.

'குருவுக்குரிய உரிமைகள் இறை வனுக்குரிய உரிமைகள்; குருவுக்கு மதிப் பளிப்பது இறைவனுக்கு மதிப்பளிப்பது' என்று கூறும் இஸ்லாமிய மெய்ஞ்ஞானத்தை நன்குணர்ந்த அப்பா அவர்கள் குருவை நாடாமல் அவரின் உபதேசம் கேட்காமல் அவரின் தொடர்பில்லாமல் அல்லாஹ்வை அணுகுவது என்பதை ஈனநிலை என்கிறார். குரு மெய்ஞ்ஞானப் பாதையில் சீடரை இறை வனோடு இணைத்திடுவார். இறைவனுக்கும் குருவுக்கும் சீடருக்கும் சங்கிலித் தொடர் போல ஆத்மீகத் தொடர்பு இருக்கும் என்று இந்நெறி குறிப்பிடுகிறது. இதனை அப்பா அவர்கள் ஞானமணி மாலை, பிசுமில் குறம், ஞானப் புகழ்ச்சி, ஞானப்பால் உள்ளிட்ட பல்வேறு இலக்கியங்களிலும் நயமாக எடுத்துரைக்கிறார்.

படைப்புகள்

பீர் முகம்மது அப்பா அவர்கள் தாம் பாடிய பாடல்களின் எண்ணிக்கையாக, "உரைத்தேன் பதினெண்ணாயிரம் கவி" எனக் குறிப்பிடுகிறார். அவற்றுள் பெருமளவில் கிடைக்கவில்லை யாயினும் அப்பாவின் நூல்களாக, 1. ஞானப்பால் , 2. ஞானப்பூட்டு, 3. ஞானப்புகழ்ச்சி, 4. ஞானமணி மாலை, 5. ஞானக்குறம், 6. ஞான ரத்தினக் குறவஞ்சி, 7. ஞான ஆனந்தக் களிப்பு, 8. திருமெய்ஞ்ஞானச் சரநூல், 9. ஞான நடனம், 10. ஞான முச்சுடர்ப் பதிகங்கள், 11. ஞான விகட சமர்த்து, 12. மஃரிபத்து மாலை, 13. மெய்ஞ்ஞான அமிர்தக்கலை, 14. மிகுராசு வளம், 15. ஈடேற்ற மாலை, 16. பிசுமில் குறம், 17. திருநெறி நீதம், 18. ரோசுமீசாக்கு மாலை ஆகிய பதினெட்டு நூல்கள் கிடைக்கின்றன. இவை தவிர அப்பா அவர்களின் நூல்களாக, 1. ஞானத்திறவுகோல், 2. ஞான சித்தி, 3. ஞான உலக உருளை, 4. ஞானக் கண், 5. ஞானமலை வளம், 6. மெய்ஞ்ஞானக் களஞ்சியம் ஆகிய ஆறு நூல்களும் அறியக் கிடைக்கின்றன. ரோசு மிசாக்கு மாலை என்னும் நூலினை பனையோலைச் சுவடியிலிருந்து பெயர்த்தெழுதித் தக்கலை தர்கா நிர்வாகிகள் தக்கலை அஞ்சுவன்னம் பீர் முஹம்மதிய்யா முஸ்லிம் அசோஸியேஷன் வெளியீடாக ஏப்ரல் 2017இல் வெளியிட்டுள்ளனர்.

பீரப்பா மாலை

தக்கலை பீர்முகம்மது அப்பா அவர்களைப் புகழ்ந்து 'பீரப்பா மாலை' எனும் தொகுப்பினுள் புலவர் பலர் பாடியுள்ளனர்.

ஓரப்பார் ஞானியெல்லாம் ஓதுகின்ற தக்கலை

பீரப்பா மெய்ஞ்ஞானப் பெட்டகத்தைப் பாரில்

திறந்தறிந்தால் யாரும் தெரிந்திடுவார் ஞானம்

பிறந்தவிடம் தன்னைப் பெரிது

என்று பனைக்குளம் மு. அப்துல்மஜீதுப் புலவர் பாடியுள்ளார்.

ஞானத்தின் தனிப்பிழிவே!
நாள்மலரின் நறுமணமே!
வானத்தின் ஒளியனைத்தும்
வையத்துட் பாய்ச்சுகின்ற
கானத்தின் நறும்பொழிலே! கவின்
செறியும் கனிச்சுவையே!
மோனத்தின் பேரொலியே!
முகம்மிலொலி என்பீரே!

என்றும் கவிக்கோ அப்துல் ரகுமான்,

வானம் வரும்ஒரு வார்த்தையில்;
சொர்க்க வனிதையரின்
கானம் வரும்நற் கவிதையின்
சந்தத்தில்; கற்றவர்க்கு
மானம் வரும்தமிழ் மாமொழி யில்திரு
மக்கநகர்
ஞானம் வரும்புகழ்ப் பீரப்பா வாக்கு
நயத்தினிலே

என்றும் பாடியுள்ளனர்.

மௌலவி பாஜில் ஆலிம் கவிஞர் அல்ஹாஜ் ஜி.எம்.எஸ். ஸிராஜ் பாக்கவி,

கற்கின்ற தோறுமுயர் ஞானம் நல்கும்
கவினொளியைப் பெய்கின்ற
கொடையதாக
அற்புதமாய் அமைந்ததெனும்
நூல்கள் தந்து
அளப்பரிய கீர்த்தியினைக்
கொண்ட தோடு
நற்பயிராம் 'தீன்' ஓங்கச் செய்த அந்த
நற்பெரியார் பீரப்பா ஞான
நூல்கள்
பொற்புடனோ உலகமுள்ள நாட்கள்
மட்டும்
பொலியுமெனில் பிழையாமோ!
பொலிக மாதோ!

என்றும் கா.முகம்மது பாரூக்,

எண்ணில்புது எழிலோவியம்
எழும்பச்செய்யும் அப்பா
வண்ணத்தமிழ்க் கவிமேவிடின்
வாழ்வின்வழி தப்பா
கண்ணில்உறை கருத்தில்உறை
கவிமாமணி அன்னார்
விண்ணில்உறை பொருள்பேசிடும்
வேதக்கலை மன்னர்

என்றும் அப்பா அவர்களையும் அவர்களின் பராக்கிரமங்களையும் பாடல்களையும் புகழ்ந் துரைத்துள்ளனர்.

அறிஞர்களாலும் காவலர்களாலும் தமிழகக் கேரள மக்களாலும் நெஞ்சத்தால் புகழ்ந்துரைக்கப்படுகின்ற தக்கலை பீர்முகம்மது அப்பா அவர்களின் படைப் புகளுள் 'ஞானப்புகழ்ச்சி' மட்டும் இவண் ஆராயப்படுகிறது.

ஞானப்புகழ்ச்சி

தொண்ணூற்றைந்து ஆண்டு காலம் வாழ்ந்து மெய்ஞ்ஞானத் தொண்டு புரிந்த அப்பா அவர்களின் சூஃபி மெய்ஞ்ஞானப் படைப்புகளுள் தலைசிறந்ததாகக் கருதப் படுவது 'ஞானப்புகழ்ச்சி' எனும் படைப்பாகும். கல் மனத்தையும் கசிந்துருக வைக்கும் பான்மையினையுடைய பாடல் களின் தொகுப்பாக ஞானப்புகழ்ச்சிப் பாக்கள் அமைந்துள்ளன. அதனால் இப்பாடல்கள் மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்குப் பெற்றுள்ளன. அப்பாடல்களைப் பீர் முகம்மது அப்பா அவர்களின் நினைவு நாளான ரஜப் மாதம் பதினான்காம் நாள் அவர்களின் அடக்கவிடம் அமைந்துள்ள தக்கலையில் பாடி வருகின்றனர்; அங்கு மட்டுமன்றி மக்கள் தங்கள் இல்லங்களிலும் வேறுபிற பொது இடங்களிலும் அப்பா அவர்களின் ஞானப்புகழ்ச்சிப் பாடல்களைப் பாடுவதை மரபாக வைத்துள்ளனர்.

இஸ்லாமிய ஞான மெய்ப் பொருளைப் புகழ்ந்து பாடும் பாடல் களான ஞானப்புகழ்ச்சிப் பாக்களை மக்கள் புகழ்ந்து பாடுவதற்கான காரணமாகப் பீ.மு. அஜ்மல்கான், "ஞானப்புகழ்ச்சிப் பாக்கள் வெறும் மெய்ஞ்ஞானக் கருத்துகளைத் தாங்கி வரும் பாக்களாக மட்டும் அமையாமல் இஸ்லாமிய சூபித் தத்துவக் கொள்கை களுடன் இணைந்த சொல்லாட்சியையும் யாப்பமைதியையும் பெற்று உயிரோட்ட முள்ள உன்னதமான இசை நயத்தைப் பெற்று அமைந்திருப்பதே" (ப. 75 - 76) என்பதைக் குறிப்பிடுகிறார்.

இவ்வுலகில் உற்றார் உறவினர் என யாரும் இல்லை என ஏங்கும் அப்பா அவர்கள் அனைத்தும் தமக்கு ஆண்டவனே என்கிறார். அதனால் எல்லாவற்றையும் துறந்து இறை சந்நிதானத்தில் தம்மைச் சரணடைய வைக்கும் சரணாகதித் தத்துவத்தை இப்பாடல்களில் அவர் முன்வைக்கிறார்.

அப்பா அவர்களின் 'ஞானப்புகழ்ச்சி' எனும் நூல் எப்போது இயற்றப்பட்டது என்பது தெரியவில்லை. இந்நூலின் முதல் பதிப்பு 1880 இல் வந்திருக்கலாம் எனும் கருத்து நிலவுகிறது. தொடர்ந்து பல பதிப்புகளைக் கண்டுள்ள 'ஞானப்புகழ்ச்சி'

எனும் நூலின் பதிப்புக் குறிப்புகளின் அடிப்படையில் 687 திருப்பாடல்களைக் கொண்ட தொகுப்பாக இந்நூல் திகழ்வதை அறியமுடிகிறது. பல பாடல்களுக்கு எண்கள் கொடுக்கப்படாததால்
இவ்வெண்ணிக்கையில் மாறுபாடு இருக்கலாம் எனக் கருதும் பீ.மு. அஜ்மல்கான் ஞானப்புகழ்ச்சியிலுள்ள மொத்தச் செய்யுள்களின் எண்ணிக்கை 694 என்றும் மொத்த அடிகளின் எண்ணிக்கை 28 என்றும் பட்டியிலிடுகிறார் (ப. 77).

ஞானப் புகழ்ச்சி - பெயர்க்காரணம்

ஞானப் புகழ்ச்சியின் முதல் பாடல் முதல் இறுதிப் பாடல் வரை அனைத்துப் பாடல்களிலும் அல்லாஹ்வின் புகழ்பாடுதலையே அப்பா அவர்கள் முதன்மை நோக்கமாகக் கொண்டு நூலினைப் படைத்துள்ளார்கள். புகழ்பாடுதல் நூலின் மையக் கருத்தாக இருப்பதால் புகழ்ச்சி எனும் சொல் பொருந்துகிறது. ‘புகழ்ச்சி’ எனும் சொல்லை நூல் முழுவதும் பல இடங்களில் கையாளும் அப்பா அவர்கள் இஸ்லாமிய மெய்ஞ்ஞானமான சூஃபித்துவக் கொள் கையின் அடிப்படையில் அல்லாஹ்வின் புகழ்ச்சியை எடுத் துரைப்பதால் இந்நூலுக்கு ‘ஞானப்புகழ்ச்சி’ எனும் பெயர் சாலப்பொருந்துகிறது.

புகழும் பல புகழ்ச்சி யதற் குரியவனு நீயே
புவியில்வரு முயிர்களதி லொளி பரவு நீயே (ஞானப்புகழ்ச்சி. 57)

எனும் அடிகளில் குறிப்பிடுவதைப் போன்று நூலிற் பல இடங்களில் ‘புகழ்ச்சி’ எனும் சொல்லைக் கையாள்வதால் அப்பா அவர்களே இந்நூலுக்குப் பெயர் சூட்டியிருக்க வேண்டும் என அழுத்தமாக எண்ண இடமேற்படுகின்றது.

இறையருள் வேட்டல்

இறைவனின் தன்மையை அப்பா அவர்கள் ஞானப்புகழ்ச்சியின் முதல் பாடலிலேயே எடுத்துரைக்கிறார். இறைவன் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன் என்பதை எடுத்து மொழிகிறார். இதனை எடுத்துக்கூறி ஞானப்புகழ்ச்சியில் அப்பா அவர்கள் இறைவனின் அருளை,

ஆறாறுக்கு அப்பால் அணுஅணுவாய் வந்துலகில்
வேறாரும் ஒப்பில்லா மேலோனே வீறான
புகழ்ச்சிது ஆவடியேன் புகலுதற்கு நீ மனதுள்
மகிழ்ச்சி தருவாயே மகிழ்ந்து

என வேண்டுகிறார். இப்பாடலில் அப்பா அவர்கள் குறிப்பிடும் ஆறாறுக்கும் அப்பாலான இறைத் தன்மையானது மனிதர் உயிர் வாழ்வதற்குத் தேவையான மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாதகம், விசுத்தி, ஆக்கினை எனும் ஆறு ஆதாரங்களை முறையே மூலம், கொப்பூழ், மேல்வயிறு, நெஞ்சு, மிடறு, புருவ நடு எனக் கூறுவர். இத்தகு ஆறு உறுப்புகளின் ஆதாரமாகக் கொள்ளாமல் இவற்றைக் கடந்து இறைவன் உலகில் அணுவின் அணுவாய் இருப்பதனால் அவ்இறைவனுக்கு இவ்வுலகில் ஒப்பாரும் மிக்காரும் இல்லை என அப்பா அவர்கள் குறிப்பிடுகிறார்.

இறைவனை முன்னிலைப்படுத்தி அவன் பெருமைகளை எடுத்துரைக்கும் அப்பா அவர்கள் பாடல்தோறும் அவன் பெருமைகளைப் புகழ்ந்துரைத்து, பாடல் தோறும் தொடர் முடிவின்போது ‘நீயே’, ‘நீயே’ எனும் சொல்லைக் கையாள்கிறார்.

ஞானமதுள் ளோர்பலரும் நாடுமிறை நீயே
நாட்டமறிந் தேநலவு கட்டுவது நீயே
வானவரெல் லாரும் புகழ்ந் தேத்துமிறை நீயே
வையக மடங்கலு நிறைந்தவனு நீயே
தீனவர்கள் நாவில்நட மாடுமிறை யோனே
(50)

எனப் பாடும் அப்பா அவர்கள் இறைவனைத் துதிக்கும் போது தம்மைத் தனிமைப்படுத்திச் சரணடைகிறார். இதனை,

தந்தையிலி தாரமிலி தானுவனு நீயே
தண்மை கொடெ வர்க்குமொரு தாபரமு நீயே
மைந்தரிலி யன்னையிலி மன்னவனு நீயே
மண்ணிலடி யார்க்கிரணம் வழங்குவது நீயே
சிந்தைதனி லிடறுதனைத் தீர்த்தருள்வை நீயே
தேட்டமறிந் தெனக்குதவி செய்பவனு நீயே
அந்தமிலி நீயெனக்கோ ரிழிவு வாராமல்
ஆதியே யானுன் னடைக்கலம் தானேன் *(56)*

எனும் பாடலில் விளக்குவதுடன், அப்பாடலில் இறைவனிடம் அடைக்கலமும் தேடுகிறார்.

இஸ்லாமிய சூஃபிப் பாவலர்களுள் மூத்தவரும் முதன்மையானவருமான தக்கலைத் திகழும் தவமான் மேதை பீர்முகம்மது அப்பா அவர்கள் தமிழகத்து, கேரள மக்களுக்கு சாதி, மத, மொழி, இன பேதம் கடந்த ஆன்மீக வழிகாட்டியாகத் திகழ்கிறார். இறைவனை அடைவதற்கான நல்வழிகளை மக்களுக்குப் போதித்து வாழ்ந்த மெய்ஞ்ஞானியான அப்பா அவர்களின் படைப்புகளனைத்தும் பல்லாற்றானும் சிறந்தவை; அவை ஞானக் கருத்துகளை அள்ளித்தரும் கருவூலங்கள். அவற்றுள் 'ஞானப் புகழ்ச்சி'ப்பாக்கள் இறைவனுக்கும் மனித ஆத்மாவுக்கும் இடையில் உள்ள தொடர்புகளை எடுத்துக்காட்ட முனைகின்றன. இப்பாடல்களில் இறைவனுக்கும் மனிதனுக்குமான உறவு எத்தகையது என்பதை எடுத்துரைக்கும் அப்பா அவர்கள் உலகப் பற்றினைத் துறக்க வேண்டுகிறார். உலகப் பற்றினைத் துறந்தால் ஆத்மா பரிபக்குவநிலையினை அடையும் என்கிறார். அதனால் இறைவனை - இறை மூலத்தை அனைவரும் உணரவேண்டும் என வேண்டுகிறார்.

அகநானூற்று எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் பாடல்களில் வரலாற்றுச் செய்திகள்

முனைவர் ம. சந்திரசேகரன், *உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பி.எம்.பி. கலை அறிவியல் கல்லூரி, தோக்கம்பட்டி, தருமபுரி - 636 705.*

சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களில் 'அகம்' எனும் சொல்லையுடைய நூல் அகநானூறாகும். இந்நூல் 'களிற்றியானை நிரை' (1-120 பாடல்கள்), 'நித்திலக்கோவை'(121-300 பாடல்கள்), 'மணிமிடைப்பவளம்' (301-400 பாடல்கள்) என்ற முப்பிரிவுகளைப் பெற்ற நானூறு பாடல்களைக் கொண்டதாகும். அகப்பாட்டு, நெடுந்தொகை, பெருந்தொகை எனும் சிறப்புப் பெயர்களும் அகநானூறுக்குண்டு. 145 புலவர்கள் பாடிய பாடல்களில், 'தித்தன், நன்னன், பாரி, காரி, ஓரி, எழினி, பிட்டன், செழியன், புல்லி, பாணர், திரையர், அத்தி போன்ற அரசர்களின் வரலற்றுச் செய்திகளும், வள்ளல்களின் வள்ளல்தன்மைகளும், மேலை நாட்டினருடன் நடைபெற்ற வணிகச் செய்திகளும், அலெக்சாண்டரின் படையெடுப்புக்கு அஞ்சிய நந்தர்கள் கங்கைக்கடியில் செல்வங்களைப் புதைத்த வரலாறும் (அகம்.201) இடம் பெற்றுள்ளன. அவ்வகையில் இக்கட்டுரை எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் பாடல்களில் இடம் பெற்றுள்ள வரலாற்றுச் செய்திகளை எடுத்துரைக்கிறது.

எழினி

எழினி, பல வேற்படையினையும், குதிரைகளையும் பெற்ற கெடுதல் இல்லாத வலிமையுடையவன். இவனது வீரர்கள் ஏவல் தொழிலை முடிக்கும் பொருட்டு பாறைகளைத் தீய்க்கும் மிகுதியான வெப்பம் பரந்த காட்டிலே போர்த்திறம் வல்ல அம்பினைக் குறிதப்பாது தொடுக்கவல்ல வீரர்களாவர். இவர்கள் தேன் வார்த்துச் செய்த கள்ளினை உண்டு, அம்மகிழ்ச்சியாற் பகைவரின் போர்முனைகளை வென்று பகைவரின் ஆநிரைகளைக் கவர்ந்ததை,

பந்து புடைப்பன்ன பாணிப் பல்அடிச்
சில்பரிக் குதிரை பல்வேல் எழினி
கெடல்அருந் துப்பின் விடுதொழில் முடிமார்

கனைளரி நடந்த கல்காய் கானத்து

வினைவல் அம்பின் விழுத்தொடை

மறவர்

தேம்பிழி நறுங்கள் மகிழின் முனைகடந்து

வீங்குமென் சுரைய ஏற்றினம்

தரூஉம்

அகம்.105:9-15.

என்ற அடிகள் வெளிப்படுத்துகின்றன.

'போரடு திருவிற் பொலந்தார் அஞ்சி' (புறம்.91:4) என ஔவையாரும், 'ஊராது ஏந்திய குதிரைக் கூர்வேல், கூவிளங் கண்ணிக் கொடும்பூண் எழினியும்' (புறம்.158:8-9) என்று பெருஞ்சித்திரனாரும், 'உரவுச் சினங்கானலும் ஔிதிகழ் நெடுவேல், அரவக் கடற்றானை அதிகனும்' (சிறுபாண்.102-103) என இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனாரும் குறிப்பிடுவதனால் கடயெழு வள்ளல்களுள் ஒருவனாகிய அதியமான் நெடுமான் அஞ்சியே எழினியாவான்.

செழியன்

செழியன் நெடிய நல்ல யானைகளையும் பகைவரை வெல்லும் போர் ஆற்றலையும் உடையவன். இவன் சேர நாட்டிலுள்ள முசிறி பட்டிணத்தை வளைத்து அரிய போரில் வென்று, பொற்பவையினைக் கவர்ந்து சென்றான். இவனது ஆட்சிக்குட்பட்ட கூடல் மாநகரின் மேற்குத் திசையில் முருகனது திருப்பரங்குன்றம் அமைந்துள்ளது. இச்செய்தியினை,

வளம்கெழு முசிறி ஆர்ப்புஎழ வளைஇ

அருஞ்சமம் கடந்து படிமம் வவ்விய

நெடுநல் யானை அடுபோர்ச் செழியன்

கொடிநுடங்கு மறுகின் கூடற் குடாஅது

பல்பொறி மஞ்ஞை வெல்கொடி உயரிய

ஒடியா விழவின் நெடியோன் குன்றத்து

அகம்.149:11-16.

என்கின்ற அடிகள் இயம்புகின்றன. இங்கு செழியன் என்பது பாண்டியரைக் குறிப்பதாகும்; பெயர் குறிப்பிடாததால் மதுரையை ஆண்ட பாண்டியர்களுள் யார்? என்பதை அறிய இயலவில்லை. நக்கீரர் பாடிய,

கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்

முதுநீர் முன்துறை முசிறி முற்றி

அகம்.149:11-16.

என்ற பாடலடிகளிலும் பெயர் குறிபிடவில்லை.

வணிகம்

ஒரு நாட்டின் வளர்ச்சிக்குப் பொருளாதாரம் இன்றியமையாததாகும். பொருளாதாரத்தைத் தொழில்கள் முனைவதன் மூலமாகவும், உள்நாட்டு வணிகம் மூலமாகவும், அயல்நாட்டு வணிகம் மூலமாகவும் ஈட்டமுடியும்.

தாயங்கண்ணனார், 'சேர நாட்டு முசிறி துறைமுகத்தில் யவனர்கள் பொன்னைக் கொண்டு வந்து விலையாகக் கொடுத்துவிட்டு மிளகை ஏற்றிச் சென்றனர்' எனும் வரலாற்றுச் சிறப்பு மிக்க சேர நாட்டில் நடைபெற்ற அயல்நாட்டு வணிகச் செய்தியைக் குறிப்பிட்டுள்ளார். இதனை,

....
சேரலர்

சுள்ளிஅம் பேரியாற்று
வெண்நுரை கலங்க

யவனர் தந்த வினைமான்
நன்கலம்
பொன்னொடு வந்து
கறியொடு பெயரும்
வளம்கெழு முசிறி ....
அகம்.149:7-11.

எனும் அடிகள் வெளிப்படுத்துகின்றன.

"உரோமாபுரி சாம்ராச்சியத்தை யரசாண்ட அகஸ்தஸ் (Augustus) சக்கரவர்த்தி காலத்தில் யவன வாணிகர் நேரடியாகத் தமிழ்நாட்டுக்கு வரத்தொடங்கினார்கள். அகஸ்தஸ் சக்கரவர்த்தி கி.மு.29 முதல் கி.பி.14 வரையில் அரசாண்டான். இவனுடைய ஆட்சிக் காலத்தில் அலக்சந்திரியம் உட்பட எகிப்து தேசமும் மேற்கு ஆசியாவில் சில நாடுகளும் உரோம சாம்ராச்சியத்தின் கீழடங்கின. அரபு நாட்டின் மேற்குக் கரையில் இருந்த (செங்கடலின் கிழக்குக் கரையிலிருந்த) அரபுத் துறைமுகங்களை இந்தச் சக்கரவர்த்தி தன் ஆதிக்கத்தில் கொண்டு வந்தான். பிறகு யவனக் கப்பலகள் இந்திய தேசத்தின் மேற்குக் கடற்கரைப் பட்டினங்களுக்கு நேரடியாக வந்து வாணிகஞ் செய்யத் தலைப்பட்டன. இவ்வாறு கிரேக்க, உரோமர்களின் வாணிகத் தொடர்பு கி.பி. முதல் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏற்பட்டது. அப்பொழுது யவனக் கப்பல்கள் நடுக்கடலின் வழியாக வராமல் கடற்கரையின் ஓரமாகவே பிரயாணஞ்செய்தன. கரையோரமாக வருவதனால் மாதக் கணக்கில் தாமதம் ஏற்பட்பது. ஆனால், ஏறத்தாழ கி.பி.47 இல் ஹிப்பலஸ் என்னும் கிரேக்க மாலுமி, பருவக் காற்றின் உதவியினால் நடுக்கடலின் ஊடே கப்பலைச் செலுத்தி விரைவாக முசிறித் துறைமுகத்துக்கு வந்தான். அந்தப் பருவக்காற்றுக்கு யவன மாலுமிகள், அதைக் கண்டுபிடித்தவன் பெயரையே வைத்து ஹிப்பலஸ் என்று பெயர் சூட்டினார்கள். இதன் பிறகு, யவனக் கப்பல்கள் அரபிக்கடலின் ஊடே முசிறி முதலிய துறைமுகங்களுக்கு விரைவாக வந்து போயின" (மயிலை சீனி.வேங்கடசாமி, கொங்கு நாட்டு வரலாறு, பக்.118-119).

அகஸ்தஸ் சக்கரவர்த்தி யவன – தமிழ் வாணிகத்தைப் பெருக்கினான். தமிழ்நாட்டு மிளகும் முத்தும் இரத்தினக் கற்களும் யானைத் தந்தங்களும் யவன நாட்டுக்கு ஏற்றுமதியாயின. அதற்காக அகஸ்தஸ் சக்கரவர்த்தி பெரிய மரக்கலங்களைக் கட்டினான். மேலும், மிளகு முதலிய பொருள்களை வாங்குவதற்குப் பொன் நாணயங்களையும் வெள்ளி நாணயங்களையும் அனுப்பினான் (மேலது,ப.119). அந்நாணயங்கள்

அகழ்வாராய்ச்சியின் மூலம் பொள்ளாச்சி, வெள்ளலூர், கரூர், புதுக்கோட்டை போன்ற இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

திருவேங்கடமலை

வேங்கடமலை குளிர்ந்த சாரலும் மூங்கில் வளமும் கொண்டது; இம்மலை மழவர் நாட்டைப் பணியச் செய்த 'புல்லி' என்பானுக்குரியது. இதனை,

காப்புடை நெடுவரை வேங்கடம்
அகம்.209:9.

………………….. நெடுமொழிப் புல்லி
தேன்தூங்கு உயர்வரை …………….

அகம்.393:18-19.

புல்லி, வேங்கட விறல்வரை
புறம்.385

கழல்புனை திருந்துஅடிக் களவர் கோமான்
மழபுலம் வணக்கிய மாவண் புல்லி
விழவுடை விழுச்சீர் வேங்கடம்
அகம்.61:11-13.

என்கின்ற அடிகள் தெரிவிக்கின்றன.

தாயங்கண்ணனார், வேங்கடமலை போர்த் தொழிலிலே பயிற்சி பெற்ற யானைகளையுடைய தொண்டையருக்கு உரிமையானது என்கிறார். இச்செய்தியை,

வினைநவில் யானை விறற்போர்த் தொண்டையர்
இனமழை தவழும் ஏற்றுஅரு நெடுங்கோட்டு
ஓங்குவெள் அருவி வேங்கடத்து
அகம்.213:1-3.

எனும் அடிகள் வழி அறியமுடிகிறது.

வடுகர்

இவர்கள் விடியற்காலத்தில் மலர்கின்ற காட்டு மல்லிகையைத் தம் சுருண்ட கரிய கூந்தலில் வண்டுகள் மொய்க்கும்படி சூடிக்கொள்வர். போர் முனையில் பகைவரை வென்று அவர்தம் பசுக் கூட்டத்தை ஆனேறுடன் கவர்ந்துவருவர். பசுக்கூட்டத்தை கவர்ந்து வந்தமைக்காக விடியற்காலத்தே முதிர்ந்த கள்ளாகிய நறவினை பலியாகக் கொடுக்கும் வெண்மையான நிணச்சோற்றினை உணவாக உண்ணும் வாழ்வினர் எனத் தாயங்கண்ணனார் குறிப்பிடுகிறார் (அகம்.213:4-8).

சோழரின் ஈகை

சோழனின் வீரவளை பொருந்திய பெரிய கை, 'வறுமை காரணமாகத் தன்னிடம் வரும் இரவலர்களுக்குப் பொருள் கொடுப்பதற்காகக் கவிழ்ந்தே இருக்கும்' என்பதை,

………. ………. …………. என்றும்
கலம்பெயக் கவிழ்ந்த கழல்தொடித் தடக்கை
வலம்படு வென்றி வாய்வாள் சோழர்
அகம்.213:19-21.

என்ற அடிகள் வெளிப்படுத்துகின்றன. இதன் மூலம் சோழனின் ஈகை திறத்தை அறியமுடிகிறது. ஆயினும் எச்சோழன் என்பதை அறிய இயலவில்லை.

எயினர்

இவர்கள் பாலை நிலத்தில் வாழ்பவர்கள்; வழிச்செல்வோரைக் கொல்லும் தொழிலையுடையவர்கள். எயினரின் அம்புபட்டு இறந்தோர் பாலை நிலத்தில் வீழ்ந்துகிடப்பர், இறந்தவர்களின் ஊனை காக்கை இனம் கவர்ந்து உண்ணும். இதனை தாயங்கண்ணனார்,

> **மணிவாய்க் காக்கை மாநிறப் பெருங்கிளை**
>
> **பிணிவீழ் ஆலத்து அலங்குசினை ஏறி**
>
> **கொடுவில் எயினர் குறும்பிற்கு ஊக்கும்**
>
> **கடுவினை மறவர் வில்லிடத் தொலைந்தோர்**
>
> **படுபிணம் கவரும் பாழ்படு நனந்தலை**
>
> **அகம்.319:1-5.**

எனக் குறிப்பிடுகிறார்.

கொல்லிமலை

ஓரி கடையெழு வள்ளல்களுள் ஒருவன். இவன் கொல்லிமலையை ஆண்டவன்; சிறந்த வில்லாற்றலும், வள்ளல் தன்மையும் வாய்க்கப் பெற்றவன். முள்ளூர் மன்னனாகிய காரி, ஓரியுடன் போரிட்டு கொல்லிமலையைக் கைப்பற்றினான். அம்மலையைக் காரி சேரர்க்கு உரிமையாக்கினான் என்பதை,

> **முள்ளூர் மன்னன் கழல் தொடிக்காரி**
>
> **செல்ல நல்இசை நிறுத்த வல்வில்**
>
> **ஓரிக் கொன்று சேரலர்க்கு ஈத்த**
>
> **செவ்வேர்ப் பலவின் பயன்கெழு கொல்லி**
>
> **அகம்.209:12-15.**

என்ற அடிகள் வெளிப்படுத்துகின்றன. இவ்வரலாற்றுக்குப் பின்னர் சேரரின் ஆட்சிக்கு உட்பட்டதாகக் கொல்லிமலை இருந்துள்ளது. அதன்வழி சேரன், ‘வானவன் கொல்லி’ (அகம்.33), ‘பொறையன் கொல்லி’ (அகம்.62), ‘கொல்லி யாண்ட குடவர் கோவே’ (சிலம்பு.24) என்றெல்லாம் புலவர்களால் சிறப்பிக்கப்பட்டுள்ளான். எருக்காட்டூர்த் தாயங்கண்ணனாரும்,

> **எரிமருள் கதிர திருமணி இமைக்கும்**
>
> **வெல்போர் வானவன் கொல்லிக் குடவரை**
>
> **அகம்.213:14-15.**

என்று சேரர்க்குரிய கொல்லிமலையைப் பாடியுள்ளார்.

உறையூர்

இவ்வூர் சோழர்களின் தலைநகரமாக விளங்கியது. இந்நகரை காவிரி வளமிக்கப் பகுதியாக்கியது. உறையூரில் வசித்த வள்ளல்கள், “செந்தீயில் சுட்ட நினைத்தினது துண்டங்கள் நிறைந்த தினைச் சோற்றினையும், நெல் வயல்களில் விளைந்த கரும்புகளைப் பிழிந்து காய்ச்சிய

பாகுடன் பாலினை ஊற்றி கலந்த செந்நெல்லால் ஆன பசிய அவலையும் கலத்தினில் பாணர் முதலானோர்க்குப் பகுத்துக் கொடுத்த" நிகழ்வினை,

....

கனைதிறல்

செந்தீ அணங்கிய செழுநிணக் கொழுங்குறை

மென்தினைப் புன்கம் உதிர்த்த மண்டையொடு

இருங்கதிர் அலமரும் கழனிக் கரும்பின்

விளைகழை பிழிந்த அம்தீம் சேற்றொடு

பால்பெய் செந்நெற் பாசவல் பகுக்கும்

புனல்பொரு புதவின் உறந்தை ....

அகம்.237:8-14.

எனும் அடிகள் விளம்புகின்றன. இதன் மூலம் உறையூரின் வளத்தையும் வள்ளல்களின் பகுத்தளிக்கும் குணத்தையும் அறியமுடிகிறது.

உம்பற்காடு

இக்காடு சேரநாட்டின் ஒரு பகுதியாக விளங்கியது. 'உம்பல்' என்ற சொல் யானையைக் குறிக்கும். ஆகவே, உம்பற்காடு, 'யானைக்காடு' அல்லது யானை 'மலைக்காடு' எனவும் அழைக்கப்படும். "இது கொங்கு நாட்டின் தென்மேற்கிலுள்ள யானை மலைப் பிரதேசம் (உம்பல் - யானை). இது கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொள்ளாச்சித் தாலுக்காவை அடுத் திருக்கின்றது. யானை மலைகள் சராசரி 7000 அடி உயரமுள்ளவை. யானைமுடி மிக உயரமானது. அதன் உயரம் 8,837 அடி. இங்குள்ள காடுகளில் யானைகள் அதிகமாக இருந்தது பற்றி யானை மலைக்காடு (உம்பற்காடு) என்று பெயர் பெற்றது" என மயிலை சீனி. வேங்கடசாமி (கொங்கு நாட்டு வரலாறு, ப.6) குறிப்பிடுகிறார்.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவன் உம்பற்காட்டைத் தன் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தான் என்பதை,

இமயவரம்பன் தம்பி அமைவர

உம்பற்காட்டைத் தன்கோல் நிறீஇ

பதிற்.3.ப.1-2.

என்ற அடிகள் உரைக்கின்றன. உம்பற்காடு வருவாயைத் தருகின்ற பல ஊர்களைத் தன்னகத்தே கொண்டது. இதனை, 'இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பாடிய குமட்டூர்க் கண்ணனார்க்கு உம்பற்காட்டு ஐந்நூறரைப் பரிசாகக் கொடுத்தான்' என்ற பதிற்றுப்பத்து இரண்டாம் பத்துப் பதிக அடிக்குறிப்பு வழி அறியமுடிகிறது. தன்மீது பாடல்பாடிய பரணர்க்குக் கடல் பிறக்கொட்டிய சேரன் செங்குட்டுவன், 'உம்பற்காட்டு வாரியையும், தன் மகன் குட்டுவன் சேரலையும் பரிசாகக் கொடுத்தான்' எனும் செய்தியை ஐந்தாம் பத்துப் பதிக அடிக்குறிப்பு தெரிவிக்கிறது.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க உம்பற்காட்டினைத் தாயங்கண்ணனார்,

பயில்இருங் கானத்து வழங்கல் செல்லாது

பெருங்களிற்று இனநிரை கைதொடூஉப் பெயரும்

தீம்சுளைப் பலவின் தொழுதி உம்பற்

பெருங்காடு .... அகம்.357:7-10.

என்கிறார். இவ்வடிகள் வழி உம்பற்காட்டில் யானைகள் மிகுதியாகக் காணப்பட்டதை அறியமுடிகிறது. அகநானூற்றில் 264 ஆம் பாடலைப் பாடியப் புலவர் உம்பற்காட்டிளங்கண்ணனார் ஆவார்.

முடிவுகள்

- அகநானூற்றில் எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் பாடியப் பாடல்கள் 105, 132, 149, 213, 237, 319, 357 ஆகிய எண்களில் தொகுக்கப்பட்டுள்ளன. இவ்வெழு பாடல்களில் ஒன்று குறிஞ்சித்திணைப் பாடல் (132) மற்றவை பாலைத்திணைப் பாடல்களாகும்.
- எழினியின் வீரர்கள் ஏவல் தொழில் செய்யும் பொருட்டு தேன் வார்த்துச் செய்த கள்ளினை உண்டு; அம்மகிழ்ச்சியில் பகைவரின் போர் முனைகளை வென்று, பகைவரின் ஆநிரைகளைக் கவர்ந்துள்ளனர்.
- பாண்டியன், சேரநாட்டில் உள்ள முசிறி பட்டினத்தைப் போரில் வென்றுள்ளான். இவனது ஆட்சிக்குட்பட்ட கூடல் நகரின் மேற்குத் திசையில் முருகனது திருப்பரங்குன்றம் இருந்துள்ளது.
- சேரனின் முசிறி துறைமுகத்தில் அயல் நாட்டாராகிய யவனர்களோடு வணிகம் நடைபெற்றுள்ளது. இவர்கள் பொன்களைக் கொண்டு வந்து விலையாகக் கொடுத்து மிளகை ஏற்றிச் சென்றுள்ளனர்.
- ஓரியிடம் இருந்த கொல்லி மலையைப் போரில் கைப்பற்றிய காரி அம்மலையைச் சேரருக்கு ஈந்தான். சேரருக்கு உரிமையான கொல்லியைத் தாயங்கண்ணனார், ‘வெல்போர் வானவன் கொல்லிக் குடவரை’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

நீல. பத்மநாபனின் பள்ளிகொண்டபுரம்

- ஓர் மதிப்பீடு

முனைவர் அ.பிரமிளா, *கௌரவ விரிவுரையாளர், தமிழியல்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி - 620 024.*

திரு. நீல. பத்மநாபன் தமிழ் எழுத்துலகில் தனக்கென தனி முத்திரை பதித்தவர். கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகப் படைப்பிலக்கிய உலகில் தீவிரமாக ஈடுபட்டு வருபவர். இவரது "பள்ளிக்கொண்டபுரம்" புதினம் குறித்த கருத்துகளை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

முதன்மை கதைமாந்தர்கள் :

அனந்தன் நாயர், கார்த்தியாயினி விக்ரமன் தம்பி, பாங்கரன் நாயர், மாதவிக்குட்டி.

துணைநிலை கதைமாந்தர்கள்:

பகவதிப் பிள்ளை, விஸ்வேஸ்வரி கல்யாணி, அரவிந்தாட்சக் குறுப்பு, பாஸ்கரன் நாயர், குஞ்ஞுலஷ்சுமி, சங்குண்ணி நாயர், கொச்சு கிருஷ்ண கர்த்தா, கோவிந்தன் நாயர், ஆதிசேஷய்யர், ஜெகதாம்மா நாயர், வைரவன் பிள்ளை, நாரயணப்பிள்ளை, மதுசூதனன், சுகுமாறன், தர்மபாலன், விலாசினி, தமலம் பிராட்டி, லீலாகுமாரித் தங்கச்சி, காமட்சி அம்மா.

கதைக்களம்:

திருவனந்தபுரம்

கதைக்கரு:

கேரளத்தின் தலைநகரான திருவனந்தபுரத்தில் வாழும் நாயர் சமூகத்தை மையமாகக் கொண்டு புதினம் எழுதப்பட்டுள்ளது.

உத்தி :

நனவோடை உத்தி கையாளப்பட்டுள்ளது.

கதைச்சுருக்கம் :

பகவதிபிள்ளையின் மகன் அனந்தன் நாயருக்கும் பத்மநாப சுவாமி ஆலயச் சமையல் நிபுணரான ஆதிஷேய்யர் மகள் கார்த்தியாயினிக்கும் திருமணம் நடைபெறுகிறது. இவர் பத்மநாப

சுவாமி ஆலய நிர்வாக அலுவலகத்தில் ஊழியராகப் பணிபுரிந்து வருகிறார். கார்த்தியாயினி - அனந்தன் நாயரின் இல்லற வாழ்வு இனிமையாக இருக்கிறது. ஆண் குழந்தை பிறக்கிறது. இந்நிலையில் அனந்தன் நாயர் காசநோயால் பாதிக்கப்படுகிறார். மருவத்துமனையில் ஒரு மாத காலம் தங்கி சிகிச்சை பெற்று குணமாகி வீடு திரும்புகிறார். பத்மநாப சுவாமி ஆலயத்தில் திருவிழா நடைபெறுகிறது. திருவிழாக் காட்சிகளை அனந்தன் நாயர் தன் மனைவியுடனும், மகன் பிரபாகரனுடனும் கண்டு களிக்கிறார். அந்த வேளையில் தாசில்தார் விக்கிரமன் தம்பி கார்த்தியாயினியைக் காணுகிறார். பெண் மோகம் கொண்ட அவர் அவள் அழகில் மயங்கி மையல் கொள்கிறார்.

தெளிந்த நீரோடையாக இருந்த கார்த்தியாயினி அனந்தன் நாயரின் வாழ்வில் விக்கிரமன் தம்பியின் குறுக்கீடு ஏற்படுகிறது. கார்த்தியாயினியை அடைய அவர் அனந்தன் நாயருடன் நட்பினை ஏற்படுத்திக் கொள்கிறார். அவருக்கு உத்தியோகத்தில் பதவி உயர்வு கிடைக்க வழி செய்கிறார். இவற்றையெல்லாம் அனந்தன்நாயர் அறிந்த போதும் அவரால் விக்கிரமன் தம்பியை எதிர்க்கவோ, ஒதுக்கவோ இயலவில்லை. அவர் மீதுள்ள கோபத்தை மனைவியிடம் காட்டுகிறார். கணவன் - மனைவியிடையே பூசல் ஏற்படுகிறது.

சண்டை சச்சரவுகளுக்கிடையே ஒரு பெண் குழந்தையும் பிறக்கிறது. அனந்த நாயரின் வீட்டிற்கு விக்கிரமன் தம்பி அடிக்கடி வரத் தொடங்குகிறார். அவர்ககளையும் தன் மாளிகைக்கு அழைத்துச் சென்று உபசரித்து அனுப்புகிறார். விக்கிரமன் தம்பி தன் செல்வச் செழிப்பினால் கார்த்தியாயினியின் மனதைக் கவர்கிறார். அனந்தன்நாயரின் கோழைத் தனமும் உடல் நலக்குறைவும், அவளின் மனதை விக்கிரமன் தம்பியிடம் திரும்பச் செய்கிறது. அவள் தனது பத்து வயது மகன் பிரபாகரனையும், ஐந்து வயது மகள் மாதவிக்குட்டியையும் விட்டு விட்டு விக்கிரமன் தம்பியுடன் சென்று விடுகிறாள். அவரைப் பதிவுத் திருமணமும் செய்து கொள்கிறாள். அனந்தன் நாயர் மனைவியின் செய்கையால் மன வேதனைக்குள்ளாகிறார். அவள் நினைவுகளுடன் போராடுகிறார். குழந்தைகளிடம் அன்பு கொண்டிருந்த போதும், அவர் மனம் அமைதியின்றி கார்த்தியாயினியின் நினைவுகளிலேயே தவிக்கிறது. அவர் கணவனை இழந்த பிறகும் ஒழுக்க நெறியுடன் வாழ்ந்து வரும் தன் அக்காவை எண்ணிப் பார்க்கிறார்.

மனைவி விலகிச்சென்ற பதினைந்து வருடங்கள் அவருக்கு நரக வாழ்க்கையாகவே உள்ளது. இந்நிலையில் பொறியியல் பட்டப்படிப்பு முடித்து வேலை தேடிக்கொண்டிருக்கும் பிரபாகரன், தந்தைக்கு தெரியாமலேயே தாயுடன் உறவினைத் தொடர்ந்து கொண்டிருக்கிறான். மாதவி தாயிடம் முகம் கொடுத்து பேசவும் மறுக்கிறாள். அவள் தன் தோழியின் சகோதரானை மணந்து கொள்ள விரும்புவதாக தந்தையிடம் கூறுகிறாள். தன் பிள்ளைகளின் மனப்போக்கினை அறிந்த அனந்தநாயர் அதிர்ச்சியடைகிறார். தன் பிள்ளைகள் இருவரிடமும் கார்த்தியாயினியுடன் தான் வாழ்ந்த வாழ்க்கையைக் கூறுகிறார். அவள் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்விலுள்ள அவலங்களையும் சுட்டுகிறார். ஆனால் பிரபாகரன் நாயர் தாயின் நிலைக்குத் தந்தையே காரணம் என்கிறான். மேலும் தான் தாயுடன் சென்று விக்கிரமன் தம்பியுடன் வசிக்கப் போவதாகவும் கூறுகிறான். அவனது மனநிலையை உணர்ந்த அனந்தன் நாயர் மிகுந்த வேதனைக்குள்ளாகிறார். தன் பாசத்திற்கும் நம்பிக்கைக்கும் உரிய தன் மகனுக்கு தன்னிடம் எவ்வித அன்பும் இல்லை என்ற உணர்வு அவர் இதயத்தை உலுக்குகிறது. வாழ்வில் பலவிதத் துன்பங்களுக்கு ஆளான அனந்தன் நாயர், மகனும் தன்னைவிட்டுப் பிரிந்து செல்லப் போகிறான் என்பதை தாங்கிக் கொள்ள இயலாமல் மரணமடைகிறார்.

பள்ளிகொண்டபுரம் - மதிப்பீடு :

இப்புதினத்தை பின்வரும் நிலைகளன்கள் வழி மதிப்பீடு செய்யலாம்.

1. திருவனந்தபுரம் நகர அமைப்பு
2. பத்மநாபசுவாமி ஆலய அமைப்பு
3. திருவிதாங்கூர் மன்னர்கள்
4. நாயர் சமூகத்தினர்
5. பாத்திரப்படைப்பு

திருவனந்தபுரம் நகர அமைப்பு

பழவங்காடி பிள்ளையர் கோயிலின் முன் ராஜ வீதி, வடக்கில் நகரத்து முக்கிய செயலகங்களை நோக்கி விரியும் பிரதான கடைவீதி தெற்கே ஏழு மைல் தொலைவில் கோவளம் கடற்கரையை நோக்கி நீண்டும் நிமிர்ந்தும் கிடக்கும் தார்ரோடு, வீதியின் வலப்பக்கத்தில் அரசியல் கட்சி கூட்டங்கள் நடைபெறும் மைதானம், அதைத்தொட்டு நகரப் பேருந்து நிலையம். அதையடுத்து பிரம்மாண்டமாய் உயர்ந்து நிற்கும் கிழக்குக் கோட்டை அதன் வாசலின் முன் தெரிகின்ற பத்மநாபசுவாமி ஆலய கோபுரம். கிழக்குக் கோட்டை வாசலின் கிழக்கில் நீண்டு செல்லும் சாலை பஜார் பத்மநாப சுவாமி ஆலயத்தின் வடக்குநடை வீதி இந்த வீதி ஒன்று சேரும் முச்சந்தியில் மகாராஜாவின் 'வேட்டை' சடங்கு நடைபெறும் இதையொட்டி இடப்பக்கமாகச் செல்வது யானைக் கொட்டில் தெரு, அதிலிருந்து சிறிது தூரம் சென்றால் நாற்சந்தி, நேராகத் தெற்கில் செல்லும் பாதை தெற்குத் தெருவுக்கும், பூவராகம் கோவிலுக்கும் செல்லும், நாற்சந்தியிலிருந்து மேற்கே நேராகச் செல்லும் பாதை சங்குமுகம் கடற்கரைக்குச் செல்லும் பாதை சங்குமுகம் கடற்கரைக்குச் செல்லும் மேற்குக் கோட்டையின் வலப் பக்கம் பால்க்குளங்கரை (குடியிருப்புப் பகுதி) பெருந்தான்னி ரோட்டின் வழி வள்ளக்கடவு பாலத்திற்கு செல்லும் முன் இருப்பது ஈஞ்சைக் கல் மூக்கு (குடியிருப்புப் பகுதி) உள்ளது.

பத்மநாப சுவாமி கோயிலின் அமைப்பு :

ஆலயத்தின் மையத்தில் பத்மநாப சுவாமி பள்ளிகொள்ளும் ஒற்றைக்கல் மண்டபம் ஏகாந்தமயமான கோவில் பிரகாரம், நெடு நீளத்தில் கண் சிமிட்டும் நெய் விளக்குகள் நடுநாயகமாய் நிற்கும் தங்கக் கொடிமரம். அதன் பக்கத்தில் பிரம்மாண்டமாய் நிற்கும் அனுமன் விக்கிரகம் அதற்கு வலப்பக்கக் கோடியில் (பிறந்த மேனியில்) காரிகையின் திருக்காவியம், பத்மநாப சுவாமி பள்ளிகொள்ளும் ஒற்றைக்கல் மண்டபத்தில் இடப்பக்கம் நரசிம்ம விக்கிரகம் பிரதிஷ்டை செய்திருக்கும் பத்ரமண்டபம் அங்கு தை, ஆடி சீவேலிகளில் பெரிய திருவிழா நடைபெறும் திருவிழாவும்; லட்சத்தீபமும் நடைபெறும்.

ஒற்றைக்கல் மண்டபத்தைத் தாண்டி மூன்று வாசல்களில் இறைவனின் திருமேனி, முதல் வாசலில் பள்ளிகொண்டிருக்கும் பகவானின் திருசிரஸ், நடுவாசல் வழி சீதேவியும் பூதேவியும் எதிரெதிரில் அமர்ந்திருக்க, நாபிக் கொடியில் பிரம்ம வீற்றிருக்கும் பகவானின் திருமேனி. மூன்றாவது வாசலில் திருப்பாதங்கள் நடுவாசலில் இருக்கும் மகாவிஷ்ணுவின் சொர்ண விக்கிரகத்திற்கு விஷ்ணு சகஸ்ரநாமம் ஜபித்தவாறு பாலபிஷேகம் செய்யப்படுகிறது. பின்பு கற்பூர ஆரத்தி கழிந்ததும் விக்கிரகங்கள் கர்ப்ப கிரகத்தினுள் நடுவாசலின் நேர் கொண்டு வைக்கப்படுகிறது.

தெற்கு நடையைக் கடந்து வெளியில் தெற்குத் தெரு அக்கிரகாரமும் இடப்பக்கத்திலிருக்கும் தெற்குத் தெரு கொட்டார மதிற்சுவரும், வலப்பக்கத்தில் சோற்றுப்புரைச் சந்தும் அமைந்துள்ளன. அந்த சந்தில் கோவிலிருந்து நைவேத்தியம் செய்யப்பட்டு கொண்டு வரும் கட்டிச்சோறு வியாபாரம் செய்யப்படுவதால் இச்சந்திற்கு இப்பெயர் ஏற்பட்டிருக்கிறது.

வடக்கு நடை, குலசேகர மண்டபம் தாண்டி கிருஷ்ணன் கோவில் அமைந்துள்ளது. அங்கிருந்து சற்று தள்ளி சாஸ்தா கோவில்,

பின்பு அன்ன கணபதி பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் ஊட்டுப்புரை. அங்கு மகாராஜா ஆலய தரிசனம் செய்து முடித்த பின்பு இரு நேரங்களிலும் பிராமணர்களுக்கு பந்தி சாப்பாடு பரிமாறப்படும்.

கிழக்கு நடையின் வெளியே கருங்கல் கீழே நீண்டு விங்கதாரமாகக் கிடக்கும் திறந்த வெளியில் பங்குனித் திருவிழாக்காலத்தில் பஞ்ச பாண்டவர்களைப் பற்றிய கூத்து நடைபெறும் இடப்பக்கத்தில் பத்ம தீர்த்தக்குளம் உள்ளது. இதில் ஆண், பெண் இருபாலருக்கும் குளிப்பதற்குத் தனித்தனியே படித்துறைகள் அமைந்துள்ளன.

திருவிதாங்கூர் மன்னர்கள்:

மார்த்தாண்ட வர்ம மகாராஜா பத்மநாப சுவாமியின் தாஸனாக, நாட்டை அரசாளுதல், பிறந்தநாளின் போது 'சர்வாணி'வெள்ளிப் பணம் வழங்குதல், மன்னர்களின் புகழ்பாடும் புருசூக்தம் கூறுதல், மருமக்கத்தாய அமைப்பு முறையினை அரச குடும்பத்தினரும் ஏற்றுக்கொள்ளல். பத்மநாப சுவாமி ஆலயத்தில் இரு நேரமும் ஆயிரக்கணக்காக பிராமணர்களுக்குப் பந்தி சாப்பாடு இடுதல், தினந்தோறும் பத்மநாபசுவாமி கோவிலுக்கு மகாராஜா வருகைப் புரிதல், அஷ்டமி, சிவராத்திரி, திருவாதிரை நாட்களில் கண்டேஷ்வரர் ஆலயத்திற்கு மகாராஜா செல்லுதல். தங்களிடம் வாழ்த்து பெற வரும் மக்களுக்கு பரிசுகள் வழங்குதல் முதலியவற்றை மன்னர் பரம்பரையினர் வழி வழியாக செய்து கொண்டிருக்கின்றனர். ஜனநாயக அமைப்பில் ஆட்சி முறையில் ஏற்பட்டு மன்னர் குடும்பததினரின் செலவுகளுக்கு அரசாங்கத்திலிருந்து பணம் வழங்கப்படுகிறது. அவ்வாறு பெறப்படும் பணப் பற்றாக்குறையினால் காரியாலயத்தில் பணிபுரிந்து கொண்டிருந்த ஊழியர்கள் பணி நீக்கம் செய்யப்படுகின்றனர். அவர்கள் தங்களைத் திரும்பிப் பணியில் எடுத்துக் கொள்ளுமாறு போராடிக் கொண்டிருக் கின்றனர்.

நாயர் சமூகத்தினர் :

தம் சமூகத்தைப் பற்றிய உயர்ந்த மனப்பான்மை உடையவர்களாக இருக்கின்றனர். 'மரமேறி தெங்கு பறிக்கும் ஈழவன்' என்று அங்குள்ள ஈழவர்களைத் தரம் தாழ்த்தி கூறுகின்றனர். ஈழவனை நாயர் சமூகத்தைச் சேர்ந்த பெண், ஆண் திருமணம் செய்து கொள்வது இழிவாக கருதுகின்றனர். திருமணமான நாயர் பெண் தனக்கு கணவனுடன் வாழப் பிடிக்கவில்லை யென்றால் திருமண பந்தத்தை விலக்கி விட்டு அவனை விட்டு விலகிச் சென்று வேறு ஆடவனை மணந்து கொள்ளலாம். கணவனை இழந்த பெண் மறுமணம் செய்து கொள்ளலாம் இவையாவும் நாயர் சர்வீஸ் சட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளன. மருமக்க தாய அமைப்பு முறை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நாயர் சமூகத்தினர் பிராமணர்களைத் திருமணம் செய்து கொள்வது, அந்த இரு சமூகத்தினருக்கும் உடன்பாடாக உள்ளது. இதைத் தவிர வேறு சாதி சமயத்தைச் சேர்ந்தவர்களுடனான திருமணம் அவமானமாகக் கருதப்படுகிறது.

பாத்திரப்படைப்பு :

அனந்த நாயர் புதினத்தின் முக்கிய தலைமை மாந்தர் இவரை விடுத்து புதினத்தில் எதையும் அறிய இயலாது. இவர் வழியே உறவுகள், கதைமாந்தர்கள் அறிமுகப் படுத்தப்படுகின்றனர். திருவனந்தபுர நகர அமைப்பு, பத்மநாப சுவாமி ஆலய அமைப்பு, திருவிழாக்கள், மன்னர்களைப் பற்றி செய்திகள், நகரின், சமூகத்தினரின் இன்றைய நிலை, அனந்தன் நாயரின் வழியாகவே புலப்படுத்தப்பட்டுள்ளது. அனந்தன் நாயர் மனைவி தன்னை விட்டு விலகி சென்று விட்ட பின்பு அவள் நினைவிலேயே வாழ்ந்து வருகிறார். பிள்ளைகளிடம் அன்பு கொண்டுள்ள தந்தையாக இருக்கிறார். உடல்நலக் குறைவும், உடலும், உள்ளமும் பலவீனமான மனிதராக உள்ளார்.

கார்த்தியாயினியின் செல்வச் செழிப்பான ஆடம்பர வாழ்விற்கு ஆலப்பட்டு கணவனையும் குழந்தைகளையும் விட்டு விட்டு தாசில்தாரைத் திருமணம் செய்து கொள்கிறாள். தன்னுடைய முடிவு தவறானது என்பதையும் ஒரு காலகட்டத்தில் உணர்கிறாள். மீண்டும் கணவனிடம் தன்னை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்கிறாள். அவர் மறுத்துவிடவே மீண்டும் விக்கிரமன் தம்பியுடனான தன் வாழ்வை தொடர்கிறாள். தன் மகன் பிரபாகரன் நாயருக்கு வேண்டிய உதவிகளைச் செய்கிறாள். மாதவிக் குட்டியிடமும் பழக முற்படுகிறாள். கார்தியாயினியின் திருமண வாழ்வு வெறுமையாகவே இருக்கிறது. வாழ வேண்டுமென்ற நிர்பந்தத்தினால் மட்டுமே வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

விக்கிரமன் தம்பி பெண் மோகம் கொண்டவராக இருக்கிறார். மனைவியை தன் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்திக் கொள்கிறார். பிரபாகரன் நாயரிடம் எவ்வித காழ்ப்புணர்வும் இன்றி பழகுகிறார். மெல்லிய மன உணர்வுகள் ஏதுமில்லாமல் பணம் சம்பாதிப்பதை மட்டுமே குறிக்கோளாக கொண்டு வாழ்ந்த வருகிறார். அனந்தன் நாயரின் சகோரர் மதுசூதனன் நாயர் அரசியல்வாதி. இவர் காதல் கலப்புத் திருமணங்களை ஆதரிப்பவராக, அதனை நடத்தி வைப்பவராக இருக்கிறார்.

அனந்தன் நாயரின் சகோதரி கல்யாணி இளம் வயதிலேயே கணவனை இழந்த கைம்பெண். அவள் பெற்றோர் மறுமணம் செய்து கொள்ள வற்புறுத்துகின்றனர். இருப்பினும் அதனை மறுத்து, மனதை ஆன்மீக நெறியில் செலுத்துகிற கல்யாணி, இதற்கு நேர் எதிர் பாத்திரமாக அனந்தன் நாயரின் அத்தை குஞ்ஞுலட்சுமி விளங்குகிறாள். அன்பான ஆரோக்கியமான, செல்வச் செழிப்புள்ள கணவனை விலக்கிவிட்டு, வேறோரு ஆடவனைத் திருமணம் செய்து கொள்கிறாள்.

அனந்தன் நாயரின் மகன் பிரபாகரன் தாயின் செல்வச் செழிப்பினால் ஈர்க்கப்பட்டு அவளிடம் உறவாடுகின்றான். தன் வாழ்க்கை, தன் முன்னேற்றம் இவற்றை மட்டுமே கருதுகின்ற சுயநலவாதியாக சித்தரிக்கப் பட்டுள்ளாள்.

மாதவிக்குட்டி தந்தையின் உணர்வு களை புரிந்து கொள்பவளாக இருக்கிறாள். தாயின் தவறுகளை அவளிடமே சுட்டிக் காட்டுகிறாள். அவளுடனான உறவை விரும்ப வில்லை. நட்புக்கு முக்கியத்துவம் கொடுத்து தன் உயிர்த் தோழிக்காக, அவள் அண்ணனை மணந்து கொள்ள முற்படுகிறாள்.

முடிவுரை

புதினத்தைப் படிக்கும் வாசகனின் மனக்கண்ணில் திருவனந்தபுரத்தின் எழில், பத்மநாபசுவாமி ஆலய அமைப்பு, இவையாவும் நீக்குமற நிறைகின்றன. திருவனந்தபுரத்தின் ஒவ்வொரு வீதியும் படிப்படியாக இடம்பெற்று கதையோடு ஒன்றி விடுகிறது. மருமக்க தாய அமைப்பில் குடும்ப சொத்துகளை இழந்து வறுமையில் வாழும் நிலை சுட்டப்பட்டுள்ளது. ஜனநாயக அமைப்பில் வேலை இல்லாத் திண்டாட்டம் காட்டப்பட்டுள்ளது. பெண்களுக்கான உரிமைகள் வெளிக் காட்டப்பட்டுள்ளது. நிறை, குறையுடைய பெண்கள் இடம் பெற்றுள்ளுனர். அனந்தன் நாயர் மகாராஜா தாஸனாக இருக்கிறார். அனந்த நாயர் 48 மணி நேரத்தில், இரு நாட்களில் தனது ஐம்பது வருட கால வாழ்வை எண்ணிப் பார்ப்பதாக புதினம் படைக்கப்பட்டுள்ளது.

கணவன், குழந்தை என்றிருக்கும் சராசரி குடும்பப் பெண்ணான கார்த்தியாயினி அவரை விட்டு விலகிச் சென்றதற்கு, அனந்தன் நாயரின் கோழைத்தனம் முக்கிய காரணமாகிறது. திருவிதாங்கூர் மன்னர்கள் பற்றிய செய்திகளும் நாவலில் இடம்பெற்றுள்ளன. ஜனநாயக சமூக அமைப்பில் முடி மன்னர்கள் தங்கள் செல்வாக்கினை இழந்து ஓய்வூதியம் பெறும் நிலைக்கு தள்ளப்படும் நிலையும் நாவலில் காட்டப்பட்டுள்ளது.